# தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்
# Thamizhar Munnetra Kazhagam - London



Est. 1975

# திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி
# Thiruvalluvar Tamil School

## 40வது
## ஆண்டு சிறப்பு மலர்

TMK House – 46A East Avenue, Manor Park, London E12 6SQ
Charity No: 282501

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

With best compliments from

TEAMWORK GB

**40 ஆண்டுகளாக தமிழ்ப் பற்றையும் கல்வியையும் தொய்வின்றி நடத்திவரும் த.மு.க மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளிக்கு எங்கள் சார்பாகவும் எங்கள் நிறுவனத்தின் சார்பாகவும் சிறம் தாழ்ந்த வாழ்த்துக்கள்**

HEAD OFFICE
Teamwork GB Ltd, 603 Olympic House, 28-42 Clements Road, Ilford IG1 1BA
T +44 208 911 9011 F +44 208 911 8292, 0208 911 9011 E info@teamworkgb.org

BRANCH OFFICE
285 Provost Milne Grove, South Queensferry, West Lothian, Edinburgh EH30 9PL
T +44 1313 312 405 E scotland@teamworkgb.org



நம் பிறப்பு ஒரு சம்பவமாக
இருக்கலாம் -
ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக
இருக்கவேண்டும் ...
- டாக்டர் அப்துல்கலாம்
மாணவர்களின் பேராசானுக்கு
எங்கள் மலர் அஞ்சலி



ராஜ்பூபதி

Dr. A. P. J. Abdul Kalam
11th President of India
15 October 1931 – 27 July 2015

&

தமிழ் சகா
உலகத் தமிழர்களின் இதய தளம்

Tamil Saga Limited.
Queens way house, 275-285 High Street
Stratford, London E15 2TF, UK
Registered in England & Wales, No: 882 0062


Head Office (UK)
Tel.+44 (0) 20 8911 9011 Fax. +44 (0) 20 8911 8292
Email. info@tamilsaga.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

தமிழர் முன்னேற்றக்
கழகத்தையும் – திருவள்ளுவர்
தமிழ்ப்பள்ளியையும் தோற்றுவித்து
தன்னலமின்றி அதன்
வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு
இன்று நம் அனைவருடைய
நினைவுகளிலும் உணர்வாய்
வாழுகின்ற சான்றோர்
பெருமக்களுக்கு இந்த சிறப்பு
மலரை காணிக்கை
ஆக்குகின்றோம்!

We dedicate this special souvenir to the esteemed patrons who worked hard for our establishments Thamizhar Munnetra Kazhagam and Thiruvalluvar Tamil School. Those memories remain in our thoughts and live in our hearts forever....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

அன்னை மொழியே
அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை
முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக்
கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த
மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே!
திருக்குறளின் மாண்புகழே
இன்னறும் பாப்பத்தே!
எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே!
மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால்
முடிதாழ வாழ்த்துவமே!
சிந்தாமணிச் சுடரே!
செங்கை செறிவளையே!
தந்த வடமொழிக்கும்
தாயாகி நின்றவளே!
சிந்து மணற்பரப்பில்
சிற்றில் விளையாடி
முந்தை எகுபதியர்
மூத்த சுமேரியத்தார்
செந்திரு நாவில்
சிரித்த இளங்கன்னீ!
சிந்துங் கலைவடிவே!
சீர்த்த கடற்கோளில்
நந்தாக் கதிரொளியே!
நாடகத்துப் பண்ணியலே!
வந்த குடிமரபோர்
வாழ்த்தி வணங்குவமே!

– தனித்தமிழ்ப் பாவலரேறு பெருஞ்சித்திரனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூ.நாகதேவன்

# வாழ்த்துரை

அன்புடையீர்

காலத்தால் பழமை வாய்ந்த இனம், தமிழினம். ஞானத்தால் பெருமை பெற்ற இனமும் தமிழினம். வீரத்தால் பெருமிதம் கொண்ட இனமும் தமிழினம். பண்டைகால தமிழ் மன்னர்கள் கடாரம் சென்றனர் கிரேக்க நாட்டோடும், உரோம நாட்டோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்றெல்லாம் வரலாற்று ஏடுகள் விரித்துப் பேசுகின்றன. சொல்லப்போனால் நினைப்புக்கு எட்டாத காலத்திற்கு முன்னரே தமிழர்கள் தம் எல்லையைத் தாண்டி திக்கெட்டும் சென்று தம் இலட்சினையைப் பொறிப்பதையும் பொன், பொருள் ஈட்டி கொணர்வதையுமே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் மட்டும், சென்று மீள்வதைத் தம் நோக்கமாகக் கொள்ளாமல் செல்லும் இடமெல்லாம் தமிழ் மொழியைப் பரப்பி வேரூன்றச் செய்வதை தம் வாழ்க்கை நோக்கமாக கொண்டிருந்தால் நான் நினைத்துப் பார்க்கின்றேன் இன்று உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் தமிழ் பேசப்பட்டிருக்கும். உலக நாடுகள் அனைத்திலும் தமிழர் நாகரீகம் வேரூன்றியிருக்கும்.

தமிழ் உலக மொழியாக ஆகாமற் போனதற்கும், தமிழர் நாகரீகம் உலகமெல்லாம் பரவாமற் போனதற்கும் யார் காரணம்? நாமே அல்லவா? நம் முன்னோர்களே செய்திருந்தாலும் தவறு தவறுதானே? மாறாக தமிழர் சென்ற இடமெல்லாம் தமிழுக்கு மன்றம். ஆனால் அவர்களின் வீடுகளில் தமிழுக்குப் பஞ்சம். இந்நிலை இலண்டன் வாழ் தமிழர்களின் வழித் தோன்றல்களுக்கு ஏற்படக் கூடாது என்ற நன்னோக்கில் கடல் கடந்து வாழும் நிலையிலும் கன்னித்தமிழை மறவாது இலண்டன் மாநகரில் தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி கண்டு செவ்வனே செயல் படுத்தி வருகிறோம்.

இன்றைக்கு இவ்விரண்டும் 40ஆம் பிறந்தநாள் விழாக் காணும் இவ்வேளையில் கழகத்திலும் பள்ளியிலும் நகமும் சதையும் போல தலைமை ஆசிரியராகவும், தலைவராகவும் செயலாற்றி 38 ஆண்டுகள் உருண்டோடி விட்டது என்று நினைக்கும்போது தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் தொண்டு செய்தால் காலங்கள் செல்வது ஒரு கணத்தில் நடந்து விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது. இருப்பினும் மனிதனின் மனநிலை இன்னும் மாறவே இல்லை என்றே தோன்றுகிறது. நன்றி மறப்பது, உள்ளொன்று வைத்து புறம் பேசுவோர் பெறுகிவிட்டாலும் கழகமும் பள்ளியும் பல மடங்கு வளர்ந்து இமயம் போல் நிற்கிறது.

மேலும் கழகப் பொறுப்பாளர்கள், செயலவை உறுப்பினர்கள், ஆசிரியப் பெருமக்கள் உறுதுணையோடு செவ்வனே செயலாற்றும் நல்லியக்கங்கள் தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் நூற்றாண்டு விழா காணவேண்டுமென விரும்புகிறேன்.

இன்றைய தினம் நாம் உயர்ந்து நிற்பதற்கு காரணம் தமிழ் உணர்வுதான். இவ்வரிசையில் தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி மற்றும் இலண்டன் வாழ் தமிழ் மக்கள், வணிக நிறுவனங்கள் ஆற்றி வரும் பணி மகத்தானது.

இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ் பள்ளி மேலும் வலுப்பெற்று உலகத் தமிழினத்திற்குத் திசைகாட்டியாக விளங்க வேண்டுமென்றும் ஆசைப்படுகிறேன். மென்மேலும் வளரட்டும், வலிமை பெறட்டும். வெளியிடப்படும் 40-ஆம் ஆண்டு மலர் "தமிழா இன உணர்வு கொள்" என்ற உணர்வை உலகத்தமிழர்கள் மத்தியில் ஊட்டுவதாக அமைய என் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"


என்ற குறள் நெறிக்கொப்ப கழகமும் பள்ளியும் வளர்ச்சியுற நிதியும் ஆதரவும் வழங்கிச் சிறப்பித்த அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் என் நன்றியை உள்ளம் மகிழக் கூறிக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

திரு. பூ.நாகதேவன்
தலைவர், தமிழர் முன்னேற்றக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்மையே வெல்லும்



ம.தேவதாசு

அன்பின் இனிய தமிழ் நெஞ்சங்களே வணக்கம்.

கற்கண்டாய் இனித்தது இந்த இனிய செய்தி கேட்டு என் நெஞ்சம்! இன்று நமது கழகம் நாற்பதாம் ஆண்டு அகவையை எட்டியுள்ளதை எண்ணி நமது செயலவை பொங்கல் புத்தாண்டு தமிழர் திருநாளில் விழாவெடுத்து சிறப்பு மலர் வெளியிட இருப்பது அறிந்து நெஞ்சம் களிப்படைகின்றது.

இந்த அரிய சந்தர்ப்பத்தில் கழகத்தவருக்கும், மாணவ மாணவியருக்கும் ஆசிரிய பெருந்தகையினருக்கும் கடந்த நாற்பது ஆண்டுகளில் எண்ணிலடங்கா இடையூறுகளுக்கு இடையில் நமது மரியாதைக்குரிய திருவாட்டி. நபீசா பானு சபருல்லா அவர்கள் முதற்கொண்டு இருபது ஆசிரிய ஆசிரியை பெருமக்கள் வரை அனைவருக்கும் என் நெஞ்சத்தால் நன்றியையும் மகிழ்வையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் கழகம் வெளியிட்ட அனைத்து மலர்களுக்கும் சிறப்புச் செய்திகள் அனுப்பி உதவிய சான்றோர்களுக்கும், அந்த மலர்களை செப்பனிட்டு உதவிய கும்பகோணச் செம்மல் பெரியவர் திருமிகு.வை.கும்பலிங்கம் அவர்களுக்கும் நமது நெஞ்சத்து நன்றியை தெரிவிப்பதோடு, எதிர்கால இளந்தலைமுறையினர் தங்கள் செல்வங்களுக்கு, 'எண்ணும் எழுத்தும் இரு கண்ணாகும்' என்பதனை உணர்ந்து, நம் பள்ளியை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"**

- பாரதிதாசன்

என்று கூறி முற்றிடுகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க ஒன்றுபட்ட நம் தமிழினம் !

இவ்வண்ணம்

**திரு. ம.தேவதாசு சாமிமுத்து**

**த.மு.க பாதுகாப்பு மன்றத் தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BUCKINGHAM PALACE

3rd November, 2015

Dear Mr. Anbalakan,

The Queen has asked me to thank you for your letter of 22nd October telling Her Majesty that 2016 marks the fortieth anniversary of the founding of the *TMK Thiruvalluvar Tamil School*.

It was very thoughtful of you to invite The Queen to attend the anniversary celebrations, which will be held in conjunction with the annual *Pongal Festival* on 16th January, next year. I should explain, however, that Her Majesty's diary is planned many months in advance and has already been finalised for that time. It will not, therefore, be possible for The Queen to attend.

I am sorry to send you a disappointing reply. Nevertheless, I am to thank you for taking the time and trouble to write as you did and Her Majesty sends her good wishes to you, the students and staff and to everyone concerned for a most enjoyable and memorable fortieth anniversary celebration.

Yours sincerely,

Sonia Bonici

Mrs. Sonia Bonici
Senior Correspondence Officer

Mr. Rathinam Anbalakan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thamizhar Munnetra Kazhagam & Thiruvalluvar Tamil School



Alli Kumar

*Thiruvalluvar Tamil School and the parent organisation Thamizhar Munnetra Kazhagam (TMK) have been part of my life since the age of 5. I was one of the first students of the school. We started with humble beginnings in a room with a lovely lady who we simply called "Banu akka". She kindly volunteered a few hours of her time to teach us our mother tongue. 40 years on we are now one of the most established Tamil schools in Europe, with over 250 students and GCE O/L and A level exam results which would make any Head Teacher in a main stream school, glow with pride!*

*There are many individuals who were co-founders of TMK and have been instrumental in the success of the school who have sadly passed away and not able to celebrate the 40 year anniversary with us including Mr Krishnamoorthy, Mr Veera Rathinam, and my own dear father, Mr Ramasamy. It is their dedication and patriotism to our Tamil culture and language that has led us to this wonderful achievement.*

*Thanks must also go to all our Committee members and teachers, both past and present who have played an important role in the advancement of our school, without their sincerity, dedication and support we would not have been able to achieve the accomplishments that we are able to showcase today.*

*Growing up in a country where I have very few blood relatives, the members, fellow students and teachers have become like a second family to me, so not only has Thiruvalluvar Tamil School taught me to read, write and speak in my mother tongue it has also given me a sense of belonging and a family who I can rely on to help me in times of need but also to celebrate in times of joy...for that I am extremely grateful and truly thankful.*

*I wish the school many many more years of success and have no doubt that it will continue to grow from strength to strength!*

**Alli Kumar**
***Ex-student & Vice President of TMK***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இர. அன்பழகன்

# வள்ளுவனார் பெயர் விளங்கச் செய்வோம் தொண்டே!

நாற்பது ஆண்டுகளை முறையாகக் கடந்து இன்று மிகவும் கம்பீரமாக நடைபோடும் நமது கழகமும்-பள்ளியும் இன்று தனது 40வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றன. இந்த மகிழ்ச்சி தரும் நேரத்தில் கழகம்-பள்ளியின் மாபெரும் வெற்றியை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அன்னைத் தமிழை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் நமது திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் ஆசிரியர்கள். மாணவர்களுக்கு தமிழை எளிதான முறையில் கற்பிக்கும் திறன் கொண்ட இவர்களின் பணி பாராட்டுக்குரியது.

இந்த நாட்டில் பிறந்த பிள்ளைகள் தாய்மொழி தமிழையும் - தமிழ் கலாச்சாரத்தையும் கற்று பின்பற்ற வேண்டும் என்ற காரணத்தால் துவங்கப்பட்ட தமிழ்ப் பள்ளியில் இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழ் மொழியில் எழுதவும்-பேசவும் கற்றுக்கொண்டனர் என்பதை அறிந்து பெற்றோர்களும், ஆசிரியர்களும், கழக உறுப்பினர்களும் மெத்த மகிழ்வுறுகிறோம். இன்று தமிழ்ப் பள்ளி தொடங்கிய நோக்கம் நிறைவேறி வெற்றிப் பாதையை நோக்கி நடைபோடுவது ஆசிரியர்களின் தன்னலமற்ற பணிக்கும், கழக உறுப்பினர்களின் உழைப்புக்கும் கிடைத்த பெருமையாகும்.

கழகம் - பள்ளி வளர்ச்சிக்கு வங்கிவழி அள்ளி நிதிதந்து காக்கும் தமிழ் நெஞ்சங்களுக்கு நன்றி பாராட்டி உங்களின் ஒத்துழைப்பாலும் - ஊக்கத்தாலும் த.மு.க - தமிழ்ப்பள்ளி இன்னும் சிறப்பாகவும்-பொலிவுடனும் வளர்ந்தோங்கி பெருமையுற தமிழ்ப் பெருமக்களின் பேராதரவினை தொடர்ந்து நல்கிட வேண்டுகிறோம்.

நாற்பதாம் ஆண்டை முன்னிட்டு நறுமணம் கூட்டும் சிறப்பு மலருக்கு நமைவாழ்த்திச் செய்தி தந்த அறிவார்ந்த பெருமக்கள் அனைவருக்கும் நன்றி.

மனநிறை மலர்தனை மனமுவந்து தந்தோம்!
மலர் தரும் மணம் பெற்று மகிழ்வீர் நன்றே!

**இர. அன்பழகன்**
செயலாளர்
தமிழர் முன்னேற்றக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 DOWNING STREET
LONDON SW1A 2AA
www.gov.uk/Number10

From The Direct Communications Unit

15 July 2015

Dear Mr Nagathevan

The Prime Minister has asked me to thank you for your letter of 7 July inviting him to the Thiruvalluvar Tamil School's 40th anniversary celebrations.

The Prime Minister really appreciates you taking the time and trouble to invite him to your event. However, owing to the enormous pressures on his diary, he will sadly be unable to attend. It is with much regret that I must therefore send his apologies, but I know he would want me to wish you a successful event.

With best wishes.

Yours sincerely

Correspondence Officer

Mr P Nagathevan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. கருணாநிதி
தலைவர், தி.மு.க.

இல்லம் : 28115225
அலுவலகம் : 24320280

12–9–2015

**வாழ்த்துச் செய்தி.**

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டன் மாநகரில் வாழும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து 1975ஆம் ஆண்டு முதல் நடத்திவரும் தமிழர் முன்னேற்றக் கழகமும், அதன் சார்பில் நடைபெற்று வரும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியும் தனது நாற்பதாம் ஆண்டு நிறைவு விழாவினை 16–1–2016 அன்று நடத்தவிருப்பது அறிந்தும், அதன் தொடர்பாக சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட விருப்பது அறிந்தும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தாயகத்திலே வாழும் தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாவிடிலும், பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழும் தமிழர்கள் ஒற்றுமையாக இருந்து தமிழர் முன்னேற்றக் கழகத்தையும், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியையும் சிறப்பாக நடத்தி வருவது பாராட்டுக்குரியது. அதன் நாற்பதாண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெறவும், சிறப்பு மலர் நல்ல பல கருத்துகளைத் தாங்கி வெளி வரவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

(மு. கருணாநிதி.)

பெறுநர் :

திரு. பூ. நாகதேவன்,
தலைவர்,
தமிழர் முன்னேற்றக் கழகம்,
இலண்டன்.

இல்லம் : 15, 4வது தெரு, கோபாலபுரம், சென்னை – 600 086.
அலுவலகம் : "அண்ணா அறிவாலயம்", 367–369, அண்ணா சாலை, சென்னை – 600 018.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க தமிழ்!**
**வளர்க தமிழர் முன்னேற்றக் கழகம்!**
**ஓங்குக திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி !**



அ.அன்பரசு

1975ல் கிழக்கு இலண்டனில் நம்முன்னோர் பலர் முயற்சியால் தமிழர் முன்னேற்றக் கழகம் பிறந்து, இன்றைய தினம் நாற்பது ஆண்டுகளை கடந்து நிற்கின்றது. வெளி நாட்டில் குடியேறிய நாம் நம் தாய்மொழி தமிழையும், தமிழ் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மறக்கக்கூடாத வகையிலே திருவள்ளுவர் பெயர்தனிலே பள்ளியும் தொடங்கினார்கள். பல உறுப்பினர்களின் ஆர்வம் மற்றும் மக்கள் ஈடுபாடு கழகத்தை மேலும் ஊக்கப்படுத்தி நாற்பது ஆண்டுகள் நகரத் தூண்டியது.

பொதுமக்களின் நிதி உதவி, த.மு.க. உறுப்பினர்கள் மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் ஆசிரிய பெருமக்களின் தொண்டாற்றலின் மூலம் தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி நாற்பது ஆண்டுகளில் ஓங்கி நிற்கிறது.

'வாழையடி வாழையாக' திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியில் பயின்ற சில மாணவர்கள் படித்தோம் முடித்தோம் என்று இல்லாமல் நாம் பயின்ற கல்வியையும் கலையையும் புதியதலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வகையில் நடனம், தமிழ் கற்பிப்பது மற்றும் பொது சேவைகளில் தங்களை கழகத்துடனும் பள்ளியுடனும் இணைத்து செயலாற்றுகிறார்கள்.

நமது கழக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், கழகம், பள்ளி மூலம் தமது சேவைகளை முடங்காமல் சமுக சேவையிலும் ஆர்வம் உடையவர்கள் என்ற வகையில் பல வகையான உணவு தயாரித்து அதை விற்று, முகத்தில் வண்ணம் தீட்டுதல், மற்றும் போட்டிகள் நடத்தி அதன் மூலம் தமிழ்நாடு, இலங்கை, ஆகிய நாடுகளில் உள்ள தொண்டு அமைப்புகளுக்கும், உலகில் இயற்கையின் சீற்றத்தால் அவதிப்படுவோருக்கும், மற்றும் இலண்டனில் உள்ள குழந்தைகளுக்கான Great Ormond Street Hospital நிறுவனத்துக்கும் நிதி திரட்டி வழங்கியதில் பெருமை அடைகிறார்கள்.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் முன் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் மறைந்தாலும், அவர் எழுதிய திருக்குறள், எக்கால மனிதர்களுக்கும் ஓர் வழிகாட்டியாக இருந்து தமிழர்களின் புகழை உலகளவில் ஓங்கச் செய்கிறது. இது போல திருவள்ளுவர் பெயர்தனில் இயங்கும் நம் பள்ளி இலண்டன் மாநகரிலே இன்னும் நாற்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு ஓர் வழிகாட்டியாக திகழ்ந்து, கம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பது என் பேராசை. இதற்கு பொது மக்களாகிய நீங்கள் எப்பொழுதும் போல் தொடர்ந்து இனி வருங்காலத்தில் கழகத்திற்கும் பள்ளிக்கும் ஒத்துழைப்பை வழங்கி பிள்ளைகளை திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்பி பயனடைய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திரண்டு வாரீர்! ஆதரவு தாரீர்!**

அ.அன்பரசு
**பொருளாளர்**
**தமிழர் முன்னேற்றக் கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.மு.க திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி



திருமதி.த.மனோகரன்

எமது தமிழ்ப்பள்ளி நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது என்பதை எண்ணி நாம் பெருமகிழ்வு எய்தும் நேரமிது. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் மொழிப்பற்றும், தமிழ் அறிவும் மிக்க அன்பர்களால் தமிழர் முன்னேற்றக் கழகம் உருவாக்கப்பட்டது. அவர்கள் தம் பிள்ளைகள் தமிழை மறவாது கற்றுத் தமிழர்களாக வாழ வேண்டும் என்ற பெருநோக்குடன் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியை ஆரம்பித்தனர்.

தாய்மொழியாகிய தமிழைப் பிள்ளைகள் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும் என்ற குறிக்கோளில் எமது பள்ளி வெற்றிக் கொண்டுள்ளது என்பதைக் கடந்த கால வரலாறு உறுதிப்படுத்துகின்றது. பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண பிரிவிலும் உயர்தரப் பிரிவிலும் (G.C.E O/L, G.CE A/L & G.C.E A/S) தேர்ச்சிப் பெற்று மிக மகிழ்வுடன் வெளியேறியுள்ளனர். பெற்றோர் மனதிலும் பூரண திருப்தியைக் காண முடிகிறது.

மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களாக வரவேண்டும் என்ற நோக்குடனும் எமது பள்ளி செயல்பட்டு வருகிறது. தமிழ்ப்பள்ளி ஆரம்பித்த காலத்திலிருந்தே திருக்குறள் போட்டி, பேச்சுப் போட்டி வைத்து அதில் எல்லா மாணவர்களும் பங்குபெற வாய்ப்பு அளிக்கிறது. இது மாணவர்களுக்கு தன்னம்பிக்கையையும், துணிவையும் கொடுக்கிறது. அதனால் அவர்கள் தொடர்ந்து தாம் கற்கும் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்ச் சங்க விழாக்களில் தலைமை தாங்குபவர்களாகவும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஆற்றலுள்ளவர்களாகவும் விளங்குவதைக் காணமுடிகிறது.

திருக்குறள் வாழ்வுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி என்ற வகையில் மாணவர்களுக்குத் திருக்குறள் கற்பிக்கப்படுகிறது. இந்தப்பணியை திருமதி.ந.பாலசிங்கம் செய்து வருகிறார். எங்கள் பள்ளி நடன ஆசிரியை திருமதி தர்சிகா பிரதீபன் (நுண்கலைமாணி, யாழ் பல்கலைக்கழகம்) மாணவர்களுக்குத் திறமையாக நடனம் பயிற்றுவித்து சிறப்பாக அரங்கேற்றி வருகிறார். மாணவர்களை உற்சாகப் படுத்தும் வகையில் திருமதி.ச.சந்திரகோபால், திருமதி.க.பாலசுப்பிரமணியம் பல வருடங்களுக்கு முன்பே திரையிசைப் பாடல்களுக்கு நடனம் பழக்க ஆரம்பித்தனர். அதைத் தொடர்ந்து ஏனைய ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் நடனங்ளைப் பழக்கி பொங்கல் விழா, பரிசளிப்பு விழா நிகழ்வுகளைச் சிறப்பிக்கின்றனர்.

ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து தளர்வின்றி நடாத்துவது என்பது இலகுவானதல்ல. தமிழர் முன்னேற்றக் கழகம் சிறப்பாக இயங்கவும் தமிழ்ப்பள்ளி நன்கு நடை பெறவும் பலரது தன்னலமற்ற கடினமான உழைப்பும் மனப்பூர்வமான ஒத்துழைப்புமே காரணமாகும். த.மு.கழகமும் தமிழ்ப்பள்ளியும் தழைத்தோங்கத் தமிழன்னை நல்லாசிகளை வேண்டி நிற்போமாக.

வளர்க தமிழ் ! வாழ்க தமிழினம் !!

திருமதி.த.மனோகரன்
**தலைமை ஆசிரியை**
**திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAYOR OF LONDON

**R Anbalakan**
General Secretary
Thamizhar Munnetra School
tmktamilschool@gmail.com

**Our ref:** MGLA130815-2408

**Date:** 11 SEP 2015

Dear R Anbalakan

Thank you for your further email and attached letter of 12 August and for your request to write a formal letter of celebration for your Annual publication.

I am sorry that I am unable to attend your celebrations in 2016, but I am happy to provide the following the message:

"Congratulations on the 40th anniversary of Thiruvalluvar Tamil School. Over the last forty years the school has grown from strength to strength, and I wish you all the best with your upcoming celebration event, and hope the school's success continues."

Yours sincerely

**Boris Johnson**
Mayor of London

City Hall, London, SE1 2AA • mayor@london.gov.uk • london.gov.uk • 020 7983 4000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திராவிடர் கழகம்

தலைமை நிலையம்: பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007.
தமிழ்நாடு, இந்தியா. • தொலைப்பேசி : 91-44-26618161/62/63 • தொலைப்பதிவி: 91-44-26618866
• மின் அஞ்சல்: dkheadquarters@gmail.com • இணையதளம் : www.dravidarkazhagam.org

நிறுவனத் தலைவர்
**தந்தை பெரியார்**

தலைவர்
**கி.வீரமணி,** எம்.ஏ.,பி.எல்.,

நாள்: 8.8.2015

பெறுநர்

உயர்திரு **பூ. நாகதேவன்** அவர்கள்
தலைவர்,
தமிழர் முன்னேற்றக் கழகம்,
திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி,
இலண்டன்

அன்புடையீர்!

வணக்கம். இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி, சிறப்பு மலர் வெளியிடுவது குறித்த தங்களின் வேண்டுகோள் கடிதம் கிடைத்தது – மிக்க மகிழ்ச்சி – நன்றி.

ஓர் அமைப்பு 40 ஆண்டுகள் நடைபெறுவது என்பது சாதாரணமானதல்ல. இதற்காகவே இதன் நிருவாகிகளுக்குப் பாராட்டு விழா நடத்தப்பட வேண்டும் என்பது எமது கருத்தாகும்.

அந்த நிறுவனமும் ஆங்கிலத்தை தாய் மொழியாகக் கொண்ட ஒரு நாட்டில் தமிழ் மாணவர்களுக்கு அவர்களின் தாய் மொழியான தமிழினை நினைஊட்டி – தமிழ் பயிற்றுவிப்பது பலப்பட பாராட்டத் தகுந்ததாகும்.

தமிழ்நாட்டில் வாழும் பிள்ளைகளுக்கே தமிழில் பெயர் சூட்டப்படாமலும், தமிழில் படிக்க வைக்காமலும் இருக்கும் நிலைப்பாடு.

தமிழ்நாட்டிலேயே தமிழ்ப்பேச மறுக்கும் ஒரு அவல நிலை அரற்றிக் கொண்டிருக்கும் நிலையில், இங்கிலாந்து நாட்டில் தமிழ்க் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்குத் தமிழ் பயிற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணமும் – அது வெறும் எண்ணமாக மட்டுமல்லாமல், ஆக்க ரீதியாகச் செயல்படும் வெற்றியும் பெருமைக்குரிய பெரும் பணியாகும்

உலகத் தமிழர்களே வியந்து பாராட்ட வேண்டிய தங்கள் அமைப்பின் தொண்டறத்தை வெகுவாகப் பாராட்டுகிறோம். நிருவாகிகளைப் போற்றுகிறோம்.

சிறப்பு மலர் மலர்ந்து மணம் வீசட்டும் – வாழ்த்துகள்!

தங்கள் அன்புள்ள,

**(கி. வீரமணி)**
தலைவர், திராவிடர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THE RT. HON. STEPHEN TIMMS MP**
**House of Commons**
**London SW1A 0AA**
**Tel: 020 7219 4000**
**Fax: 020 7219 2949**

***Labour Member of Parliament for East Ham***

Mr P Nagathevan
President, TMK Thiruvalluvar Tamil School
TMK House
46a East Avenue
Manor Park
London E12 6SQ

19 October 2015

Dear Mr Nagathevan

Thank you for your letter of 7 July 2015, inviting me to the celebration on 16 January for the fortieth anniversary of the Tamil School. I shall be able to attend and look forward to doing so.

I would like to pass my congratulations on the $40^{th}$ anniversary to you, and to everyone connected with the school. From its modest beginnings, it has grown to a remarkable size. 300 children study up to A-level standard, and many achieve excellent results. This reflects great credit in particular on all the volunteers who have supported it throughout four decades.

The school plays an important part in our community. Tamil young people are doing well at school, and preparing to make a great contribution in Britain in the years ahead. The Tamil School has helped many to achieve confidence in their roots and in their identity, so boosting their prospects of doing well in their studies at mainstream school and at college too.

I wish the School all the best for the future. I look forward to an enjoyable celebration of the $40^{th}$ anniversary at the Pongal festival at East Ham Town Hall.

Yours sincerely,

Stephen Timms

STEPHEN TIMMS

*Electronic mail: stephen@stephentimms.org.uk*
*Web: http://www.stephentimms.org.uk/*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு இர.அன்பழகன்
பொதுச் செயலாளர்
தமிழர் முன்னேற்றக் கழகம்
இலண்டன்

19.11.2015

அன்புடையீர்!
வணக்கம்.

இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் இயக்கி வரும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி 40 ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடவிருப்பது குறித்து மகிழ்ச்சி.
அடுத்த தலைமுறைக்குத் தமிழ் மொழியை அடைகாத்து வைப்பதில்தான் தமிழின் வளர்ச்சி இருக்கிறது.
தமிழ்க் குழந்தைகள் தமிழ் கற்றால்தான் வருங்காலத் தமிழ்ச் சமூகத்திற்குத் தமிழர் என்ற அடையாளம் கிட்டும்.
அதுவும் புலம் பெயர் நாடுகளின் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் கற்காவிட்டால் தமிழர் என்ற அடையாளம் இழப்பர்.
அந்தவகையில் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி நாற்பதாண்டு காலமாக இலண்டன் நகரில் தமிழ் கற்றுக் கொடுக்கும் பணியைச் செவ்வனே ஆற்றி வருவது குறித்து சிந்தை களிக்கிறேன்.
ஒருமித்த தமிழுணர்வோடும் அர்ப்பணிப்போடும் பள்ளியை நடத்திவரும் தமிழர் முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் தமிழ்ப் பாட முறைகள் உலகின் இன்றைய சூழலுக்கு குழந்தைகள் கற்பதற்கு ஏற்றதாக எளிமையாகத் திகழ விழைகிறேன்.
உயிரெழுத்துக்களைக் கற்கப் போதிய கால அவகாசமும் மெய்யெழுத்துக்களைக் கற்கப் போதிய கால அவகாசமும் அளித்துக் குழந்தைகளுக்குத் தமிழ் எழுத்துக்கள் குறித்த அச்சத்தைப் போக்க வேண்டும்.
பார்த்தல்-கேட்டல்-வாசித்தல்-எழுதுதல் என்ற முறைகளில் தமிழ்க்கல்வியை நவீனப்படுத்திக் கற்றலுக்கு இன்பமான வழிகளில் குழந்தைகளை ஈர்க்கச் செய்தல் வேண்டும்.
தமிழ் என்பது அமுது எனில், அதைக் கற்பிக்கும் முறை நஞ்சாக இருந்துவிடக் கூடாது.
தமிழின் பெருமையையும் தேவையையும் பயனையும் மாணவர்களுக்குப் புரியும்வண்ணம் புலப்படுத்த வேண்டும்.
மொழி என்பது இனத்தின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகிய விழுமியங்களை கட்டிக்காக்கும் கருவூலம் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.
தமிழ்க் குடும்பங்களின் இல்லத்தில் உரையாடும் மொழியாகத் தமிழே வாழ்வில் இரண்டறக் கலக்க வேண்டும்.
அனைத்து நிகழ்வுகளிலும் தமிழ் மொழி கலை பண்பாடு குறித்த விழிப்புணர்வோடு தமிழர்கள் பயணப்படவேண்டும்.
தமிழ் கற்கும் பிள்ளைகளுக்கு என் வாழ்த்துக்கள்.
அவர்கள் தமிழ் கற்க ஆற்றுப்படுத்தி ஆர்வமூட்டும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என் பாராட்டுக்கள்.
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் முயற்சிகள் சிறக்கட்டும்
மாணவர்களின் எதிர்காலம் தழைக்கட்டும்.

வாழ்த்துக்களோடு...

வைரமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்
# மு.மேத்தா

தமிழ்ப் பேராசிரியர்
தலைவர் : தமிழகக் கவிஞர் பேரவை

## வாழ்த்துரை

மேலை நாடுகளில் மேலான ஒரு நாடு – இங்கிலாந்து. ஒரு காலத்தில் - சந்திரனும் சூரியனும் எப்போதும் மறையாத சாம்ராஜ்யம்! உலகமே அதன் சட்டைப் பைக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.
இங்கிலாந்தின் நெற்றியில் – தீட்டி வைத்த திலகமாய்த் திகழ்வதே இலண்டன் மா நகரம்!
அதன் கிழக்குப் பகுதி – மனோர் பார்க்.
அங்கு - இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட ஏறுநடைத் தமிழர்கள் வீறுகொண்டு ஒலித்த எழுச்சி முரசுதான் – **தமிழர் முன்னேற்றக் கழகம்!**
முரசின் ஓசையாய் முழங்கத் தொடங்கியதுதான் – இன்று அங்கு தலைநிமிர்ந்து நிற்கும் தமிழ்ப் பள்ளி! திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி!

தாய்த் தமிழகத்தில் கூட – தமிழ்ப் பள்ளிகள் தடுமாறுகின்றன சில – ஆங்கிலப் பள்ளிகளாய் உருமாறுகின்றன. இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மா நகரத்தில் – ஐந்து மாணவர்களோடு – 1975ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு தமிழாலயம் இன்று – முந்நூறு மாணவர்கள் தமிழ் படிக்கும் முத்தமிழ் கோபுரமாய் உயர்ந்து நிற்கிறது. திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியை திசையெலாம் போற்றுகிறது இன்று. தடந்தோள் மறவர்களாம் தமிழர் முன்னேற்றக் கழகத்தினரின் தணியா உணர்வும் தளரா உழைப்புமே – நாற்பது ஆண்டுகளில் தமிழ்ப் பள்ளி இவ்வாறு தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணமாகும்.

தமிழர் முன்னேற்றக் கழகத் தலைவர் நற்றமிழ்க்கோ பூ. நாகதேவன் அவர்களுக்கும், செயலாளர் சிலட்டூர் செம்மல் இர. அன்பழகன் அவர்களுக்கும் அவர்களது தகைசால் பணிக்காகத் தமிழகத்தின் சார்பில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாற்பதாம் நிறைவு விழா – நிறைவான விழாவாய் நிகழ,
வெளிவரும் சிறப்பு மலர் – வெற்றிதரும்
மலராய்த் திகழ.

திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின்
திருத்தொண்டர்களுக்கும்
தமிழர் முன்னேற்றக் கழகத்தின் தடந்தோள்
வீரர்க்கும் என் இதயங்கனிந்த இனிய
வாழ்த்துக்கள்



அன்புடன்,

1. இராஜராஜன தெரு.
கலாசேதரா காலனி.
பெசனட் நகா.
சென்னை 600 090
தொலை 044 2491 9867
அலை 94443 83232

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் பேரமைப்பு

6, தெற்கு மதகுத் தெரு, **(South Lock Street)**

(கோட்டூர்புரம் தொடர்வண்டி நிலையம் எதிரில்) கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலை பேசி : 91-44-2264 0421, தொலை நகலி : 91-44-2264 0451.

E-mail : thamiz@thenseide.com


தலைவர்: பழ. நெடுமாறன்

நாள் : 01-08-2015

திரு. இர. அன்பழகன்,
பொதுச்செயலாளர்
தமிழர் முன்னேற்றக் கழகம்
இலண்டன்.

அன்புள்ள நண்பர்அவர்களுக்கு,

வணக்கம். இலண்டன் மாநகரில் முதன்முதல் தொடங்கப்பட்ட தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியும் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவிருப்பதை அறிய மிகவும் மகிழ்கிறேன்.

1984ஆம் ஆண்டு தமிழர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் கலந்துகொள்ளுமாறு என்னை அழைத்துப் பேச வைத்த நண்பர் திரு. வீரசிங்கம் அவர்கள் ஆவார். இந்நிகழ்ச்சி இன்னமும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

உலகின் மூத்த மொழியும், சீரிளமைத்திறன் குன்றாத மொழியுமான நம்முடைய தமிழ் மொழியை நம்முடைய குழந்தைகளுக்குக் கற்றுத்தரும் பணி சிறப்புமிக்கதாகும். அந்நிய மண்ணில் வாழும் நமது குழந்தைகளுக்கு நமது மொழி, கலை, இசை போன்றவற்றை கற்றுத் தருவதின் மூலம் மட்டுமே நமது பண்பாட்டை அழியாமல் நிலை நிறுத்த முடியும். இந்த சீரிய தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிவரும் தமிழர் முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் நிர்வாகிகளுக்கும், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் எனது பாராட்டும் வாழ்த்துக்களும் உரியனவாகுக.

மிக்க நன்றி!

அன்புள்ள,

**(பழ. நெடுமாறன்)**

தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தன்

தலைவர்
இந்திய-ஈழத் தமிழர் நட்புறவு மையம்

உலக நாடுகள் அனைத்திற்கும் நடுவமாக திகழ்வது இலண்டன் மாநகரம். 40 ஆண்டுகளுக்கு முன்பு இலண்டனில் தமிழர்கள் நிறுவிய தமிழர் முன்னேற்றக் கழகமும் – திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளிக் கூடமும் நீண்ட நெடுங்காலமாக தமிழ்மொழி காத்தலிலும், தமிழ்க்கலை வளர்ப்பதிலும் தொடர்ந்து ஓய்வின்றி ஆற்றிவரும் அரும் பணியை நான் அறிவேன்.

இக்கழகத்தினர் நடத்திய நிகழ்வொன்றில் 35 ஆண்டுகளுக்கு முன்பு கலந்து கொண்ட நினைவு என் நெஞ்சில் ஆழப் பதிந்திருக்கிறது.

எந்த அமைப்பையும் தொடங்குவது எளிதானது தொடர்ந்து நடத்துவது அரிதானது. இலண்டன் தமிழர் முனேற்றக் கழகம் தொடர்ந்து நாற்பது ஆண்டும் ஓய்வில்லாமல் இயங்கி வருவதை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

தமிழ்மொழியின் தாயகமான தமிழ் நாட்டில் ஆங்கிலப் பள்ளிகள் தமிழை அழித்துக்கொண்டு இருக்கின்றன, ஆங்கில மொழியின் தாயகமான இங்கிலாந்தில் நீங்கள் தமிழ்ப் பள்ளி நிறுவி தமிழை காத்து நிற்கிறீர்கள்.

உங்களைப் போன்ற தமிழ் உணர்வாளர்களால் தான் தமிழ் மொழி உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கிறது

உலகெங்கும் பரவி வாழும் தமிழக – ஈழத் தமிழர்கள் அனைவருக்கும் உங்கள் நாற்பது ஆண்டு கால தமிழ்ப்பணி உந்துதலாக அமையும் என்பதில் அய்யமில்லை.
சிறப்பான உங்கள் தமிழ்ப்பணி தொடர என் சிந்தை நிறைந்த வாழ்த்துக்களை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காசி ஆனந்தன்

பெறுநர்
திரு. இர அன்பழகன்
செயலாளர்
தமிழர் முன்னேற்றக் கழகம்
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி
இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சுப. வீரபாண்டியன்



பொதுச்செயலாளர்
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

அன்புடையீர்,

வணக்கம்.தங்களின் கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் கேட்கும் வகையில் தாங்கள் தொண்டாற்றி வருவது பெருமகிழ்வைத் தருகிறது. ஆங்கில மண்ணில் தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் பள்ளியும் 40 ஆண்டுகளாக நிலைபெற்றிருப்பது உலகத் தமிழர் அனைவருக்கும் பெருமையாகும்.

ஓசையின்றித் தாங்கள் செய்துவரும் தமிழ்த் தொண்டிற்குத் தலை வணங்குகின்றேன். உங்கள் பணி என்றும் தொடர என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழர்களின் நாவெல்லாம் தமிழ் பேசட்டும். நாம் கூடுகின்ற இடமெல்லாம் குறள் ஒலிக்கட்டும்!

அன்புடன்
**சுப. வீரபாண்டியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கோட்டை
**க. அன்பழகன்**
சட்டமன்ற உறுப்பினர், கும்பகோணம்.

நாள் 19. 09. 15

ஒரு கோவில் திறந்தால் இந்துக்களுக்கு மகிழ்ச்சி !
ஒரு சர்ச் திறந்தால் கிருஸ்துவர்களுக்கு மகிழ்ச்சி !
ஒரு மசூதி திறந்தால் இஸ்லாமியர்களுக்கு மகிழ்ச்சி !
ஒரு பள்ளி திறந்தால் அனைவருக்கும் மகிழ்ச்சி !

அதுவும் ஓர் ஆங்கில நாட்டில் தமிழ்ப் பள்ளி செயல்படுவதோ ! மகிழ்ச்சியிலும், மகிழ்ச்சி ! அதிலும் 1330 குறட்பாக்களை படைத்து அகிலத்திற்கே அறிவூட்டிய திருவள்ளுவரின் பெயரால், ஒரு பள்ளி அமைந்து, 40 ஆண்டுகள் நிறைவுபெறுவது மட்டற்ற மகிழ்ச்சி ஆகும்.

அறிவு அற்றம் காக்கும் கருவி, அறிவுடையார் எல்லாம் உடையார் என்றெல்லாம் அறிவைப் பற்றி ஆழ்ந்து எழுதியவர் வள்ளுவர். அவரின் பெயரால் ஒரு பள்ளி இயங்குவது மிகவும் சிறப்பு !

அதுபோல தமிழர்கள் அனைவரும் இணைந்து தமிழர் முன்னேற்றக் கழகம் அமைத்திருப்பதும் சிறப்பாக செயல்படுவதும், மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது !

அயல்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஐரோப்பிய குழுமம் தான் இந்த த மு க !
தேம்ஸ் நதிக்கரை தமிழர் முன்னேற்றக் கழகத்தை,
காவிரிக்கரை தமிழ்ச் சங்கம் வாழ்த்துகிறது ! பாராட்டுகிறது !

தன்னம்பிக்கை உள்ளவனுக்கு கடவுளே தேவையில்லை என்றார் தந்தை பெரியார் ! தன்னம்பிக்கை இல்லாதவன் முன்பு கடவுளே நேரில் வந்தாலும் ஒன்றும் ஆகப்போவது இல்லை ! என்று அழகாகச் சொன்னார் விவேகானந்தர். ஆக தன்னம்பிக்கையும், தன்மானமும், பகுத்தறிவும் உள்ள மாணவர்கள் இங்கே உருவாக வேண்டும் !

வலியோடு போராடினால் தான் !
ஒரு பெண் தாயாக முடியும் !
இருளோடு போராடினால் தான் !
புழு வண்ணத்துப் பூச்சியாக முடியும் !
மண்ணோடு போராடினால் தான் !
விதை மரமாக முடியும் !
வாழ்க்கையோடு போராடினால் தான் !
நீ வரலாறு படைக்க முடியும் !

என்பதை !

ஒவ்வொரு மாணவரும் உணர்ந்து
வரலாறு படிப்பதை விட !
வரலாறு படைக்க வேண்டும் என்ற
உணர்வுடன் செயல்பட வேண்டும் !
என்று நான் வாழ்த்துகின்றேன் !

மேலும் உங்கள் அமைப்பும், உங்கள் பள்ளியும், உங்கள் மொழிப் பற்றும் மேலும் வளர்ச்சியும், சிறப்பும் கண்டிட நான் மனமார வாழ்த்துகின்றேன்.

தங்கள்

சாக்கோட்டை – 612 401. கும்பகோணம்.
☎ அலுவலகம் : 0435 - 2421250, வீடு : 0435 - 2414838, செல் : 94433 83283

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன்

பெறுநர்
திரு. இர அன்பழகன்
செயலாளர்
தமிழர் முன்னேற்றக் கழகம்

வள்ளுவத்தில் எல்லாப் பொருளும் உள என்பர். அவர்தம் பெயரால் இலண்டன் மாநகரில் தமிழர் முன்னேற்றக் கழகத்தினரால் தொடங்கப்பட்ட தமிழ்ப்பள்ளி நாற்பதாவது நிறைவு விழா கொண்டாடும் பொன்னான தருணமிது.

மொழிகள் அதன் தன்மைக்கேற்ப சில சிறப்புகளை கொண்டுள்ளன. கிரேக்க மொழி 'தத்துவ மொழி' என சிறப்பித்து கூறப்படுகிறது. அதேபோல லத்தீன், 'சட்டத்தின் மொழி' என்றும், இத்தாலி, 'காதலின் மொழி' என்றும் பிரெஞ்சு, 'தூதின் மொழி' என்றும், ஆங்கிலம், 'வணிகத்தின் மொழி' என்றும் கூறுவர்.

இதுபோல தமிழ்மொழியின் சிறப்பு என்ன தெரியுமா? 'இரக்கத்தின் மொழி' என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சிறப்புக்குரிய தொடர் ஐ.நா. சபை கட்டிடத்தின் முகப்பில் பொறிக்கப்பட்டுள்ளது என்றால் அதன் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

தமிழர்களின் தாய்மொழியான தமிழுக்குச் சிறப்புச் சேர்ப்பது (ழ) ழகரம் ஆகும். இவ்வொலிச் சிறப்பு, உலக மொழிகளில் ஒரு சிலவற்றுக்கே, உண்டு. தென்னிந்தியாவில் தமிழ்நாட்டிலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலும் தமிழ்மொழி மிகுதியாகப் பேசப்படுகிறது. உலகில் 8 கோடிக்கும் மேற்பட்டவர்கள் தமிழ் பேசுகிறார்கள். தாய்மொழியாக அதிகம் பேர் பேசும் மொழிப்பட்டியலில் தமிழுக்கு 18வது இடம் கிடைக்கிறது. 2,500 ஆண்டுகள் பழமை வாய்ந்த தொல்காப்பியம் மொழி இலக்கணத்தையும், வாழ்வியலையும் படம்பிடித்து காட்டுகின்றது. 2,000 ஆண்டு பழமையான திருக்குறள் உலகிற்கே வாழ்வியலை வலியுறுத்தி உலகப் பொதுமறையாகத் திகழ்கின்றது.

இத்தகைய சிறப்புமிக்கத் தமிழ் மொழியை, நம் தாய்மொழியை, அந்நிய தேசத்தில் வாழ்கின்ற நம் சொந்தங்கள் அவர்தம் இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்ற மிக முக்கியமான பணியைச் செவ்வனே செய்து வருகின்ற தமிழர் முன்னேற்றக் கழகத்திற்கு என் வாழ்த்துக்கள்.

இப்பள்ளிக்கு சில வருடங்கள் முன் நான் சென்று மாணவர்களோடு உரையாடி, தமிழின்பம் சுவைத்து வந்த அந்த இனிய நினைவுகள் நெஞ்சில் நிழலாட, பள்ளி மென்மேலும் கிளைத்துப் பெருகவும், தமிழர் முன்னேற்றக் கழகத்தின் இந்த அரும்பணி ஒளிர்ந்து தொடரவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்,
தமிழச்சி தங்கபாண்டியன்

'தங்கபாண்டியன் இல்லம்'
8 முதல் பிரதான சாலை, ராஜா நகர், நீலாங்கரை, சென்னை 600115, தமிழ்நாடு, இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜி.கே.மணி,** மு.ச.ம.உ.
தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி

அலுவலகம் :
63, நாட்டுமுத்துநாயக்கன் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 044-25363334.

இல்லம் :
கருமலைக்கூடல்
மேட்டூர்அணை R.S., சேலம் மாவட்டம்
தொலைபேசி : 04298-222979
கைபேசி : 9443041543

---

## வாழ்த்துச் செய்தி

நாடாளுமன்றங்களின் தாய் எனப் போற்றப்படும் இங்கிலாந்து நாட்டில் இலண்டன் மாநகரின் கிழக்கு பகுதி மனோர் பார்க்கில் தாய்மொழி பற்றுகொண்ட நண்பர்கள் தமிழ்மக்களின் பேராதரவோடு 1975 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட ஐரோப்பிய முதல் குழுமம்தான் தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் என்ற பெருமையை உணர்கின்ற நேரத்தில் அதன் 40ஆம் ஆண்டு நிறைவு விழா மிகுந்த எழுச்சியோடு கொண்டாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இதை அறிந்த நான் பேருவகைக்கொள்கிறேன்.

நமது தமிழ்ப்பள்ளி அய்ந்து மாணவர்களைக் கொண்டு துவங்கப்பட்டு ஏராளமானோருக்கு தாய்மொழி தமிழ் கற்றுக்கொடுத்து இன்று 300 மாணவர்களைக் கொண்டு வெகு சிறப்பாக நடைபெறுவது அறிந்து அகம் மகிழ்கிறேன்.

நமது "தேனினும் இனிய நற்செந்தமிழ் மொழியே" உலகில் உள்ள 3000-க்கும் மேற்பட்ட மொழிகளில் தலைசிறந்த, சிறப்புக்குறிய, முதன்மையாக உள்ள கிரேக்கம், இலத்தின், சீனம் உள்ளிட்ட ஆறு மொழிகளுள் ஒன்றாக தமிழ் இருப்பது உலகப் பெருமையாகும்.நாம் வாழும் இவ்வுலகில் இது தமிழுக்கு பெருமை, தமிழ் இனத்திற்க்கு பெருமை. நமது தமிழ் தொன்மையானதும், இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டதுமான சிறப்புக்குறிய மொழியாகும். அதனால் தான் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என மகாகவி பாரதி பாடினார். இவ்வாறு உயர்தனிச் செம்மொழியான நமது தாய்மொழி தமிழை உலகின் மிகச்சிறந்த இலண்டன் மாநகரிலும் பயிற்றுவிப்பது தலைசிறந்த சேவையாக, ஈடுயிணையில்லாத தாய்மொழிப்பற்றாக அரும்பணியாற்றுகிற தமிழ் நெஞ்சங்களை இதயங்கனிந்து வாழ்த்துகிறேன். அகம் மகிழ்ந்து பாராட்டுகிறேன்.

தமிழர் முன்னேற்றக் கழகம் மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி நிர்வாகிகள் நிறைவேற்றி வரும் தமிழ்ப்பணி சிறக்கவும், மென்மேலும் வளரவும், அதனால் பல்லாயிரக்கணக்கானோர் பயன்பெறவும் மனதார வாழ்த்துகிறேன். செயற்கரிய தமிழ்ச்சேவை ஆற்றிவரும் நிர்வாகிகள் அனைவரும் மகிழ்ச்சியோடு, மனநிறைவோடு, எல்லா வளமும் பெற்று, குடும்ப நலமோடு நீடுழி வாழ வாழ்த்துகிறேன்

வாழ்த்துக்கள்
நன்றி

பெறுதல்
திருமிகு இர. அன்பழகன் அவர்கள்,
மற்றும்
நிர்வாகிகள்,
தமிழர் முன்னேற்றக் கழகம்
திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி,
இலண்டன் மாநகரம்,
இங்கிலாந்து

இவண்,
அன்பு மறவாத,
17/9/2015
**ஜி. கே. மணி**
தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி,
63, நாட்டுமுத்து நாயக்கன் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.
தொலைபேசி எண்: 044 25363334

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

ஏ4-ஏ, முதல் நிழற்சாலை, நூறடிச் சாலை, அசோக் நகர், சென்னை - 600 083.

**தொல். திருமாவளவன்**
தலைவர்


வாழ்த்துக்கள்...

நாள் :

ஆங்கிலேயர் மண்ணில் வசித்துவரும் தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தி இலண்டன் மாநகர், மனோர்பார்க் என்னுமிடத்தில், தமிழர் முன்னேற்றக் கழகம் மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி) ஆகியவை 1975 இல் நிறுவப்பட்டுள்ளது என்பதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன், அக்கழகம் மற்றும் தமிழ்ப் பள்ளி ஆகியவற்றின் நாற்பதாம் ஆண்டு விழா நிறைவுற — இருப்பதையும் அறிந்து பெருமைப் படுகிறேன்.

ஒரு அமைப்பையும் கல்வி நிறுவனத்தையும் உருவாக்கி அவற்றை வெற்றிகரமாக நடத்துவது அவ்வளவு எளிதான செயல் ஆகாது. தாய்த் தமிழ் உணர்வும் தமிழின உணர்வும் பாதுகாக்கப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கத்துடன் கடந்த நாற்பது ஆண்டு -களாக கழகத்தையும் பள்ளியையும் சிறப்பாக நடத்திவரும் — அவற்றின் பொறுப்பாளர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

ஐரோப்பிய கலாச்சாரம் மேலோங்கியுள்ள ஒரு தேசத்தில் தமிழர் பண்பாட்டைப் பாதுகாப்பது என்பது ஒரு மகத்தான முயற்சியாகும். ஐந்து மாணவர்களை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்ட அப்பள்ளியில் இன்று முன்னூறு மாணவர்கள் கல்வி பெறுகின்றனர் என்பதுவும் அளப்பரிய சாதனையாகும். இச்சாதனை மென்மேலும் பெருக வேண்டுமெனவும் நாற்பதாமாண்டு நிறைவு விழா வெற்றிகரமாக நடந்தேற வேண்டுமெனவும் மனமார வாழ்த்துகிறேன்..

மகிழ்வுடன்,

13/7/2015

(திருமாவளவன்)

தொலைபேசி : 044-23700088 • மின்னஞ்சல் : thirumaa@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Newham London

Dear Mr. Anbalagan General Secretary TMK-UK

Greetings from Newham Council and Congratulations on your 40th Anniversary.

It's an honour and pleasure for me to send good will message for your 40th Anniversary. I am proud to be associated with Thamizhar Munnetra Kazhagam and Thiruvalluvar Tamil School for the past 30 years. 40 years ago the Tamils who Lived in Newham London had a long term vision and they founded this Great Tamil School for the benefit of our future Generation. World wide there are many Tamil Schools doing a wonderful work but your School was the Very First one with in Europe. TMK in London had a unique role to play promoting the Tamil Identity, Language, Culture, Art, Music, Dance above all our Values and Heritage to our Children and to the wider Community in United Kingdom. 40 years of dedicated service to the Tamil Children, Parents and Community is Warmly Welcomed and Appreciated.

Their was a time we were known as British Tamils, German Tamils, French Tamils. Danish Tamils with in Europe but now we are proudly known as a Hard working, Intelligent, Educated, Intellectual, Culturally Rich, very well Organised, Law-abiding, Integrated "European Tamils".

I have personally enjoyed the hospitality, welcome, respect, trust and Love from your organisation. Principal, Presidents and Members made me feel like a home. As the first Tamil Councillor in East London Elected 5 Times in Newham for the past 17 years its give me a wonderful opportunity to serve the wider community in many ways and share our Values and Culture. TMK and the Tamil School in London is an inspiring institution which helped many of our Children and Young People also become a Role Model School with in Europe with Strengths and Capacity.

TMK is the role model organisation with in Europe for the newly arrived Tamils from Singapore, Malaysia, India, Sri Lanka, South Africa and Mauritius. Your School gave opportunity to Learn Tamil, support and create new initiatives with in Europe. I am personally grateful to your Ex and Current Head Teachers, Presidents, Committee Members, Volunteers and Community Members those who have Contributed to Tamil School in many ways to be a Number One School in UK, especially in the time of need such as Tsunami and Helping Sri Lankan War Victims, your contributions made huge impact in their life's. TMK's warm welcome and honouring our distinguished guest from abroad made them feel home in London.

We as a multicultural diverse borough very proud about our communities, we celebrate their cultural and religious festivals. We also recognise their contributions to our Newham and to United Kingdom Socially, Economically, Politically and Culturally. The Council Moto is "We progress with People" I am proud TMK and Tamil School Progressed in many ways and Integrated with in United Kingdom as a visible Organisations..

On your 40th anniversary we all are Proud and Delighted to join your Celebrations. We pray that your Tamil School and the Community will grow with many Achievements, You are a real Asset and Blessing, wish you celebrate the Centenary in style in the future. May the good LORD will protect, lead, guide and bless you all in every thing what ever you do. Let the good spirit of Love, Joy and Peace be with you all for ever.

Best Wishes with Love

**Cllr. D. Paul Sathianesan**

a place where people choose to
live, work & stay

London Borough of Newham
Newham Dockside
1000 Dockside Road
London E16 2QU

T +44 (0) 20 8430 2000
W www.newham.gov.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் தமிழ்ச் சங்கம்
# The London Tamil Sangam

Tamil Community & Education Centre | Enriching Community Life. Driven by Value

Estd. 1960

London Tamil Sangam வணக்கம்

இலண்டன்
15/08/2015
திருவள்ளுவர் ஆண்டு 2046

தலைவர் திரு நாகதேவன் அவர்களுக்கு வணக்கம்

தங்களின் கடிதம் கிடைக்கப்பெற்று மகிழ்ந்தேன். இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத்தால் சிறப்பாக நடைப்பெற்று வரும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி நாற்பது ஆண்டுகள் நிறைவுப்பெருவது அறிந்து மகிழ்ச்சியாக உள்ளது .

உலகப்பொதுமறை கண்ட தமிழன்
வாழ்க்கை நெறியை வகுத்துரைத்த மேதை
வள்ளுவன் பெயரால் பள்ளிக்கண்டு
செம்மொழி தமிழைத் தழைக்க
புலம் பெயர் தமிழினம் தாய் மொழிக் கற்க
வருங்கால சந்ததியினர் தமிழ்க் கூற
முன்னேற்றக் கழகம் கண்ட தமிழ்ப் பள்ளி
மேலும் செழுமைப் பெற
பொன்விழா கண்ட இலண்டன் தமிழ்ச்சங்கம்
தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுப் பள்ளியுடன்
இணைந்து பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்
வாழ்க தமிழ்! வளர்க தமிழர்ப் பண்பாடு
தமிழால் இணைவோம் தமிழ்மொழி செழிக்கச்செய்வோம்
மகிழ்வுடன்

N K சாமி
தலைவர் இலண்டன் தமிழ்ச்சங்கம்

Funding Bodies

Newham

Lloyds TSB Foundation

369 High Street North, Manor Park, London E12 6PG
T: 020 8471 7672, F: 020 8470 1013, E: admin@ltsuk.org
Registered Charity No.: 1097724
Registered in England Company No.: 657373
www.ltsuk.org

The London Tamil Sangam is a company incorporated with limited liability, with authority to omit "Limited" from its name.

தமிழனென்று சொல், தலை நிமிர்ந்து நில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OM MURUGA

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF
TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407
www.londonsrimurugan.org

**BOARD OF TRUSTEES**
Mrs. L. Sivajoti (Chairman)
Mr. V.E. Palaniappan
Mr. G. Ramadass
Mr. R.C.A. Anpananthar
Mr. S. Narashiman

**PRESIDENT**
Mr. S. Sampathkumar

**VICE PRESIDENTS**
Mrs. S. Krishnasamy
Mr. R. Renganathan

**SECRETARY**
Mr. P. Dakshinamoorthy

**ASST. SECRETARY**
Mr. R. Panneerselvam

**TREASURER**
Mrs. P. Raguvaran

**ASST. TREASURER**
Mr. G. Sathiamoorthy

**EXECUTIVE COMMITTEE**
Mr. A. Gopal
Mrs. M. Gopalnathan
Mrs. Malliga Ramadoss
Mr. I. Muthu
Mr. R. Narayanan
Mr. G. Poominathan
Mrs. R. Ramachandran
Mr. Ravi Ramasamy
Mrs. R. Sekaran
Mr. M Sivam
Mr. R. Sukumaran
Miss. V. Thambyrajah
Mr. M. Thenappan
Mr. P. Uthayakumar

Mr P Nagadevan
President
TMK House
46A East Ave
London E12 6SQ

31.08.2015

அன்புடையீர் வணக்கம்,

வரலாற்றுச் சிறப்பு மிக்க இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரில் தன்மானமும், இன உணர்வும், மொழிப்பற்றும் நிறைந்த தமிழர்களின் மேன்மைக்காக அயராது தொண்டாற்றி வரும் தமிழர் முன்னேற்றக் கழகம் சமுதாயச் சேவையில் 40 ஆண்டுகள் நிறைவு செய்வது அறிந்து பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

தொன்மை வாய்ந்த செந்தமிழின் பெருமைகளை உலகறியச்செய்து தமிழர்களின் கலை கலாசார சிறப்பினை மேலை நாட்டோரும் மதிக்கும் வண்ணம் நடைமுறைப்படுத்தி தொண்டாற்றி வருவது தமிழர் முன்னேற்றக் கழகமாகும்.

திருவள்ளுவர் தமிழ் பாடசாலை அமைத்து தமிழை முறையாக கற்பித்து வருவதோடு முத்தமிழாகிற இயல், இசை, நாடகமாகிற நடனம் இவற்றையும் பயிற்றுவித்து தமிழினம் மேம்படப் பாடுபட்டு வருவது தமிழர் முன்னேற்றக் கழகம். பெரியோர்களின் வழிகாட்டுதல், அறிஞர்களின் ஆலோசனை, கலைஞர்களின் ஒத்துழைப்பு இவற்றோடு தமிழ்மக்களின் நல்லாதரவையும் பெற்று சீரிய முறையில் பணியாற்றிவரும் தமிழர் முன்னேற்றக் கழகம் தனது சேவையில் 40 ஆண்டுகள் நிறைவு செய்வது மிகச்சிறந்த சாதனையாகும்.

தன்னலம் கருதாது பாடுபட்டு வரும் தமிழர் முன்னேற்றக் கழக தலைவர் முதலான அனைத்து பெரியோர்களின் தமிழர் மேன்மை கொள்கைகள் தடையின்றி நிறைவேறவும் தமிழர் முன்னேற்ற கழகத்தின் தொண்டுகள் இன்னும் விரிவடைந்து தமிழ் மக்களை மேம்படுத்தி சிறப்புறவும் வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்

சி.சம்பத்குமார்
தலைவர்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாகசபை சார்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

om muruga

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO : 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON E12 6AF
TEL : 020 8478 8433 FAX : 020 8478 0407
www.londonsrimurugan.org

Mr P Nagadevan
President
TMK House
46A East Ave
London E12 6SQ

03.09.2015

அன்புடையீர் வணக்கம்,

உலக வரலாற்றிலே உயர்ந்து நின்று வாழ்க்கை முறையிலும், வழுவாத நெறியிலும், அறநெறி தவறாத ஆன்மீக வழியிலும், கல்வியில் அறிஞனாய், கவின்மிகு கவிஞனாய், செல்வத்தில் செழித்தவனாய், வீரத்தில் விளைநிலமாய் விளங்கும் தமிழினம் இன்று உலகெங்கும் பரந்து வாழ்ந்து வருகிறது.

வரலாற்றிலும், மேன்மைமிகு நாகரீகத்திலும், வந்தாரை வாழவைக்கும் மனித நேயத்திலும் சிறந்துவிளங்கும் இங்கிலாந்து நாட்டில், இலண்டன் மாநகரின் கிழக்கே மனோர் பார்கில் தமிழ் மொழிக்கும், திராவிட கலை கலாசாரத்திற்கும் பெரும் தொண்டாற்றி வருகிறது தமிழர் முன்னேற்றக் கழகம்.

அறம், பொருள், இன்பம் இவற்றை அலசி ஆராய்ந்து தேன் சொட்டும் திருக்குறள் பாக்களாக வடித்துத்தந்த வள்ளுவனின் பெயர் தாங்கி நடைபெறும் திருவள்ளுவர் தமிழ் பாடசாலை மூலமாக ஏராளமான குழந்தைகள் செந்தமிழ் கற்று சிறந்து விளங்குகின்றனர்.

தமிழ் மக்கள் அனைவரையும் தாயைப் போல் அரவணைத்து முத்தமிழ்ப் பாலூட்டி இயல், இசை நாடகத்தின் சிறப்பை கற்பித்து செந்தமிழ் சேவை புரிந்து வரும் தமிழர் முன்னேற்றக் கழகம் தனது தொண்டு வரலாற்றில் 40 ஆண்டு நிறைவு செய்வது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். இச்சேவை தொடர்ந்திட, எம்மக்கள் மகிழ்ந்திட, கலைகள் வளர்ந்திட, கலாசாரம் பெருகிட, என்றென்றும் தமிழினமும் உலக மக்களும் செழித்திட தமிழர் முன்னேற்றக் கழக அன்பர்களின் சீரிய சேவைகள் சிறந்து விளங்கிட வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

இங்ஙனம்

ஆசிகளுடன்

கயிலை இரா நாகநாதசிவம் குருக்கள் — கயிலை க சோமாஸ்கந்த குருக்கள்
கயிலை கி சங்கர குருக்கள் — சிவஸ்ரீ க கணேச குருக்கள்
சிவஸ்ரீ சு செல்லப்பா குருக்கள் — சிவஸ்ரீ கி கல்யாணசுந்தர குருக்கள்
சிவஸ்ரீ மு சந்தானசிவம் குருக்கள் — சிவஸ்ரீ செ கௌரிசங்கர குருக்கள்
சிவஸ்ரீ சு கணபதிசுந்தர குருக்கள் — சிவஸ்ரீ ஸ்ரீகண்டன் குருக்கள்
சிவஸ்ரீ மணிசுந்தரம் குருக்கள் — சிவஸ்ரீ மு ஜனார்த்தனசர்மாகுருக்கள்

திரு து ஆனந்தசேகர் மேலாளர்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LAKSHMI NARAYANA TRUST

### London Sri Mahalakshmi Temple

Charity Reg. No: 292677
272 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8552 5082 Fax: 020 8552 5315
Web: www.srimahalakshmitemple.net
e.mail : info@srimahalakshmitemple.net

By Serving the devotees
we serve God

**Patron**
Sri P.R. Ramasubrahmaneya Rajha

**Senior Advisor**
Mr. S.N Perumal

**Board of Trustees**
**Senior Trustee**
Mr. V.N.Alagirisamy

**President**
Dr Radhakrishnan V

**Vice-President**
Mr. Thayalasamy S

**Chairman**
Mr. A Rengamannar

**Vice-Chairman**
Mr. K Sreenivasan
Mr. Subburam S

**General Secretary**
Mr. K. Sivarupan

**Assistant Secretary**
Mr. Sethuraman S

**Treasurer**
Mr. S. Vijayakumar

**Assistant Treasurer**
Mr. Navaneethakrishnan R

**Public Relations Officers**
Mr. S.Seetharaman

**Cultural Secretary**
Ms. Kumari Selliappan

**Temple Office Manager**
Mr. R. Mohanaprakas

**Communications**
Mr. J.Thiyagarajan
Mr. R. Kannan
Mr. M. Sudarsanan


ஆகஸ்ட் -2015

திரு. பூ நாகதேவன்
தலைவர்
தமிழர் முன்னேற்றக் கழகம் - திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி

தமிழர் முன்னேற்றக் கழகம் நடத்தும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் நாற்பதாவது நிறைவு விழாவை வெகு சிறப்பாக கொண்டாட இருக்கும் தமிழர் முன்னேற்றக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும் மென்மேலும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி சிறந்து விளங்கிட வேண்டுமென எமது ஆலயத்தின் ஸ்ரீ மகாலட்சுமி நாராயணரை வேண்டி வணங்குகிறோம்.

தம்+இல் என தமிழை பிரிக்கலாம். ஒருவருடைய ஒலி மொழி. அதை தமிழ் உலகிற்கு உணர்த்தி நிற்கிறது. ஒரு மொழி இனத்தின் அடையாளம். ஒரு மொழி பண்பாட்டின் அடையாளம். ஒரு மொழி கலாச்சாரத்தின் அடையாளம். உலகில் எத்தனையோ மொழிகள் இருப்பினும் தமிழுக்கு என்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என சொன்னால் மிகையாகாது. தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் தமிழர் வரலாற்றினை பறைசாற்றிக்கொண்டு இருக்கின்றன. பல மொழிகள் அறிந்த பாரதியார் யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்றார். அது மிகவும் உண்மை. வேற்று மொழியினர் தமிழ் மொழி கற்கும்போது உணர்ந்து இருக்கிறார்கள். தமிழ் என்றால் தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், ஔவையார் நிச்சயம் நினைவுக்கு வர வேண்டும். இந்த தமிழ்ப் பள்ளியின் பெயர் கூட திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி என திருவள்ளுவருக்கு புகழாரம் சூட்டி இருப்பது போற்றத்தக்கது.

மேலும் ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமணர்கள் தமிழை வளர்க்க பெரும்பாடு பட்டார்கள். பிற மொழிகளின் ஆதிக்கத்தில் இருந்து தமிழை மீட்டுக்கொண்டு வந்ததில் இவர்களின் பங்கு அளப்பரியது. உலகில் எங்கு சென்று வாழ்ந்தாலும் எப்படி இந்து சமயக் கோவில்கள் இருக்கிறதோ அதைப் போல தமிழ் வளர்க்கும் பள்ளிகள் மிகவும் அவசியம். தமிழ் மொழியின் அவசியம் உணர்ந்து மொழியை இங்கு வரும் மக்கள் மறக்காது கற்றுக்கொள்ள வேண்டும் என முன்னரே திட்டமிட்டு திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியைத் தொடங்கிய தமிழர் முன்னேற்றக் கழக நிர்வாகிகள் மிகவும் போற்றப்பட வேண்டியவர்கள், நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர்கள். அதோடு மட்டுமில்லாமல் ஐந்து மாணவர்களுடன் தொடங்கி தொடர்ந்து தொய்வின்றி பல மாணவர்களை தமிழில் புலமைப் பெற செய்து இருக்கும் ஆசிரியர்கள் ஆர்வத்துடன் தமது பிள்ளைகளை பள்ளியில் சேர்த்த பெற்றோர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



இச்சமயத்தில் ஒரு விசயத்தைப் பகிர்ந்து கொள்கிறோம். எமது புதிய ஆலய நிர்மாணப்பணி அனைத்து பக்தர்கள் உதவியால் வெகுசிறப்பாக கடந்த ஒரு வருடமாக நடந்து வருகிறது. இந்த புதிய ஆலய நிர்மாணப்பணி தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெறவும் இந்த புதிய ஆலய நிர்மாணப்பணியில் தங்கள் ஒவ்வொருவரது பங்களிப்பு இருக்க வேண்டும் என அனைத்து ஆலய நிர்வாகிகள், பக்தர்கள் ஆதரவை வேண்டி உலக மக்கள் மற்றும் அனைவரும் அமைதியுடன் எல்லா வளமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

V. Radhakrishnan
Dr Radhakrishnan V
President
Lakshmi Narayana Trust

LAKSHMI NARAYANA TRUST
London Sri Mahalakshmi Temple
Charity Reg. No: 292677
272 High Street North, Manor Park, London E12 6SA, UK
Tel: +44 20 8552 5082 Fax: +44 20 8552 5315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
# Saiva Munnetta Sangam (UK)
*"Community Service Through Saiva (Hindu) Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel / Fax: 020 8514 4732
**Registered Charity No: 292085**
www.saivamunnettasangam.com E.mail: smsukinfo@gmail.com

*38th Year Management Committee*

*Vice-Patrons*
Dr. (Mrs) Indra Siva-yoham
Dr. V Balasegaram
Mr R Pathmanathan

*President & Trustee*
Mr Sathasivam Anandathiyagar

*Vice-President & Trustee*
Mr D Rabindramohan

*Hony. General Secretary & Trustee*
Mr M Indusegaran

*Hony. Treasurer & Trustee*
Mr S Niranjan

*Hony. Deputy Gen. Secretary & Trustee*
Mr V R Loganathan

*Trustees*
Mr S Balasingam
Mr W Nagaratnam
Mr S R Pasupathy
Mr V C Vamananthan

*Building Project Secretary*
Mr G Parameswaran

*Examination Secretary*
Mr V Jegendirabose

*Membership Secretary*
Mr C Sithamparapillai

*Overseas Project Secretary*
Mr V R Ramanathan

*Publication Secretary*
Mr V Sivanarutchelvar

*Religious Secretary*
Mr M Ravindradas

*Social Service Secretary*
Mrs P Sabaratnam

*School Secretary*
Mr S Kugarajah

*Assistant Treasurers*
Mr S Thamboo

*Committee Members*
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mrs Vasantha Mahadevan
Mr S.Ratnarasa
Mrs Sri Ponnuthurai
Mr S Subramaniyam
Mr M Yasotharan

19.08.2015

## பண்புடைய உங்களால் தழைக்கும் தமிழுலகம்

**தமிழர் முன்னேற்றக் கழகம்~ இலண்டன்**
**திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி**

"பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"~ திருக்குறள், பண்புடைமை

அன்பும் தமிழ் மணமும் ஒன்றாகி சேவை உள்ளம் கொண்ட தொண்டர்களே, தமிழ் அமிழ்தம் ஊட்டும் தமிழ்த்தாய் தெரிந்தெடுத்த வழிகாட்டிகளே வணக்கம்.

பிழைக்க வந்த இடத்தில் பின்னால் பிழை சொல்ல வழி செய்யாமல் தமிழ் தழைக்க முதலடி எடுத்து வைத்த மாண்பை நெஞ்சில் நிறுத்தி வார்த்தைகளை எழுதுகிறோம். பொருள் தேடுவதுடன் பிறருக்கு உதவும் அருளும் தேடிவைக்க வேண்டும் என்ற தொலை நோக்குடன் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே நீங்கள் செயற்பட்டமைக்கு மனிதப் பண்பு இன்று உங்களுக்கு தலை தாழ்த்தி, கைகளை நெஞ்சில் குவித்து கண்கள் நன்றி தெரிவிக்கிறது. செயற்கரிய செய்கைகளின் பலனை அனுபவிப்பவர்கள் அதன் பின்னணியில் உள்ள உயர்ந்த எண்ணங்களையும், கடின உழைப்பையும் தெரிந்து நன்றி மறவாமல் இருப்பது மனிதப் பண்பின் அடையாளமாகும். ஆதலால் உங்கள் அற்புதமான பணிக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

ஐந்து மாணவர்களுடன் தொடங்கிய தமிழ்ப் பள்ளி பல மடங்கு வளர்ந்து பலருக்கும் பலனளிக்கும் கலைக் கூடமாய், கல்விச் சாலையாய் நிமிர்ந்து நிற்பது பெரும் சாதனையே. இதற்கு உழைத்த பலரையும் நாம் நினைந்து பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். உங்களின் வளர்ச்சியின் போது உழைத்து ஆனால் இன்று உயிருடன் இல்லாமல் உணர்வாய் நிற்கும் அருமை நண்பர்களையும் அவர்களின் அரும் செயல்களையும் நாம் எண்ணி அவர்களையும் போற்றுவோமாக.

நாற்பது ஆண்டுகளைக் கொண்டாட நீங்கள் எடுக்க இருக்கும் விழா உங்களின் சேவையை உணர்த்துவதுடன் தமிழ் மொழியை வளர்க்க பல வழிகளிலும் துணை செய்யும் என்பது எங்களின் எதிர்பார்ப்பாகும். தமிழர் முன்னேற்றக் கழகத்திற்கு அதன் வெற்றியை சிறப்பாகக் கொண்டாட எல்லாத் தகைமைகளும் இருக்கின்றன எனத் தமிழ் உலகம் பேசுகிறது. ஆதலால் வெற்றி விழாவில் திளைத்துக் களித்திடுவீர்! விழாவின் வெளிப்பாடாய் திசை எல்லாம் தமிழ் பரப்ப திட்டங்கள் வகுத்து திரண்டு சேர்ந்து பணி செய்ய இறையருள் துணை இருக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு
ஆட்சிக் குழுவின் சார்பில்

சதாசிவம் ஆனந்ததியாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெறுநர்:
த.மு.க திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

அன்புடையீர்,
திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் நாற்பது ஆண்டுகள் நிறைவையொட்டி விழா எடுப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி கடந்த நாற்பது ஆண்டுகளாக ஈஸ்ட்காம் நகரையும் அதனை சூழ்ந்துள்ள பல நகரங்களில் வசிக்கும் தமிழ்ச் சிறார்களுக்கு தமிழையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் கற்பித்து வருவது மிகவும் பாரட்டத்தக்கது. இத்தமிழ்ப்பள்ளியின் 40 ஆண்டு கால வளர்ச்சிக்கு அயராது உழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், த.மு.க நிர்வாக உறுப்பினர்கள், பொது நல விரும்பிகள் அனைவரும் பாராட்டப் பட வேண்டியவர்கள்.

திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி ஒரு பலமான கல்வி நிறுவனமாக அமைந்து தமிழ்ச் சிறார்களுக்கு தொடர்ந்தும் பல ஆண்டுகள் பணியாற்றும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. இத்தமிழ்ப்பள்ளி தனது சேவையை இன்னும் பல ஆண்டுகளுக்கு சிறப்புற வழங்கி, பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

நன்றி
வ.யோகராசா
ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்
திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலண்டன் வெண் வீர.முருகு.வீரசிங்கம்


தோற்றுநர் .. தமிழர் முன்னேற்றக் கழகம் மற்றும் திருவள்ளுவர்
.. தமிழ்ப்பள்ளி, இலண்டன்

இயக்குநர் .. வள்ளலார் வேளாண் பசுமைப் பண்ணை,
விளார் சாலை, தஞ்சை.

தொடக்குநர் .. ஆக்ஸ்போர்டு பப்ளிக் மெட்ரிக் மேனிலைப்பள்ளி,
விளார்சாலை, தஞ்சை.

"வெண்டாக்கோட்டய இல்லம்'', 86, ஆறாவது தெரு, அருளானந்தம்மாள் நகர்,
தஞ்சாவூர்–613 007, தமிழ்நாடு, பேசி எண்.97881 79524.


### வாழ்த்து

கடந்த 40 ஆண்டுகட்கு முன் மேற்காணும் இரு நிறுவனங்களையும் தோற்றுவித்தவர்களில் நானும் ஒருவன் ஆவேன். அப்போது நான் இலண்டனில் வாழ்ந்து வந்தேன். எனக்குப் பக்கத்துணையாக இருந்து செயல்பட்டவர்கள் குடந்தையைச் சேர்ந்த தமிழ்மணி அரங்க.முருகையன், கண்ணந்தகுடியைச் சேர்ந்த அ.கி.மூர்த்தி, சிலட்டூரைச் சேர்ந்த வீரரத்தினம், இலண்டனைச் சேர்ந்த மா.தேவதாஸ், நாமக்கல்லைச் சேர்ந்த இராமசாமி முதலியோர் ஆவர்.

நான் இலண்டனில் இருந்தபோது குடந்தை வய்.மு.கும்பலிங்கன் அவர்களின் துணையோடு பல மலர்களை புத்தகங்களை வெளியிட்டும், திராவிடர் கழகத் தலைவர் திரு.கி.வீரமணி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஈரோடு பன்மொழிப்புலவர் திரு.மு.ச.சிவம், மதுரை தேவசகாயம், தஞ்சை க.மா.குப்புசாமி, புகைப்பட கலைஞர் சுபாசுந்தரம் முதலியவர்களை அழைத்தும் விழாக்கள் நடத்தி செயல்பட்டதை இன்றும் எண்ணி நன்றி உணர்வோடு மகிழ்ச்சி அடைகிறேன்.

"மூத்தவர்கள் ஓய்வெடுக்க வேண்டும்; இளங்கன்றுகளே திமிர வேண்டும்'' என்ற முனைவர் பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்கள் பாடல் வரிகட்கு ஏற்ப, இளையவர்கள் பொறுப்பேற்று கழகத்தையும், பள்ளியையும் நடத்தி வருகிறார்கள் என்பதும், தற்போது 40ஆம் ஆண்டு நிறைவு விழா மற்றும் தமிழர் திருநாள் எனும் பொங்கல்விழா இரண்டையும் இணைத்துக் கொண்டாடுகிறார்கள் என்பதும், விழாத் தொடர்பாக மலர் ஒன்று வெளியிடுகிறார்கள் என்பதும் என் மனத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

மலர் சிறக்கவும், விழாச் சிறக்கவும் என் மன நிறைவான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை
17.09.2015

அன்பன்

**வெண்.வீரமுருகு வீரசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World Tamil
Organisation (UK)
Towards community integration
Registered Charity No. 1116624

Vestry Hall, London Road
Mitcham CR4 3UD, United Kingdom
E: admin@worldtamilorg.co.uk
www.worldtamilorg.co.uk

இலண்டன்,
மன்மத புரட்டாசி 22,
(அக்டோபர் 8, 2015)

# வாழ்த்துரை

பெறுநர்,

**உயர் திரு.** நாகதேவன் **தலைவர்,**,
தமிழர் முன்னேற்றக் கழகம்,
திருவள்ளுவர் தமிழ் கல்வி நிலையம்.

வணக்கம்.

ஒருத் தலைமுறை ஆண்டு காணும், தமிழர் முன்னேற்றக் கழகத்திற்கும், திருவள்ளுவர் கல்வி நிலையத்திற்கும் உலகத் தமிழ்ச் சங்கத்தின் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**கோடி நாவு கூடி பேச, இனிமை நிறைந்தோர் தமிழ் மொழி,**
**பார் உருவாகுமுன்னே, தோன்றியதோர் தமிழ் மொழி,**
**கலாச்சார மாறுதல்களில், என்றும் மாறிடா தமிழ் மொழி,**
**தாயன்பை உலகமெங்கும், என்றும் போதிக்கும் தமிழ் மொழி,**
**நாம் பேசும் தமிழ் மொழி என்று மார் தட்டி பெருமை கொள்வோம்.**

நுண்மதியும், விடாமுயற்சியும், கடின உழைப்பும் தானே தமிழன் இன்று கணினி உலகிலும், பொருளாதார உலகிலும் தனக்கெனத் தனி இடத்தைப் பிடிப்பதற்குக் காரணம். இந்த மாபெரும் குணங்கள் நம்மில் இன்று நேற்று தொடங்கியதா? தமிழின் இலக்கணத்தை விஞ்ஞானப்பூர்வமாகக் கட்டமைத்த தொல்காப்பியரும், உலகுக்கேப் பொதுமறை தந்த வள்ளுவரும், "யாதும் ஊரே! யாவரும் கேளீர்!" என்று உலக மக்களை எல்லாம் ஆரத்தழுவி அன்பு கொண்ட கணியன் பூங்குன்றனாரும் தன்னகத்தே கொண்டிருந்த குணங்களல்லவா இவை.

**வீழ்ந்து விடவில்லை நாம், வாழ்ந்து வரலாறு படைக்கின்றோம்,**
**தோற்று விடவில்லை நாம், வெற்றிக் கொடி நாட்டுகின்றோம்,**
**பின்னிட்டு ஓடவில்லை நாம், சிகரங்களில் நிற்கின்றோம்,**
**குறைகளை பேசவில்லை நாம், வாழ்க்கை நெறிகளை பேசுகின்றோம்,**
**பகைகளை பார்க்கவில்லை நாம், பாசத்தை விதைக்கின்றோம்,**
**பிரிவினை ஏற்கவில்லை நாம், தமிழால் இணைகின்றோம்,**
**மதங்களை பார்க்கவில்லை நாம், மனித மனங்களில் வாழுகின்றோம்**
**இனங்களை பார்க்கவில்லை நாம், கரம் கோர்த்து நடக்கின்றோம்,**
**குலப்பெருமை பேசவில்லை, தமிட்பெருமை பேசுகின்றோம்.**

எங்கே துவங்கினோம் என்று பார்ப்பதை விட எங்கு போய்க்கொண்டிருக்கின்றோம் என்று நாம் பார்ப்பது, நம் வழி வரும் நம் பிள்ளைகளுக்கு வழி காட்டும் என்று உணருகின்றேன். எங்கே விதைக்கப் போகின்றோம் என்று பார்ப்பதை விட எதை விதைக்கப் போகின்றோம் என்று அறிந்திருப்பது எல்லோருக்கும் பயன்தரும் என்றும் நம்புகின்றேன். அப்படித்தானே ஒரு தலை முறை ஆண்டாம் நாற்பதாண்டு காணும் தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் கல்வி நிலையமும் தமிழ்ப் பண்பையும், தாய்ப் பண்பையும் இந்த ஐரோப்பிய மண்ணில் விதைத்திருக்கின்றது.

தலைவர், நண்பர் திரு நாகதேவனின் சிறப்பான வழிகாட்டுதலில் தலைமுறை ஆண்டை எட்டியிருப்பது பெருமைக்குரிய காரியமே. அவர்கள் பணி தொடரட்டும், இதுபோல் பல தலைமுறை ஆண்டுகளைக் காணட்டும் என்று வாழ்த்துகின்றேன். ஒரு கிளையும் ஒடிந்திடாமல் தாங்கி நிற்கும் ஆலமர விழுதுகள் போல, உங்கள் பணிக்கு உலகத் தமிழ்ச் சங்கமும் என்றும் துணை நிற்கும் என்று கூறி வாழ்த்துகின்றேன்.

வந்தாரை வாழ வைத்து வீழ்ந்தது போதும், வீழ்ந்தோரை வாழ வைத்து தமிழுக்குத் தொண்டு செய்வோம்.

தமிழால், என்றும் அன்புடன்,

திரு ஜேக்கப் ரவிபாலன்,

நிறுவனர்/தலைவர், உலகத் தமிழ்ச் சங்கம் (ஐ.இரா) &
ஐக்கிய இராச்சியத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு (FeTAUK)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Agathiar Thunai*



**SRI AGATHIAR SANMARKA SANGAM LTD**

*133, Browning Road, Manor Park, London E12 6RB, England, UK.*

*Phone : 0208 471 5760 / 0795 713 2253*

*www.agathiar.org*

*Email: info@agathiar.org*

Registered Charity: 1107361




*Om Agathisaya Nama*
*Om Nanthisaya Nama*

*Om Thirumoolar Thevaya Nama*
*Om Karuvur Thevaya Nama*

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!! 30/08/2015

## வாழ்த்துகிறோம்

ஆசானும் ஈசனும் ஒன்றே!

ஈசனுக்கு சமமானவர் திருவள்ளுவப் பெருந்தகை. அவர் பெயரிலே தமிழ்ப் பள்ளி கண்டதே மிகச் சிறப்பு.

வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்ச் சங்கங்களின் தலையாய கடமை தமிழை போற்றி வளர்ப்பதுதான். அதனை மிகவும் சிறப்பாக அதுவும் அகிலமே புருவத்தை உயர்த்திப் பார்க்கும் இலண்டன் மாநகரில் 40 வருட காலமாக திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியை நடத்தி வரும் தமிழர் முன்னேற்றக் கழகத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்றார் திருவள்ளுவர். அந்த வகையில் நாடுகடந்து குடும்ப வேலைப்பளுவிற்கிடையே ஒரு இயக்கத்தையும் தமிழ்ப்பள்ளியையும் நடத்துவது இத்தருணங்களில் எவ்வளவு சிரமம் இதனை சிரமேற்கொண்டு சிறப்பாக நடத்திவரும் கழகப் பொறுப்பாளர்களையும், செயலவை உறுப்பினர்களையும், ஆசிரியப் பெருமக்களையும் வாழ்த்தி வணங்குகிறோம்.

40வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் பங்கு கொள்வதை பெருமையாக எண்ணி நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

அன்புடன்

இரா. வீரா.

Registered in England and Wales Co. No.: 4254824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நலக் கழகம் (மாத இதழ்)
Editor S. NATARAJAN (Sethur Koothan)
Cell : 94447 65002
TAMIL NALAKAZHAGAM (Tamil Monthly)
NOT A POLITICAL PARTY - IS A MONTHLY MAGAZINE
No.27 , Thirumalai Nagar,
Alwarthirunagar,
Chennai - 600 087,
Tamil Nadu, S. India.

திரு                                                                 20.08.2015

பூ.நாகதேவன்,
தலைவர்,
தமிழர் முன்னேற்றக்கழகம்,
திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி,
லண்டன், இங்கிலாந்து.

உலகின் அழகிய லண்டன் மாநகரில் 'தமிழர் முன்னேற்றக் கழகம்' தனது நாற்பதாவது நிறைவு நாளை கொண்டாடும் செய்தி - உலகெங்கும் வசிக்கும் - பத்து கோடி தமிழர்களது நெஞ்சங்களை பூரிப்படையும் செய்தி.

தமிழர்களின் சொந்த மண்ணில் - தமிழகத்திலும், ஈழத்திலும் - தமிழ் மொழிக்கு நிறைய இடையூறுகள் ஏற்பட்டுள்ள நிலையில், இங்கிலாந்தின் தலைநகரில், தமிழ்மொழி சீராட்டி, பாராட்டி வளர்க்கப் படுவதைக் கண்டு - தமிழ் அன்னை எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறாள்.

தமிழ் மொழியின் மீது அளவற்ற அன்பும் பற்றும் கொண்டுள்ள, 'தமிழர் முன்னேற்றக் கழகத்' தலைவர் திரு பூ.நாகநாதன் அவர்களும், அவர்களுடைய குழுவினரும் செய்து வரும் அரும்பணிகளை, 'திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி' யில் பயிலும் ஒவ்வொரு மாணவ மாணவியரும் பின்பற்ற வேண்டும். எதிர்காலத்தில், அவற்றை தலைமுறை தலைமுறையாக கொண்டு செல்ல வேண்டும்.

உலகம் இன்னும் 500 கோடி ஆண்டுகள் நிலைத்திருக்கும் என்பது சமீபத்திய அறிவியல் செய்தி.

உயர்தனி செம்மொழியாகிய, உலகின் பழம்பெருமை உடைய நம் தமிழ் மொழியும் 500 கோடி ஆண்டுகள் நிலைத்திருக்கும்.

லண்டன் தமிழர் முன்னேற்றக் கழகமும் 500 கோடி ஆண்டுகள் நிலைத்திருக்கும்.

வாழ்த்துக்கள்!

அன்புடன்,

சேத்தூர் கூத்தன்
(சு. நடராசன்)
ஆசிரியர் : தமிழ் நலக் கழகம்,
சென்னை - 87, தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முனைவர் மு.இளங்கோவன்

செயலாளர், உலகத் தொல்காப்பிய மன்றம்,
புதுச்சேரி – 605 003, இந்தியா

## வாழ்த்துரை

இலண்டனில் வாழும் தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்குக் கற்பிக்கும் வகையில் திருவள்ளுவர் பெயரில் தமிழ்ப்பள்ளியைத் தொடங்கிப் பலவாண்டுகளாகத் தமிழ்க்கல்வி வழங்கி வருவதை நண்பர்கள் வழியாகவும் நேரிலும் அறிவேன். இலண்டன் தமிழர்களைப் போலவே புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் உறவினர்களும் இத்தகு பணிகளைச் செய்து வருகின்றனர். அமெரிக்காவில் 'தமிழ்க்கல்விக் கழகம்' (ATA) ஒரு தவமாகவே இப்பணியைச் செய்து, அந்நாட்டுப் பல்கலைக்கழகப் படிப்புக்கு உதவும் வகையில் தமிழ்க்கல்விக்கு ஏற்பளிப்பைப் பெற்றுள்ளது.

இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளிலும், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் பிற நாடுகளிலும் தமிழுக்கு உரிய மதிப்பும் சிறப்பும் இருப்பதை யான் அறிவேன். 'வடவேங்கடம் தென்குமரி' என எல்லை கட்டி நின்ற தமிழ் இன்று கடல்கடந்து வாழும் மொழியாக விளங்குகின்றது. தொன்மையான மொழியாகவும், செவ்வியல் இலக்கியங்களைக் கொண்ட மொழியாகவும் விளங்கும் தமிழ், அறிவியல் தொழில்நுட்பங்களை ஏற்று வளரும் மொழியாகவும் உள்ளது. எனவே தேவைப்படும் இடங்களில் எல்லாம் இம் மொழிக்காப்புப் பணி தொடர்வது தேவையாக உள்ளது.

தாய்த் தமிழகத்தில் பிறமொழிக் கல்வியின் வல்லாதிக்கம் நிலவும் வேளையில், வல்லாதிக்க மொழியினரின் கோட்டைக்குள் அமர்ந்து, தங்கள் மொழியையும், பண்பாட்டையும் காப்பதற்குப் பணிபுரியும் எம் தமிழ் உறவினர்களை ஆரத் தழுவி மகிழ்கின்றேன்.

கல்வி, பணி, தொழில், வணிகம் சார்ந்து இலண்டனில் வாழும் எம் தமிழர்கள் தாயக நினைவுடன் கல்வி கற்பிப்பதும், பண்பாட்டு நிகழ்வுகளைக் கொண்டாடுவதும் போற்றத்தகுந்த முன்மாதிரிகளாகும்.

இலண்டன் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் ஆண்டு விழா சிறக்கவும், ஆண்டு விழாவையொட்டி வெளிவரும் மலர் சிறக்கவும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி வழியாகத் தமிழ்த்தொண்டு புரியும் அனைத்து நண்பர்களுக்கும் என் அன்பான பாராட்டுகளை உரித்தாக்குகின்றேன்.

அன்புள்ள
**மு.இளங்கோவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்குவேல்.

- பாவேந்தர்

'இலக்கியச்சுடர்'

முனைவர் கடவூர் மணிமாறன்

க.மு.,கீ.க.இ.,கல்.மு.,மெய்.மு.,
(எம்.ஏ., பி.ஓ.எல்., எம்.எட்., பிஎச்.டி.,)

இல்லம்
1/53, பெரியார் நகர்,
குளித்தலை - 639 104,
கரூர் மாவட்டம்.
அலைபேசி : 94431 44372

**செயலர்**
கரூர்த் தமிழ்ச் சங்கம்

**மாவட்டச் செயலர்**
உலகத் திருக்குறள் பேரவை
கரூர் மாவட்டம்

**தலைவர்**
மாவட்டப் பதிப்பாளர் பேரவை

**அமைச்சர்**
ஔவைக் கோட்டம்,
திருவையாறு

தலைவர்
தமிழ்ப் பேரவை
குளித்தலை

நாள் : 08. 08. '15

பேரன்புடையீர்,
வணக்கம்.

இலண்டன், தமிழர் முன்னேற்றக்கழகம் மிகச்சிறந்த முறையில் நடத்தி வரும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் நாற்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட இருப்பது பெருமையும் பெருமிதமும் தரத்தக்க செயலாகும்.

ஐந்து மாணவர்களைக் கொண்டு தொடங்கிய இப்பள்ளியில் இப்போது 300 மாணவர்கள் பயின்று வருவது வாழ்த்தவும் வரவேற்கவும் தக்க ஒன்றாகும்.

தாய்த் தமிழகத்தைப்போல அயலகங்களில் வாழும் தமிழர்களும் தங்கள் குழந்தைகட்குத் தமிழ்க்கல்வி வழங்கி வருவது தமிழினத்துக்கே சிறப்புச் சேர்க்கத்தக்க அருஞ்செயலாகும்.

இளையோர் மனங்களில் தமிழ் மரபையும், மாண்பையும், பண்பாட்டையும் இன்னோரன்ன சிறப்புகளையும் ஆழமாக விதைத்து வருவதற்குத் தமிழ்க்கல்வி பெரிதும் துணை நிற்கும். காலத்தின் கட்டாயமாகக் கருதப்பட வேண்டிய ஒன்றாகும்.

தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாடியவர் பாரதியார். "தமிழுண்டு தமிழ் மக்களுண்டு இன்பத்தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்று பாடியவர் பாரததாசன். வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்னும் பொன்மொழியைச் சுமந்து திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி வரலாறு படைக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புள்ள
08/08/15
(கடவூர் மணிமாறன்)

❖ பாவலர் ❖ ஆய்வாளர் ❖ பொழிஞர் ❖ படைப்பாளர் ❖ பதிவாளர் ❖ கல்வியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTWA UK

INDIAN TAMIL-MUSLIM WELFARE ASSOCIATION UK

46 ESSEX ROAD, MANOR PARK, LONDON E12 6RE, UNITED KINGDOM
Tel: 020 8470 1400 | Fax: 0208 470 4803 | Email: intwauk@gmx.co.uk

பெறுநர் : 01.10.2015

இர. அன்பழகன்,
பொதுச்செயலாளர்,
தமிழர் முன்னேற்றக்கழகம்
லண்டன்.

அன்புடையிர்

வணக்கம் 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழர் முன்னேற்றக்கழகம் திருவள்ளுவர் தமிழ் பள்ளிக்கு நாற்பதாம் ஆண்டு துவக்க தினம். பெருமைக்குரிய தினம்.. திரவியம் தேடிவந்த தேசத்தில் நம் தமிழ்மொழியை நம் தமிழின கலாச்சாரத்தையும் நம் மழலைச் சமுதாயத்திற்கும் நம் இளைய சமுதாயததிற்கும் ஊட்டி வளர்த்து வரும் தங்களின் உன்னதமான சேவையை இந்திய தமிழ் முஸ்லிம் நலச்சங்கம் போற்றுகிறது வாழ்த்துகிறது.

நாற்பது ஆண்டுகளாய் இந்த அமைப்பு ஆலமரமாய் கிளை பரப்பிட தங்கள் வியர்வைத்துளிகளை அதன் வேர்களுக்கு பாய்த்திட்ட நல்ல உள்ளங்களை பாராட்டுகிறோம் கடந்துபோன நாட்களை போலவே இனிவரும் காலங்களிலும் உங்களுடன் தோளோடு தோள் சேர்ந்து உங்களின் உடன் பிறந்தவர்களில் ஒருவர்களாய் நூற்றாண்டு கடக்கும் பயணத்தில் உடன்வருவோம் என்கிற உறுதி மொழியுடன்

எங்கள் நெகிழ்ச்சியான வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். சாதி மதங்களை கடந்த மனிதநேயம் மேனோர்பார்க்கில் தொடரும். நம் இரு அமைப்புகளும் அதற்காக என்றும் கரம் கோர்த்து நிற்கும்

வாழ்த்துகளுடன்

M.A.ஷஹாபுதீன்
தலைவர்
(INTWA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORNINGSTAR MATRICULATION SCHOOL

( RECOGNIZED BY GOVT. OF TAMIL NADU )

**Haji. M. Mohamed Sultan, B.A., HDC.,**
Correspondent


பெறுநர் :

01.10.2015

இர. அன்பழகன்,
பொதுச்செயலாளர்,
தமிழர் முன்னேற்றக்கழகம்
லண்டன்.

அன்புடையீர்

நமது லண்டன் மாநகருக்கு பெருமைக்குரிய அடையாளமாய் திகழும் தமிழர் முன்னேற்ற கழகம் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளிக்கு அகவை நாற்பது வாழ்த்துக்கள்

1975 ஆம் ஆண்டு தமிழாய்ந்த ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் தொடங்கப்பட்டு இன்று நாற்பதாம் ஆண்டில் அடி எடுத்துவைத்து திருவள்ளுவர் தமிழப்பள்ளிக்கு நூற்றாண்டுகளையும் கடந்து நிலைத்து நின்று தமிழ் மணம் பரப்பிட வாழ்த்துக்கள் ஐந்து மாணவர்களை கொண்டு தொடங்கப்பட்ட பள்ளியில் இன்று முன்னூறுக்கும் மேற்பட்டட மாணவர்கள் இந்த அபரிதமான வளாச்சிக்கு வியர்வை சிந்தி உழைத்திட அத்தனை நல் உள்ளங்களுக்கும் என் இனிய தமிழ் நெஞ்சங்களுக்கும் என்உள்ளம் கனிந்த பாராட்டுக்கள் இதயம் நிறைந்த வாழத்துக்கள்

நம் இனம் தமிழ் இனம் நம்மொழி தமிழ்மொமி என்கிற பெருமையும் கர்வத்தையும் லண்டன் தமிழ்மக்கள் மத்தியில் உண்டாக்கிவைத்திருப்பதில் உங்கள் பங்கு மறக்க முடியாதது. மறுக்க இயலாதது தொடரட்டும் தமிழ்ப்பணி தங்களின் தன்னலமற்ற சுயநலமற்ற பயணத்தில் என்னையும் உங்களில் ஒருவனாய் இணைத்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்

என் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து சொல் எடுத்து என் வாழ்த்துக்களை பதிவுசெய்கிறேன் நாற்பதாம் ஆண்டு விழா சிறக்கவும் 1975 – 2015 வரை தமிழர் முன்னேற்ற(கழக)த்திற்காக உழைத்து வரும் அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் நன்றி வாழ்த்துக்கள்

பெருமையுடன்

A. J.

A.J.ஷாஜஹான்
நிர்வாகி.


59-A MOHAMED ALI STREET, SHOLAPURAM 612 503, KUMBAKONAM TALUK, THANJAVUR DIST., TAMIL NADU, S.INDIA
TEL : 0435-2452220 I FAX : 0435 - 2402886 I E-MAIL : ajs.morningstar@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"குறள்வழி" **இராம. சந்திரசேகரன்**

நிறுவனர் :- **சிங்கப்பூர் தங்க மாளிகை, சென்னை ஜுவல்ஸ்**

1321, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம், **தஞ்சாவூர் -613 001.**

**74184 - 73999, 9443 777 916, (04362) (O) 230916 (R) 250916**

மாநில இணைச் செயலாளர் : தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை

செயற்குழு உறுப்பினர் : உலகத் திருக்குறள் பேரவை, தஞ்சாவூர்.

இணைச்செயலாளர் : தஞ்சை நகர நகை வணிகர்கள் சங்கம்.

நிறுவனர் : நட்பு சேவை மையம், தொழில் தோழன்,
அமரர் இலட்சுமி சந்திரசேகரன் நினைவு அறக்கட்டளை.

இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளித் தொடர்பான செய்திகளை அவ்வப்போது என் கெழுதகை நட்பு முன்னோடிகளான – தமிழ் மேலும் தமிழர் நலன் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்ட மாமணிகளாய்த் திகழ்பவர்களுமான தஞ்சை (இலண்டன்) வெண் வீர. முருகு. வீரசிங்கம் அவர்கள் மூலமாகவும், குடந்தை வய். மு. கும்பலிங்கனார் அவர்கள் மூலமகவும் முழுமையாய் அறிந்து வருகின்றேன். தங்களின் இந்த அறப்பணிகளினால் நானும் நான் இணைந்துள்ள அமைப்புகளின் நண்பர்களும் மகிழ்ச்சியால் நெகிந்து வருகின்றோம்.

தமிழகத் தமிழர்கள் மொழி, இன, நாட்டுப் பற்றின்றி வெறும் நடைப்பிணங்களாய் உணர்ச்சி அற்று வாழும் நிலையில் – பற்பல இடையூறுகளையும், இன்னல்களையும் பொறுமையாய் சகித்துக்கொண்டு அமைதி வாழ்க்கை வாழும் புலம் பெயர்ந்தத் தமிழர்களான தங்களைப் போன்றோர் நெஞ்சுரமிக்கத் தமிழ் ஆர்வலர்களாய் மொழி இன, நாட்டுப் பற்றோடு வாழ்வதும், பெரும்பாலான விழாக்களில் மலர் ஒன்றைச் சிறப்பிதழாய் வெளியிடுவதும் மகத்தானது... போற்றுதலுக்குரியது....

தங்களின் கழகம், பள்ளி இரண்டும் தேரின் இரு சக்கரங்களாய், நாணயத்தின் இரு பக்கங்களாய் ஏன் இரட்டைக்குழல் துப்பாக்கியாய் இயங்கிக் குறிக்கோளில் – நோக்கத்தில் சிகரமெட்ட விரும்புகின்றேன். தங்கள் அமைப்பின் பொறுப்பாளர்களது உத்வேகமிக்க உழைப்பும், மலர்ச்சிமிக்க ஈடுபாடும் தாய்த் தமிழர்கட்கும், பிற நாடுகளில் வாழும் உலகத் தமிழர்கட்கும் வழிகாட்டப்பட்டு உலகத் தமிழினமே நல்வழியில் செல்வதாய் அமையட்டும்.

இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியும் 50-ம் ஆண்டு, 75 ஆம் ஆண்டு, 100 ஆம் ஆண்டு என பல விழாக்கள் கண்டு ஆயிரம் பிறைகள் கண்டும், பாயிரம் பலவும் பெற்றுச் சீரோடும், சிறப்போடும் பீடுநடை போட்டுச் செழிப்பாய் இயங்கிட இதய வாழ்த்து மலர்களைத் தூவுகின்றேன்...

நன்றி ...! வணக்கம்...!!

தஞ்சாவூர்
24.07.2015

அன்புடன்,

(இராம. சந்திரசேகரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trinity Centre

East Avenue, London, E12 6SG **Tel** 020 8472 8947 **Fax** 020 8552 4515
**Web** www.thetrinitycentre.org

Dear Mr. Nagathevan,

TMK Thiruvalluvar Tamil School

It is with pride and pleasure that we join TMK in their 40th Anniversary Celebration. We have had the honour of following TMK's development from a small group run by parents to what it is today, a thriving organisation with over 200 children a year achieving excellent exam grades.

In the 40 years that TMK has been in existence, they have developed a model that is the envy of many community groups. They recognise the importance of parental involvement and work hard to ensure this is an integral part of the organisation's structure; TMK's philosophy of helping Tamil children retain their heritage through language and cultural activities goes hand in hand with recognising that this is no obstacle to adapting and integrating into the host culture. In fact, children who take pride in their cultural heritage are likely to be happy and active citizens keen to play their part in a multi-cultural society.

We want to wish TMK the very best for the future – they have sown the seeds for success and despite the challenges that inevitably will occur, they have the skills and knowledge to go forward.

Paul Chelliah

Centre Director
Trinity Centre

Charity Reg. No. 1103453 Company No. 4916433

**Developing social, cultural, educational and spiritual life within our community**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Great Ormond Street Hospital Charity

Mr Rathinam Arivanandan
TMK: Tamil School, London

18th November 2015

Dear TMK: Thiruvalluvar Tamil School

We would like to first of all congratulate the TMK charity on the 40th Anniversary of TMK and Tamil school. It is obviously a tremendous achievement and I hope your celebration on 16th January will be a great success.

We would also like to thank you for the support TMK have given Great Ormond Street Hospital. The money you have donated enables us to:

Conduct vital research – we are the largest dedicated funder of paediatric research in the UK.

Provide patient and family services – these include providing an amazing team of play specialists and providing accommodation to ensure parents can stay close to their child.

Buy essential equipment – our doctors and nurses need cutting edge equipment so that they can improve diagnoses and treatments.

Rebuild the hospital – GOSH has some of the oldest clinical buildings in the UK and they need replacing urgently. We are currently rebuilding two thirds of the hospital.

Your continued support of GOSH will enable us to continue to improve the hospital and ensure that amazing things can happen every day here. They are only made possible with the support of people like TMK.

With many thanks and best wishes,

Helen Wythers

Helen Wythers
Charity Desk Co-ordinator

40 Bernard Street, London WC1N 1LE **T** 020 7239 3000 **F** 020 7278 5605 **www.gosh.org**

Great Ormond Street Hospital Children's Charity. Registered charity no. 235825. Supporting the work of
Great Ormond Street Hospital for Children NHS Foundation Trust and research undertaken by the UCL Institute of Child Health.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Department of Tamil**
**Faculty of Arts**
**University of Peradeniya**

Tel: 081 2392545, 081 2392546, 081 2392547

## பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இலண்டன் மாநகரில் நீண்ட காலமாகத் தமிழ்வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்ற தமிழர் முன்னேற்றக் கழகத்தின் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி தனது நாற்பதாவது ஆண்டு விழாவினை கொண்டாடுவதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்மொழி தொன்மையான மொழி, செம்மொழி என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆயின், அதன் பயில்நிலத்தை 'வட வேங்கடம் முதல் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்கிறார், பனம்பாரனார். ஆயின், தமிழ் மக்கள் திரைகடல் ஓடி திரவியம் தேடவும் முயன்றனர். அது மட்டுமன்று அறிவையும் தேட முயன்றனர். அதனால் பனம்பாரனார் கூறிய தமிழ் வழங்கும் தேசம் மிக விசாலித்து இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என வளர்ந்து இன்று மேற்கு உலகிலும் கால்கொண்டுள்ளது. மேற்குலகில் கணிசமான அளவு தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அந்நியச் சூழலில் அவ்வாறு வாழ்ந்தாலும் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் மறந்தாரில்லை. அவற்றை அவ்வப்போது உயிர்ப்பித்தனர். இவ்வாறான செயற்பாட்டின் ஒரு தொடர்விளைவே தமிழ்ப்பள்ளிகளின் உருவாக்கம் ஆகும். அந்தவகையில் இலண்டன் மாநகரில் இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஐந்து மாணவர்களுடன் உருவாக்கப்பட்ட தமிழ்ப்பள்ளி இன்று முன்னூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை பயிற்றுவிக்கும் செழுங்கலை நியமமாக அது விளங்கிவருவது மகிழ்ச்சிக்குரியது. நாற்பது ஆண்டுகாலம் ஒரு கல்வி நிறுவனம் தொடர்ந்து இயங்கிவருவது என்பது அசுர சாதனையாகும். இத்தொடர் ஓட்டத்தின் இயங்கு சக்தியாக விளங்கும் பூ. நாகதேவன் மற்றும் அவருடன் இணைந்து செயலாற்றும் சகாக்கள் அனைவரும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள். இந்தக் கல்விக்கழகம் இவ்வாறாக தனது செயற்பாடுகளை நிகழ்த்தி நூற்றாண்டுகள் கண்டு இலண்டன் மாநகரிலே தலையாய தமிழ்ப்பள்ளியாக விளங்க வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன். இச்செயற்பாட்டில் பங்குகொள்ளும் அனைத்துத் தமிழ்ச் சிறார்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

வானமளந்த அனைத்தும் அறிந்திடும் செம்மொழி வாழியவே.

தமிழன்புடன்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்

தலைவர் / தமிழ்த்துறை,

பேராதனைப்பல்கலைக்கழகம்,

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முனைவர் சௌந்தர மகாதேவன்

வணக்கம். வான்புகழ் வள்ளுவத்தின்பால் பேரன்புகொண்டு நற்றமிழ் அருமறையை நாற்பதாண்டுகளாகப் பரப்பும் தமிழர் முன்னேற்றக் கழகம் –திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளிக்கு தமிழரின் ஆதிநாகரிகத் தொட்டிலான திருநெல்வேலி ஆதிச்சநல்லூர்ப்பகுதியில் தாமிரபரணிக் கரையிலிருந்து நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோருக்கு என்ன துன்பம் வரப்போகிறது? வையகச் சிக்கல்களுக்கெல்லாம் வள்ளுவம் தீர்வாய் அமையும்போது அதை மனதில் கொள்ளாமல் நாம் ஏன் வருந்தவேண்டும்? திருக்குறள் எனும் செந்தமிழ் அருமறையை லண்டன் மாநகரில் நாற்பதாண்டுகளாக நம் கழகம் கற்றுத்தருவது தமிழ்த்தாய் பெற்ற நற்பேறு.

ஓதற்கெளிதாய் உணர்தற்கரிதாகி வேதப்பொருளாய் திகழும் வளம்மிக்க வள்ளுவத்தைக் கற்போருக்குத் துன்பமும் இன்பமும் ஒன்றுதானே.வையத்தில் வாழ்வாங்கு வாழ வள்ளுவனார் ஏற்றிவைத்த திருக்குறள் தீபத்தை லண்டன் மாநகரில் நாற்பதாண்டுகளாக ஏற்றிவைப்பதென்பது எளியசெயலன்று.ஐரோப்பாவில் தொடங்கப்பட்ட முதல் தமிழ்ப் பள்ளியில் தமிழ் அன்றும் இன்றும் என்றும் முதலிடம் பிடித்துள்ளது மகிழ்சிக்குரியது.

தலைவர் திருக்குறளார் திரு.பூ.நாகதேவனும்,துணைத்தலைவர் திருமதி அல்லிகுமாரும்,சீர்மிகு செயலாளர் திரு.அன்பழகனும் முப்பொருள் உணர்ந்த திரு.அன்பரசுவும் துணைப் பொருளாளர் திரு.அரசு நாகநாதனும் என்றும் நல்வாழ்த்துகுரியவர்கள்.

முகநூல் வாயிலாகத் தினமும் நற்றமிழ்க் குறள்களைப் பல்வேறு உரையாசிரியர்களின் விளக்கதோடும் போப்பையரின் ஆங்கில மொழிபெயர்ப்போடும் தொடர்ந்துதருவது சாலச்சிறந்தது.பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.லீ ஸ்காட் அவர்களின் பாராட்டுரைகளைப் புதிய தலைமுறை ஊடகம் செய்தியறிக்கையாய் வெளியிட்டது உங்கள் நற்பணிகள் கண்டம்விட்டுக் கண்டம் தாண்டியும் எட்டி இருக்கிறது என்பதைத் தெளிவாக உணரமுடிகிறது.

உலகெங்குமுள்ள எழுத்தாளர்களை லண்டன் தமிழ்ப்பள்ளிக்கு அன்போடு அழைத்து மாணவமாணவியரிடம் உரையாற்றவைத்து ஆற்றுப்படுத்தும் நற்செயல் மகிழ்ச்சியளிக்கிறது. தமிழ்ப் பணியோடு சமூகப் பணியும் அழகாக ஆற்றிவருகிறீர்கள்,தெருவோரச் சிறார்களுக்கான மருத்துவமனைக்காக பல்வேறு போட்டிகள் நடத்தி நிதிபிரித்துத் தந்துள்ளீர்கள்.

குட்டிக் குழந்தைகளுக்காகப் பாடல் பாடும் போட்டி,பேச்சுப் போட்டி,விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகளை நடத்தி ஊக்கப்படுத்தியுள்ளீர்கள். உலகத் தமிழ் அமைப்பும் லண்டன் பல்கலைக்கழகமும் இணைந்து திருவள்ளுவர் தினத்தன்று வள்ளுவப்பேராசானுக்கு மாலை அணிவித்துப் பெருமைப்படுத்தியுள்ளீர்கள்.

கண்டம் விட்டுக் கண்டம் தாண்டியும் தமிழ்த் தேனைச் சுவைக்க நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அருமையானவை. தேமரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு எங்கள் நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறோம்.

மிக்க நன்றி

தங்கள் உண்மையுள்ள,

**சௌந்தர மகாதேவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புதல்
**பாவலர் நன்செய்ப்புகலூர் அழகரசன்**
மாநில இலக்கிய அணி அமைப்பாளர்,
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்,
**1134**, காந்திகிராமம் தெற்கு, கரூர் – **639004**,
தமிழ்நாடு. கைப்பேசி – **9789540598**

பெறுநர்
**இர. அன்பழகன்,**
(திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி)
பொதுச் செயலாளர்,
தமிழர் முன்னேற்றக் கழகம்,
இலண்டன்.



## வளர்க, வாழ்க!

(நன்செய்ப்புகலூர் அழகரசன்)

அயலகத்தே வாழ்ந்தாலும் அன்னைமொழித் தமிழினையே
அகங்கொண்டே போற்றுகின்ற அன்பர் வாழ்க!
பயிலகத்தே பைந்தமிழைப் பாங்குறவே கொண்டிட்ட
பற்றாளர் தாம்வாழ்க பன்னூற் றாண்டே!
அயராமல் நும்தொண்டோ அலைகடலுக் கப்பாலும்
ஆண்டுபல பலவாக ஆர்வத் தோடே
மயங்காமல் மருளாமல் வளர்ந்திடவே சீருற்று
வரலாற்றில் இடம்பெற்றீர்! வளர்க, வாழ்க!

இல்லாத இடமில்லை எனும்பெருமை கொண்டதமிழ்
இனத்தார்க்கு நும்மாலே ஏற்ற மென்பேன்!
வல்லாராய்ச் சிந்தனையால் மாண்புற்றே ஒளிர்வதற்கு
வாய்த்தமொழி தாய்மொழியே வைய கத்தில்
எல்லார்க்கும் இக்கொள்கை என்றென்றும் பொதுவாகும்
இடத்திற்கும் தொழிலுக்கும் ஏற்ற வண்ணம்
செல்லிடத்தால் அயல்மொழிதான் தேவையெனக் கொண்டாலும்
சீருறவே தமிழ்வளர்க்கும் செம்மல் வாழ்க!

'தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை' வரலாற்றில்
தனிச்சிறப்போ டென்றென்றும் தாமே வாழ்வார்!
இமிழ்கடலைத் தாண்டியின்றே எட்டாத தொலைவெனினும்
இசைபடவே தமிழர்க்காய் இயங்கும் பள்ளி
நிமிர்ந்தென்றும் ஒளிர்ந்திடவே நெஞ்சார வாழ்த்துகிறோம்
நீங்காமல் தமிழகத்தார் நினைவி லென்றும்
அமர்ந்திருக்கும் அருஞ்செயலை ஆற்றுகின்றீர்! பணிதொடர,
அருந்தமிழு றவாரிணைந்தே அளித்தோம் வாழ்த்தே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr R Niththyananthan**, M.Sc., Ph.D., (Lond)
179, Norval Road, North Wembley, Middlesex, HAO 3SX, England.
Tel : 020 8904 3937 Fax : 020 8904 5939 Mob. : 07956541844
E-mail : nsaro@hotmail.com



1975ம் ஆண்டில் லண்டனுக்கு சிங்கப்பூரிலிருந்து வருகை தந்து சில கல்விமான்களால் இறைவன் திருவருள் கொண்டு TMK திருவள்ளுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஈஸ்ட் ஹாமில் உள்ள ஒரு வீட்டில் இக்கல்விக் கூடம் இயங்கிக் கொண்டிருந்தது. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள் தம் தாய் மொழியாம் தமிழை மறந்துவிடக்கூடாது என்ற பெருநோக்குடன், தமிழார்வம் கொண்ட இந்த அறிஞர்கள் பல சிக்கல்களின் மத்தியிலும் இக் கல்விக் கூடத்தை இயக்கி வந்தனர். இவர்களது தமிழ் மொழி, கலாச்சாரம் தமிழர் பண்பாடு என்பவற்றில் ஊறியி-ருந்த ஆர்வத்தினால் இப்பாடசாலையின் தூண்களாக நின்று ஓங்கி வளர முன்னின்றனர்.

இன்று வரை தமிழ் மொழி G.E.C. O/L , A/L வகுப்புகளை வெற்றிகரமாக நடாத்தி 1991ம் ஆண்டிலிருந்து லண்டன் கேம்பிறிஜ் (Cambridge) பரீட்சை நிலையத்தால் நடாத்தப்படும் O/L, A/L பரீட்சைகளுக்கு மாணவர்களை அனுப்பிவருகின்றனர். லண்டன் தமிழ் நிலையத்தினூடாக இப் பரீட்சைகளில் தமது மாணவர்கள் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். லண்டன் தமிழ் நிலையத்திற்கும் இப்பாடசாலைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதுவரை 250க்கு மேற்பட்ட மாணவர்கள் O/L பரீட்சைக்கும் 200க்கு மேற்பட்ட மாணவர்கள் A/L பரீட்சைக்கும் தோற்றிவருகின்றனர்.

திருவள்ளுவர் நாமத்தில் இயங்கி வரும் இப்பாடசாலை, திருக்குறள் பேச்சுப் போட்டிகளை வருடாவருடம் நடாத்தி வருகின்றனர். தமிழர்களின் சிறப்புமிகு பொங்கல் விழா, மிகவும் விமர்சியாக வருடா வருடம் நடாத்தப்படும் பெருவிழாவாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் யாவரும் ஒன்றுகூடிக் கொண்டாடும் தைத்திருநாள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வித்திடுவதாக உள்ளது.

இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் இன்றும் தமது தமிழ் பாடசாலையின் வளர்ச்சிக்காக முன்னின்று உழைப்பதுடன் தமது பிள்ளைகளையும் இப்பாடசாலையிலே சேர்ந்து தமிழ் மொழியை கற்க வழி செய்துள்ளனர்.

ஒன்றுபட்டு இயங்குவதே நன்மை பயக்கும் என்பதை உணர்ந்த இப் பெற்றோரும் நலம்விரும்பிகளும் இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைப்பதைப் பார்க்கும் போது மிகவும் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலையின் தர்மகர்த்தாக்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியப் பெருமக்கள் பெற்றோர்கள், தமிழை ஆர்வமுடன் கற்று வரும் மாணவச் செல்வங்கள் மற்றும் பணிபுரியும் அனைவரையும் வாழ்த்துவதுடன், 40வது வருட வெற்றி விழாவைக் கொண்டாடும் உங்களுடன் நானும் பங்கு கொண்டு மனமகிழ்கின்றேன். உங்கள் அனைவரதும் தூய்மையான தமிழ் தாய்க்கான புனித சேவை மென்மேலும் ஓங்கி வளர தமிழ்த்தாயின் அருளும் கருணையும் உங்களோடு என்றும் இருக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன். உங்களது புனிதமான சேவை தொடர, இப்பாடசாலை நூறாண்டுகளுக்கு மேலாக வளம்பெற்று வளர மனமார வாழ்த்தி வணங்குகின்றேன்.

கலாநிதி. இரத்தினம் நித்தியானந்தன்.

04-12-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க தமிழ்மொழி! வெல்க குறள் நெறி!

தருநர்

கருவை மு. குழந்தை,
அன்பகம்,
38/42ஆ, இராணி மங்கம்மாள் தெரு,
கரூர் – 639001,
தமிழ்நாடு மாநிலம், இந்தியா.

பெறுதல்

தமிழ்த்திரு
இர. அன்பழகன் அய்யா,
பொதுச் செயலாளர்,
தமிழர் முன்னேற்றக் கழக இல்லம்,
46ஏ, கிழக்குப் பகுதி மனோர்பார்க்,

பொருள் : இலண்டன் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் 40 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கு – கவிதை, கட்டுரை, வாழ்த்துமடல், அன்புடன் அனுப்புதல்.

அன்பின் இனிய அய்யா! வாழும்
செந்தமிழ் மணக்கும் செழுந்தமிழ் வணக்கம்!
நன்றே நினைவு! நலமே விழைவு!
ஒன்றாய் மகிழும் உறவே இனிது!
தங்கள் இல்லமும் தமிழ்வளர் உள்ளமும்
சங்கத் தமிழெனத் தழைத்தின்பம் நிறைக!
அய்யன் குறளும் அய்யா மொழியும்
வய்யம் உய்யும் வழியாய்த் திகழ்க!
அலைகடல் வளைபுவி ஆருயிர் மாந்தரின்
தலைமொழி எனும்தமிழ்த் தாய்மொழி வாழ்த்தே!

அய்யா! தாயகத் தமிழரெல்லாம் தமிழ் உணர்வில்லா மல் தடம்மாறித் திரியும் இந்த நாளில் அயலகத் தமிழர் அன்னைத் தமிழ் வளர்க்க அரும்பாடுபடுவதை எண்ணி, நீங்கள் இருக்கும் தீக்கு நோக்கி நன்றியுடன் வணங்குகிறேன்.

"குறளாலே அறிவாண்மை பெறும்நாளே வரும்மேன்மை!
தமிழாலே உறவாவோம்! தமிழ்வாழ உரமாவோம்!"

**வாழ்த்து!**

இந்த நிலம் போற்றுகின்ற இங்கி லாந்தின்
இனியலண்டன் மாநகரில் இலங்கு கின்ற
செந்தமிழர் முன்னேற்றக் கழகம் வாழ்க!
திருவள்ளு வர்தமிழ்ப் பள்ளி வாழ்க!
நந்தமிழர் இனமுழைத்து நலமே வாழ்க!
நானிலமே போற்றிசெய நாளும் வாழ்க!
முந்துபுகழ் கொண்டுவளம் வென்று வாழ்க!
மூவாத இளந்தமிழாய் விளங்க வாழ்த்தே!

அன்புடன்,
(கருவை மு.குழந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION ASHRAMA & CHILDREN HOMES**
**BATTICALOA, SRI LANKA.**
T.P.; 0094 65 2222 752, rkmbat@gmail.com

## ஆசிச் செய்தி

லண்டன் திருவள்ளுவர் தமிழ் பாடசாலையானது, அங்கு வாழும் நம் தமிழ் மக்களுக்காக செம்மொழியாம் தமிழ் மொழியை கடல் கடந்தும் தடம்பதித்து இன்று வரை நல்ல முறையில் செயற்பட்டு நடாத்தி, நாற்பது வருடங்களை பூர்த்தி செய்துள்ளதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

பூமியின் அற்புதச் சூழலில் நமது முன்னோர், நமக்கு விட்டுச் சென்றுள்ள அரிய பொக்கிசம் எமது கலாசார பண்பாட்டு விழுமியங்கள். "நமது பாரம்பரிய கலாசாரப் பண்பாடுகளுக்கென்று ஒரு பெரிய ஆற்றல் உள்ளது", என்கிறார் சுவாமி விவேகானந்தர். இது நாம் முதலில் அறிய வேண்டிய உண்மை.

அந்தவகையில் நெடுங்காலமாக எமது ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் குழந்தைகளுக்காக ஒவ்வொரு வருடமும் புதுவருட புத்தாடைகளை வழங்கிவரும் உங்களுக்கு எமது உளமார்ந் நன்றிகளை தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களிலும் உங்கள் சேவை தொடரும் எனவும் நம்புகின்றோம்.

மேலும் "சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்." என உபதேசித்தவர் சுவாமி விவேகானந்தர். ஏனெனில் சுயநலமற்ற இடத்தில்தான் தியாகம் இருக்கும். தியாக மனப்பான்மை இருந்தால்தான் மக்களுக்குத் தொண்டாற்றமுடியும். தொண்டானது சுயநலமின்றி பிறர் நலனுக்காக உழைப்பது. சுயநலமின்றி எந்தவித பலனையும் எதிர்பாராது எந்தப் பணியை செய்தாலும் அதில் வெற்றி நிட்சயம்.

எனவே மாணவர்களின் அறிவுக்கண்ணைத் திறந்து அவர்களை ஆர்வத்துடன் செயற்பட வைக்கும் பெருமையை தன்னுள்ளே கொண்ட லண்டன் திருவள்ளுவர் தமிழ் பாடசாலையானது தனது 40வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதையிட்டு எனது உளமார்ந் வாழத்துக்களை தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களிலும் இப்பாடசாலை மென்மேலும் சிறப்படைந்து மிளிர அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தூய அன்னை சாரதா தேவியார் சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் ஆசிவேண்டி என் நல்லாசிகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் இறைபணியில்

(சுவாமி சதுர்புஜானந்தா)

**SWAMI - IN - CHARGE**
**RAMAKRISHNA MISSION**
**RAMAKRISHNAPURAM,**
**BATTICALOA.**

Please mention your e-mail address for further correspondence

**This is a branch of the Ramakrishna Mission ; Colombo - 6**
All the official correspondence should be addressed to the General Manager (Swami in-charge)
**Bank:** Bank of Ceylon, **Address:** Govington Road, Batticaloa. **Account Name :** Ashrama,
**Account No.:** 2698511, **Branch ID :** 012, **Bank Swift Code :** BCEYLKLX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் பொன். செல்வகணபதி
சென்னை
தமிழ்ப் பேராசிரியர் சென்னை மாநிலக்கல்லூரி
(பணிநிறைவு)

## முகவரி மட்டுமல்ல
## முகமே தமிழ்!

அருந்தமிழ் நாட்டிலோ
ஆங்கிலம் இன்னும்!
ஆங்கில நாட்டிலும்
அருந்தமிழ் மின்னும்!

இனிவரும் காலமெல்லாம்
இன்றமிழ் வளரும் வளரும்!
துணிவுடன் நில்லுங்கள்
தூய்தமிழ் வாழும் வாழும்!

நாற்பது ஆண்டுகளாய்
நற்றமிழ் வளர்த்துவரும்
தோற்பதே அறியாத
தொல்தமிழ்ப் பள்ளிவாழ்க!

தமிழுக்காய் வாழாத
தமிழனே எவனுமில்லை!
தமிழுக்காய் வாழாதான்
தமிழனே இல்லையில்லை!

முகவரி நமக்கெல்லாம்
முத்தமிழ் மட்டுந்தானே!
முகவரி மட்டுமல்ல
முகமதே தமிழேதானே!

தடையுடைத்துத் தமிழ்வளர்க்க
தரணியெங்கும் தமிழ்பரப்ப
படைநடத்தும் இலண்டன்வாழ்
பைந்தமிழ்ப் பள்ளிவாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P. No : 021-3213151

திகதி 14/07/15

தலைவர் :
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன். B.A.

உப-தலைவர் :
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்

பொதுச் செயலாளர் :
வைத்தியகலாநிதி
தி. திவாகரன்

இணைச் செயலாளர்கள் :
திரு. நா. தவநாதன்
திரு. மு. அருளையா

தனாதிகாரி :
திரு. அ. சண்முகநாதன்

உப-தனாதிகாரி :
திரு. சு. ஏழூர்நாயகம்

## தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

லண்டன் தமிழர் முன்னேற்றக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறுவது குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகிறேன். லண்டன் மாநகரில் 1975ம் ஆண்டு இன,மொழி உணர்வுமிக்க எம் உறவுகளால் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் பல அரியபணிகளை ஆற்றி தம்பணி தொடர்வது பெருமைக்குரிய விடயமாகும். இக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப்பாடசாலை மிகவும் பிரசித்தமானது. லண்டனில் பிறந்த தமிழ்க்குழந்தைகள் தாய்மொழியில் கற்க இப்பாடசாலை பெரிதும் உதவியது. பல கலை விழாக்களை நடாத்தி மாணவர்கள் அரங்குகளில் தம் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு இக்கழகம் வழிவகுத்தது. முந்நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களோடு இக்கழகத்தின் தமிழ்ப்பள்ளி என்ற பெருமையோடு விளங்குவது அறிந்து பலரும் பாராட்டி வருகிறார்கள். லண்டன் தமிழர் முன்னேற்றக்கழகம் சூரிய, சந்திரர் உள்ளவரை நிலைபெற்று விளங்கவேண்டும் என்று துர்க்காதேவியை பிரார்த்தித்து நல்வாழ்த்து கூறி அமைகிறேன்.

ஆறு. திருமுருகன்

கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.மு.க செயலவை பொறுப்பாளர்கள்

**திரு. ம. தேவதாசு**
பாதுகாப்பு மன்றத் தலைவர்

**திரு. பூ. நாகதேவன்**
தலைவர்

**திரு. இர. அன்பழகன்**
பொதுச்செயலாளர்

**திரு. அ. அன்பரசு**
பொருளாளர்

**திருவாட்டி. அல்லி குமார்**
துணைத் தலைவர்

**திருவாட்டி. சரசுவதி இராமையா**
துணைச் செயலாளர்

**திரு. அரசு நாகதேவன்**
துணைப் பொருளாளர்

# செயலவை உறுப்பினர்கள்

**திருவாட்டி. இராசம்மா இராமசாமி**
**திருவாட்டி. தவமணி மனோகரன்**
**திருவாட்டி. சரோஜினி சந்திரகோபால்**
**திருவாட்டி. கமலா பாலசுப்பிரமணியம்**
**திருவாட்டி. செல்வி நாகதேவன்**
**திரு. இர. செழியன்**
**திரு. ப. கோவிந்தராசன்**
**திரு. இர. அறிவழகன்**
**திரு. இர. அறிவானந்தன்**
**திரு. ராஜ் பூபதி**
**திரு. மோகனராஜ் தியாகராஜன்**
**திரு. சுரேஷ் தியாகராஜன்**
**திரு. அ. வெண்ணரசு**
**திருவாட்டி. மலர்விழி சந்திரபோசு**
**திரு. செல்வன் நாகதேவன்**
**திரு. ஹர்ஷ மணிமுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







த.மு.க. செயற்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி சிறந்தோங்கப் பணியாற்றிய முன்னாள் ஆசிரியப் பெருமக்கள்

செல்வி. நபிசாபானு அலாவுதீன் (திருவாட்டி சபருல்லா)
செல்வி. சங்கீதா இரங்கராசு (திருவாட்டி பாஸ்கரன்)
செல்வி. குமுதா இரங்கராசு (திருவாட்டி பக்தவத்சலம்)
திருவாட்டி. அலமேலு ஜான் பாலின் (தலைமை ஆசிரியர்)
திரு. ம. கி. மூர்த்தி (தலைமை ஆசிரியர்)
திரு. பூ. நாகதேவன் (தலைமை ஆசிரியர்)
திருவாட்டி. சாந்தமலர் பாலசிங்கம்
திருவாட்டி. ஜோதி சந்திரமோகன்
திரு. இர. அன்பழகன்
திரு. இர. செழியன்
திரு. சவரிமுத்து (கணிதம்)
திரு. வெ. மாயாவு
திருவாட்டி. சரசுவதி இதயக்குமார் (நடனம்)
திருவாட்டி. சரசுவதி இராமுடு
திரு. அந்தோனி ஜோசப் (கணிதம்)
திருவாட்டி. தனம் இராமையா
திருவாட்டி. ரூபினி நேமிநாதன்
திரு. சேரன் இளங்கோவன்
திருவாட்டி. கமலா பால்ராசு
திரு. முருகானந்தம்
திரு. கிருஷ்ணராஜா
திருவாட்டி. இலதா நித்தியானந்தம்
திருவாட்டி. இராகினி இராஜகோபால் (நடனம்)
திருவாட்டி. முருகையா
திரு. அருணாசலம்
திரு. குணசேகரன்
செல்வி. சுபத்திரா (நடனம்)
திரு. வல்லிபுரம் ஜெயராஜா
திருவாட்டி. பரமேசுவரி அரங்கரத்தினம்
திருவாட்டி. கோசலாதேவி மூர்த்தி
திரு. சிரிதரன் (கணிதம்)
திருவாட்டி. செல்வநாயகி ஜெயானந்தம்
திருவாட்டி. அன்புச்செல்வி அறிவானந்தன்
செல்வி. லீலா சுந்தரேசன் (நடனம்)
செல்வி. அயிலீன் தேவதாசு (திருவாட்டி. சேந்தன்)
திருவாட்டி. யோகேஸ்வரி சிவானந்தன்
திருவாட்டி. வனிதா ஜெயரஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாட்டி. அனுசுயா தியகராஜா

திருவாட்டி. செந்தாமரைச்செல்வி சீனிவாசன்

திருவாட்டி. சங்கீதா அறிவழகன்

திரு. சண்முகராசா

திருவாட்டி. சியாமளா அன்பரசு

திருவாட்டி. நளாயினி சர்வானந்தன்

திருவாட்டி. காந்திமதி இரவிசந்திரன்

திரு. வல்லிபுரம் யோகராசா (தலைமை ஆசிரியர்)

திருவாட்டி. இராஜினி மோகனராஜ் (நடனம்)

**இவர்களின் தமிழ்ப்பணிக்கு என்றென்றும் நன்றி கூறி மகிழ்வோம்**

## திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி சிறந்தோங்கப் பணியாற்றும் இந்நாள் ஆசிரியப் பெருமக்கள்

திருவாட்டி. தவமணி மனோகரன் (தலைமை ஆசிரியர்)

திருவாட்டி. இராஜயோகமலர் இராஜேந்திரா

திருவாட்டி. சரோஜினி சந்திரகோபால்

திருவாட்டி. கமலா பாலசுப்பிரமணியம்

திருவாட்டி. சிவமணி செல்வராஜா

திருவாட்டி. சுகிர்தா ஜெயப்பிரகாஷ்

திருவாட்டி. தவமணி பூரணம்பிள்ளை

திருவாட்டி. புஷ்பகலா ரவீரதன்

திருவாட்டி. மலர்விழி அன்புசார்லஸ்

திருவாட்டி. விஜயலட்சுமி ரவீந்திரன்

திருவாட்டி. ஜெயராணி மகேந்திரன்

திருவாட்டி. கிருஷ்ணலதா நீலரஞ்சிதராஜா

திருவாட்டி. நாகரத்தினம் பாலசிங்கம் (திருக்குறள்)

செல்வி. ஜெனிதா ஜெயப்பிரகாஷ்

செல்வி. சங்கீதா சந்திரகோபால்

திருவாட்டி. ரசிகா வெண்ணரசு

திரு. ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து

திருவாட்டி. தர்சிகா பிரதீபன் (நடனம்)

**இவர்களின் தமிழ்ப்பணிக்கு என்றென்றும் நன்றி கூறி மகிழ்வோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி ஆசிரியர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIRUVALLUVAR TAMIL SCHOOL TEACHERS

# திருக்குறளும் வாழ்வியலும்



திருமதி தவமணி மனோகரன்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்னும் அவ்வையாரின் வாக்குப்படி மனிதப்பிறவியே ஏனைய பிறவிகளை விட மேலானது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். மனிதன் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவன். எது சரி எது தவறு என்று பகுத்து அறியும் அறிவு கொண்டவன். இத்தகைய மனிதப் பிறவியைப் பயனுள்ளதாக வாழ்வதே பொருத்தமானது. தானும் சிறப்பாக வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பது மேன்மையானது. இவ்வாறு வாழ்வதற்கு ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்வை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். அதற்கான வழிவகைகளை எளிமையாகவும், சுவையாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் எடுத்துக் கூறுகிறது திருக்குறள் எனும் தெய்வீக நூல், இதனால் இதனை இயற்றிய திருவள்ளுவர் தெய்வப்புலவர் என்று போற்றப்படுகிறார். திருக்குறளின் அருமை பெருமையை ஆராய்ந்த தமிழ் நாட்டறிஞர் மட்டுமன்றிப் பிற நாட்டறிஞர்களும் இதனை உலகப்பொதுமறை(வேதம்) என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். இத்தாலிய நாட்டைச் சேர்ந்த ஜி.யு.போப் என்னும் கிறிஸ்தவ பாதிரியார் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே முதன் முதலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதுவரை எழுபதுக்கு மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. திருக்குறள் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் நூல் என்பதைப் பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாடியுள்ளார்.

திருக்குறளில் மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் சொல்லப்பட்டிருக்கிறது.அறத்துப்பால் தனிமனிதன் பின்பற்ற வேண்டிய அறத்தையும், பொருட்பால் சமுதாய அறத்தையும், இன்பத்துப்பால் தலைவன் தலைவி பற்றிய உறவு நிலைகளையும்(பிரிவு,ஊடல், கூடல்) கூறுகிறது. உலகைப் படைத்த நான்முகன்தான் உலகில் தோன்றி நான்மறையின் சாரத்தை முப்பாலில் உரைத்துள்ளார் எனத் திருவள்ளுவமாலை(திருக்குறளின் சிறப்பைக் கூறும் நூல்) வள்ளுவரின் குறளின் பெருமையைக் கூறுகிறது. திருக்குறளைச் சுவைத்துப் படிக்கும் எவருமே இக்கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.மக்கள் தம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சில குறட்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். முதலாவது அதிகாரமான கடவுள் வாழ்த்தில் கடவுள் என்பது யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவரை வணங்குவதால் ஏற்படக் கூடிய பயன் என்பவை தெளிவாக உரைக்கப்படுகிறது இவ்வாறே எல்லா அதிகாரங்களும் அதன் பொருளைத் தெளிவாகக் கூறுகின்றன.

முதலாவது குறள்,"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எழுத்துக்கள் எல்லாவற்றுள்ளும் முதல் எழுத்தாக இருப்பது, 'அ' என்னும் எழுத்தாகும். (வாயைத் திறக்கும்போது எழக் கூடிய ஒலியும் 'அ' என்பதே) . அதே போல உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் முதன்மையானவன் இறைவனே. உலக இயக்கம் அனைத்துக்கும் ஆதாரமானவன் இறைவன். எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய உவமையால் உலகின் தத்துவத்தையே கூறுகிறது இக்குறள்.

வளரும் மாணவப்பருவத்தினருக்கு இன்றியமையாத அதிகாரங்கள் அன்புடைமை, அறிவுடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை, வாய்மை, பெரியாரைத் துணைகோடல், சிற்றினஞ்சேராமை என்பன. அன்புடைமை என்னும் அதிகாரத்தில், அன்புள்ள இதயத்தில்தான் உயிர் உள்ளது மற்றவை எலும்பும் தோலும் உள்ள உருவமே என இடித்துரைக்கிறார் வள்ளுவர். அன்புதான் மக்கள் இதயங்களை இணைக்கும் நூலாக அமைந்து பலவித உறவுகளாக மலர்கின்றது. மனித நேயத்தை வளர்க்கின்றது அன்பு நிறைந்த நெஞ்சமுடையவர்களே தமக்கென வாழாது பிறர்க்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணிக்கும் சமூகத் தொண்டர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன
"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அன்பில்லாத இதயம் உள்ளவர் எல்லாவற்றையும் தமது சொந்த தேவைக்காக பயன்படுத்துவர். அன்பு நிறைந்த உள்ளம் கொண்டவர்கள் தம் எலும்பைக் கூடப் பிறருக்காகக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள் என்பது இக்குறளின் பொருள். இத்தகைய உள்ளம் கொண்டவர் மனம் பிறரின் துயரைக் கண்டு இரங்கும். அவர்களின் துயரைத் துடைக்க முற்படும். அன்புதான் உலகத்தைத் தளராது இயங்க வைக்கும் ஊட்டச்சத்தாகும். அன்பு நன்மையைச் செய்வது போலத் தீமையைச் செய்யவும் தூண்டும். அதனால் கவனமாக இருக்க வேண்டும் எனப் பின்வரும் குறளால் எச்சரிக்கிறார் வள்ளுவர்.

"அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

அளவுக்கு மிஞ்சிய பாசம், நட்பு என்பன சில நேரங்களில் தவறான வழியில் மக்களைச் செலுத்துவதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

கல்வியின் முக்கியத்துவத்தைக் கருதி அதனை மூன்று அதிகாரங்கள் மூலம் விளக்குகிறார் வள்ளுவர். கல்வியில் ஏற்படக் கூடிய பயனைக் கல்வி என்ற அதிகாரத்திலும், கல்வி கற்காததால் வரக்கூடிய கேட்டைக் கல்லாமை என்னும் தலைப்பிலும், கற்காவிட்டாலும் பரவாயில்லை வேறுவழிகளில் கேட்டும் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள், ஏனென்றால் கல்வியறிவு மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு அவசியமானது. கல்வியறிவு இல்லாதவர்கள் விலங்குகளுக்குச் சமமானவர்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார். மிருகங்கள் உண்ணும் உறங்கும், தம் இனத்தைப் பெருக்கும், வேறெதைப்பற்றியும் அவை கவலைப்படுவதில்லை. அப்படிப்பலர் நம்மிடையே வாழ்வதைக் காணலாம். கல்வி பொருட்செல்வம் போல அழியாது, மற்றவர்களுக்குக் கொடுத்தாலும் குறையாது. மனிதருடன் நிலைத்து நிற்கும் மேலான செல்வம். இன்றைய காலகட்டத்தில் அதிகம் படிக்காதவர்கள் கூட வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள்,இணையதளம் மூலமாகத் தம் அறிவை மேம்படுத்திப் பயனடைகிறார்கள்.அறவழி நின்று வாழ்வதற்கு உண்மை பேசுதல் அவசியம். வாய்மை என்னும் அதிகாரத்தில் உண்மை பேசுவது, தவம் தானம் தர்மம் செய்வதற்கு ஒப்பானது அதனை விடச்சிறந்த சத்திய நெறி வேறெதுவும் இல்லை. மனத்தைத் தூய்மைப்படுத்துவதும் வாய்மைதான். அதனை அழகிய உவமை மூலம் விளக்குகிறது ஒரு குறள்,"புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்". நீர் உடலைச் சுத்தம் செய்யும், உண்மை பேசுதல் மனதைச் சுத்தமாக வைத்திருக்கும்."அறம் செய்ய விரும்பு" என அவ்வையார் சுருக்கமாகக் கூறினார். திருக்குறளில் அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரம் அறத்தின் பயன்பாட்டை அதன் மேன்மையைக் கூறுகிறது. பொறாமை, ஆசை, கடுஞ்சொல், கோபம், இந்த நான்கையும் விலக்கிவிட்டுச் செய்யும் காரியங்கள் எல்லாமே அறம். நடைமுறையில் இவற்றைக் கைவிடுவது இலகுவானதல்ல. ஆனால் முயற்சி செய்தால் அது எங்களை எல்லாவிதத்திலும் அறவழியில் வாழச்செய்யும்.வெகுளாமை என்னும் அதிகாரத்திலும் இது மேலும் வலியுறுத்தப்படுகிறது.
"தன்னைத் தான் காக்கின் சினம் காக்க
காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்" என்னும் குறள்,
உன்னை நீ பாதுகாக்க வேண்டுமானால் கோபத்தை அடக்கு, இல்லாவிட்டால் அது உன்னையே அழித்துவிடும். கோபம் உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் என்பது மருத்துவ ரீதியான உண்மை. கோபம் பகையை வளர்க்கும் அதனால் கடுஞ்சொல் கூறுவது எப்படியெனில் இனிய பழங்கள் இருக்கும்போது காய்களை உண்பதற்குச் சமானம். இனியவைக் கூறல் எனும் அதிகாரத்தில் இனிமையாகப் பேசுவதால் ஏற்படக் கூடிய பயனை வள்ளுவர் விளக்குகிறார். நடைமுறை வாழ்க்கையில் நாம் சிந்தித்துப் பார்க்கும் போது கடுமையாகத் திட்டுவதால் யாரும் எந்த பயனையும் பெறுவதில்லை. எதையும் இனிமையான வார்த்தைகளால் சொல்வதால் மிகுந்த பயனைப் பெறலாம்.

அறிவுடைமை என்னும் அதிகாரம் மனிதருக்கு இருக்க வேண்டிய பகுத்தறிவின் முக்கியத்துவத்தைக் கூறுகிறது. அறிவு துன்பம் வராமற் காக்கக் கூடியது. யார் எதைச் சொன்னாலும் அதன் பொருளை அறியும் ஆற்றலுள்ளது. மனிதனைச் சரியான வழியில் வழி நடத்த வல்லது. இதனால் அறிவுடையோர்தான் எல்லாம் உடையவர், அறிவில்லாதவரிடம் எது இருந்தாலும் பயனில்லை. அறிவில்லாத ஒருவனிடம் அதிகம் பணம் இருந்தால் அது அவனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான வழியில் இட்டுச் செல்லும். அறிவுடையோர் ஏழையாக இருந்தாலும் சீரான முறையில் வாழ்வர்.

மனிதர்களுக்கு உறவினர் மட்டுமல்ல நண்பர்களும் முக்கியமானவர்கள். நட்பு என்னும் அதிகாரம், நட்பு என்பது எது? நண்பர்கள் எப்படியானவர்களாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. எப்படி உண்மையான நண்பர்களைத் தேர்ந்து எடுக்கலாம் என்பதை நட்பாராய்தல் என்னும் அதிகாரம் கூறுகிறது. எப்படியானவர்களுடன் சேரக்கூடாது என்பதைச் சிற்றினம் சேராமை என்னும் அதிகாரம் கூறுகிறது. நல்லவர்களைத் துணை கொள்வதைவிடப் பெரிய பாக்கியம் வேறேதும் இல்லை என்பதைப் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரம் கூறுகிறது.இவ்வுலக வாழ்வில் இல்லறவாழ்வு மிக முக்கியமானது. அது சிறப்பாக அமைந்துவிடில் இவ்வுலகமே இன்பமயமாக இருக்கும் என்பதை இல்வாழ்வு, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு என்னும் அதிகாரங்கள் கூறுகின்றன. இல்வாழ்க்கையின் கடைசிக்குறள் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்". உலகத்தில் நன்னெறியில் நின்று தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து வாழும் மனிதர்கள் இவ்வுலகில் வாழும் போதே தெய்வத்திற்குச் சமமாகப் போற்றப்படுவர்.

இவ்வாறாக மனிதனுக்குத் தேவையான எல்லாவற்றையும் கூறுவதுடன் நின்றுவிடாது, வள்ளுவர் மனிதன் நிம்மதியாக நிறைவாக வாழ்வதற்கு சிறந்த அரசும் அவசியம் என்பதை இறைமாட்சி, நாடு, செங்கோன்மை, கொடுங்கோன்மை, அமைச்சு, படைமாட்சி போன்ற அதிகாரங்களில் கூறுகிறார். வள்ளுவரின் அரசியல் கோட்பாடு வாழ்வியல் விதிமுறைகள் எக்காலத்திற்கும் பொருத்தமானவையாக உள்ளன.உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும், ஆண், பெண் உறவு என்பது முக்கிய இடத்தைப் பெற்று உலகை இயக்கி வருகிறது. திருக்குறளில் இன்பத்துப்பால் என்னும் பகுதி காதலின் சிறப்பு, காதலன் காதலியின் உணர்வுகள் கூடல் ஊடல் பிரிவு என்பவற்றால் ஏற்படக் கூடிய இன்ப துன்பங்கள் யாவுமே சிறந்த உவமை அணிகளால் சித்தரிக்கப்பட்டுள்ளன. அறநெறியைப் பற்றிக் கூறும் வள்ளுவருக்குக் காதலைப்பற்றியும் சுவாரசியமாகச் சொல்ல முடிகிறதே என ஆச்சரியப்பட வைக்கிறது இன்பத்துப்பால்.

திருவள்ளுவர் வாழ்வை முற்றும் உணர்ந்து 1330 குறட்பாக்களில் பூரணத்துவமான வாழ்க்கை இதுவென வடிவமைத்துத் தந்துள்ளார். குறள் காட்டும் வழி நின்று குறையின்றி நிறைவாக வாழ்வோமாக.

**திருமதி தவமணி மனோகரன்**
தலைமை ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

RUBHI DIGITAL PHOTOGRAPHY

Contact:
G. S. MOORTHY
0044 7956887282

தமிழர் முன்னேற்றக் கழகம் - திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் 40ஆம் ஆண்டு விழாவும் - மலரும் சிறக்க வாழ்த்துகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் திருக்குறள்



திருமதி. சிவமணி செல்வராஜா

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாட்டுக்கொரு புலவர் பாரதியார் கூறியுள்ளார். இத்தகைய பெருமை வாய்ந்த, தன்னையே உலகுக்காக அளித்த தெய்வத்திருமகன் திருவள்ளுவரால் இயற்றப்பட்டதே திருக்குறள்.

திருக்குறள் உலகிலுள்ள அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்ட சிறந்த நூல். மிகப் பழமையான நூல் என்றாலும் முக்காலத்துக்கும் பொதுவான நூல். இதன் உயர்வு கருதிப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. அவை முப்பால், பொய்யாமொழி, தமிழ்மறை, முதுமொழி, தெய்வ நூல் எனப்பலவாகும். திருக்குறளின் சிறப்பைப்பற்றி பல நூல்கள் எழுதப் பட்டுள்ளன.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் முப்பிரிவினை உடையது. அறத்துப்பாலில் 380 பாக்களும், பொருட்பாக்களில் 700 பாக்களும், இன்பத்துப்பாலில் 250 பாக்களும் உள்ளன. மொத்தமாக 1330 குறட்பாக்களைக் கொண்டுள்ளன. இவை 1 3 3 அதிகாரங்களைக் கொண்ட ஒவ்வொரு அதிகாரமும் 10 பாக்களைக் கொண்டது.

திருக்குறள் நாம் வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் சிறந்த நூல். வாழ்க்கையில் திருக்குறள் தந்த சிறப்பம்சங்கள் பல. அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம். முதற்கண் பாயிரத்தில் கடவுள் வாழ்த்தை முன்வைத்து நூலை ஆரம்பிக்கிறார் வள்ளுவர். வாழ்க்கையில் அவன் இன்றி ஒரு அணுவும் அசையாது என்பதைத் தெளிவு படுத்துகிறார்.

இறைவனது திருவடிகளைத் தொழாமல் வாழ்க்கையில் கல்வியைக் கற்போமேயானால் நாம் கற்ற அக்கல்வியினால் ஒரு பயனும் இல்லை. இதனையே வள்ளுவர் பெருந்தகை

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"
என அழகாகக் கூறுகிறார்.

இன்னும் பிறவியாகிய பெருங்கடலை நாம் கடக்கவேண்டுமாயின் இறைவனது திருவடிகளை வணங்க வேண்டும் என்கிறார். இதிலிருந்து வாழ்க்கையில் தெய்வபக்தியின் சிறப்பை குறள் தெளிவு படுத்தும் முறையை உணரலாம்.

வாழ்க்கையில் பிறர் பொருட்டுச் செய்யும் தானமும் தன் பொருட்டுச் செய்யும் தவமும் மழை பெய்யாவிடில் இல்லையாகும். இதைக் குறள் நமக்கு,
"தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா தெனின்"
எனக் கூறுகிறது.

அடுத்து இல்லறவியல், இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமாயின் அந்த வாழ்க்கையில் பண்பும் பயனும் அதுவேயாகும் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் வாழ்க்கையில் மகளிரைக் காவல் வைத்துக் காக்கும் காப்பு முறை என்ன பயனை உண்டாக்கும்? அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத்தாம் காக்கும் காப்பே சிறந்தது என்னும் குறளில் அழகாகக் கூறப்படுகிறது.

தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி தன் மகனை கற்றவர் கூட்டத்தில் கல்வியில் மேம்படச்செய்வதாகும். இதனை வள்ளுவர் தந்த குறள்,
"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"
என வளமுறக் கூறுகிறது.

வாழ்க்கையில் அன்பு ஒரு வழிகாட்டி அதற்குத் திருக்குறள் ஒரு உறுதுணை. அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர். அன்பு உடையவர், தம் உடம்பையும் பிறருக்கு உரிமையாக்கி வாழ்வர். அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழ்க்கை வளமற்ற பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்போமேயானால், அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான். இன்னும் எமக்கு வாழ்க்கையில் குறள் தந்த கல்வி, கேள்வி, நட்பு என்பவற்றையும் சிறிது நோக்குவோம்.

கல்வியில் கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்றபின் கற்ற அக்கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும். இதனை,
"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"
என்ற குறள் தெளிவுப்படுத்துகிறது.

நூல்களைக் கற்கவில்லை ஆயினும், கற்றறிந்தவர்களிடம் கேட்டறிய வேண்டும். அது ஒருவற்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல் போல் துணையாகும், இதனைக் குறள்
"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை"
என அழகுறக் கூறுகிறது.

முகம் மட்டும் மலரும் படியாக நட்புச் செய்வது, நட்பு அன்று. நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பாகும். உடை நெகிழ்ந்தவனுடைய கை உடனே சென்று உதவுவதுபோல, நண்பனுக்கு துன்பம் வந்தால், அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவதே நட்பு என்று குறள் எமக்குக் கூறுகிறது.

"எப்பொருளும் இதன்பால் உள, இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்"
என்று அன்றே திருக்குறளுக்கு ஒரு பாராட்டு மொழி எழுந்தது. வள்ளுவர் இல்லறவியல் தொடக்கம் கற்பியல் வரை குறள் வெண்பாக்களினால் இரத்தினச் சுருக்கமாக எமக்கு வேண்டியவற்றையும் வேண்டாதவற்றையும் எடுத்துக் கூறியுள்ளார். குறள் வழி நாம் நடந்தால் நாடு நல்ல சான்றோர்களையும், இல்லத் தலைவர்களையும், அரசியல்வாதிகளையும், இன்னும் பலவழிகளில் பல உத்தமர்களையும் பெற்றுச் சிறப்படையும் என்பதில் ஐயமில்லை.

எனவே மேல் நாட்டு நாகரீகம் மேலோங்கி நிற்கும் இக்காலகட்டத்தில் திருக்குறள் போன்ற நூல்களைக் கற்று வாழ்க்கையில் சிறப்படைவோமாக.

**திருமதி. சிவமணி செல்வராஜா**
**ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளும் மாணவர்களும்



திருமதி.நா.பாலசிங்கம்

கிழக்கு இலண்டனில் ஒரு வாரத்தில் சனிக்கிழமை/ஞாயிற்றுக்கிழமை தமிழ்ப்பள்ளி நடைபெறுவது வழக்கம். அவ்விதம் தமிழர் முன்னேற்றக் கழகம் நடாத்தும் 'திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும்' ஒன்று. அதில் தலைமை ஆசிரியராக உள்ள திருமதி.தவமணி மனோகரனின் அனுமதியோடு ஒரு நாள், ஒரு குறள் என்றபடி ஒவ்வொரு சனியும் பாலர் வகுப்பு முதல் ஒரு குறள் கற்பிக்கும் பேறு எனக்கும் கிடைத்துள்ளது. 1330 குறள்கள் மனிதனின் வாழ்க்கைக்கு ஏற்றபடி அதிகாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதனை அறிந்த ஏனைய மொழி பேசுபவர்கள் திருக்குறளை தத்தம் மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் பெருமையை பாட்டுக்கொரு புலவன் பாரதியார் 'வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று புகழ்ந்து பாடினார். இதனையே அவ்வையாரும் 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்' என்று புகழ்ந்து பாடினார்.

திருவள்ளுவர் எந்த மதத்தையும் குறித்து பாடல் எதையும் எழுதவில்லை, அவர் ஒன்றேமுக்கால் அடியில் ஒவ்வொரு குறளையும் எழுதியுள்ளார். அவ்வையார் கூறியது போல் 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கு இணங்க ஒரு நாள் ஒன்றே முக்கால் அடி வீதம் மாணவர்கள் கற்கிறார்கள் இது அவர்களின் பிற்காலத்திற்கு உதவும் என்பதே எம் நோக்கமாகும் "வாழ்க வள்ளுவன் குறள்" என்று வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
திருமதி.நா.பாலசிங்கம்
திருக்குறள் ஆசிரியை
திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் நான்



**திருமதி.கமலா பாலசுப்பிரமணியம்**

"நான்" என்ற சொல்லை நாம் யோசித்து ஆராய்ந்து பார்த்தோம் என்றால், இந்த உலகத்தில் 'நான்' தனியே என்ன செய்ய முடியும் என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கும். யாரும் இல்லாத உலகத்தில், 'நான்' என்ற ஆள்மட்டும் இருந்தால் எப்படி இருக்கும்? பேச, அன்பு செலுத்த, ஆறுதல் கூற, நல்லது, CTட்டது ஆராய, கொடுத்து வாங்க, உதவி செய்ய, உற்சாகம் ஊட்ட, மன்னிக்க, மறக்க, துன்பங்கள் இன்பங்களைப் பகிர்ந்து கொள்ள, சேர்ந்து சாப்பிட என்று எத்தனையோ விதமான செயல்களுக்கு யாராவது தேவை. அதுவும் அன்பானவர்களாக இருந்துவிட்டால் அதைவிட இன்பம் வேறு எதுவுமில்லை. 'நான்' என்ற இந்த ஆளுக்குள் அன்பு, அதுவும் தன்னலம் இல்லாத அன்பு மட்டும் இருந்தால் போதும், 'நான்' எல்லாம் நாமாக மாறி உலகமே அன்பு மயமாக மாறிவிடும்.

அன்பு என்பது மகா சக்தி. நாம் பெற்றோர்களிடத்து அன்பாய் இருக்கிறோம். பிள்ளைகளிடத்தில் அன்பாய் இருக்கிறோம். இதேபோல மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்தப் பழகினோமானால், அவர்களின் குறைகளைவிட நிறைகள் கூடத் தெரியும். வெறுப்பைவிட விருப்புப் பூத்துக் குலுங்கும். சில சந்தர்ப்பங்களில் கோபமோ, வெறுப்போ ஏற்பட்டால் கூட, அன்பினால் மன்னிக்கிற மனப்பக்குவம் ஏற்பட்டுவிடும்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அன்புள்ளவர்களிடம் நான், எனது , என்கிற சுயநலம் இருக்காது. உதவி செய்வதானாலும் கூட, அவர்களால் எவ்வித பலனையும் எதிர்பாராமல் செய்ய முடியும். பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யும் உதவிக்கு கோபம், சலிப்பு, வெறுப்பு என்று எவ்விதமான விரோதங்களும் ஏற்படாது.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

இவருக்கு இன்னது செய்தால், நன்மை கிடைக்கும் என்று பாராமல் ஒருவன் செய்த உதவியின் அருமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும். இப்படிச் செய்வதால் மனதிற்குள் அமைதியும், சாந்தியும் தாமாகவே வந்து குடியேறி விடுகின்றன. இதை அன்புடையவர்களால் மட்டும்தான் செய்ய முடிகிறது.

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரைப் பார்க்கும் பொழுது, தமது சகோதரர்களுக்குக் கூட தேவையான உதவி செய்வார்களா? அவர்களிடம் அன்பு உடையவர்களாக இருப்பார்களா? என்ற சந்தேகம் எழுகிறது. இதற்குப் பெற்றோர்கள் தங்களான அறிவுரைகளை வழங்கி, உதவி செய்யும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து, அதற்கு ஆதரவாக நின்று அவர்களை வழி நடத்த வேண்டும். போட்டி மனப்பான்மை இன்றி அவர்களை அன்பாக வெற்றி, தோல்வியைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தை ஏற்படுத்துதல் மிகவும் அவசியமானது. 'நான்' என்ற சொல்லை நீக்கிவிட்டு, அதாவது நாமாக வாழ முயற்சி செய்வோம், பயன் பெறுவோம்.

அன்பென்று கொட்டு முரசே - மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

**திருமதி.கமலா பாலசுப்பிரமணியம்**
ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகவை 40 இல் தமிழர் முன்னேற்றக் கழகம்"



தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்றான் பாரதி. இன்று உலகெங்கும் பரவி வாழும் தமிழர்கள் அக்கூற்றிற்கு உயிர் கொடுத்து வருகின்றனர். தமிழன் எங்கு தடம் பதித்தாலும் அதற்கான முத்திரையை அங்கு அவன் நிலை நாட்டத் தவறியதில்லை. பிரிதானியாவை எடுத்துக் கொண்டால், பள்ளி, பாடசாலை, கழகம், கல்விக்கூடம், சங்கம் என நூற்றுக்கு மேற்பட்ட கல்வி நிலையங்கள், புலம் பெயர் மண்ணில் வாழும் தமிழ் சிறார்களுக்குத் தாய்மொழிக் கல்வியை ஊட்டுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளன. பல வழிகளில் பயணிக்கும் நதிகள், சமுத்திரத்தில் சங்கமம் ஆவதை போல், பெயரளவில் வேறுபட்டாலும் இக்கல்வி நிலையங்களின் குறிக்கோள் ஒன்றாகவே உள்ளது.

ஏறத்தாழ 4 0 ஆண்டுகளுக்கு முன்னர், தமிழர் திரை கடலோடித் திரவியம் தேடிய காலம் அது. காலச்சக்கரம் சுழல, தொடர்ந்து அயல்நாடுகளில் குடியேறிய தமிழர்கள், தாய் நாடு, மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்று சிந்திக்கத் தலைப்பட்டனர். தமிழர் முன்னேற்றக் கழகமும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் இன்று தனது 40 ஆவது ஆண்டை கொண்டாடுகின்றன. மானுட செயற்பாடுகள் அத்தனைக்கும் பின்னால் ஒரு வரலாறு இருப்பது யதார்த்தம். அந்த ரீதியில் நோக்கின், தமிழர் முன்னேற்றக் கழகத்தின் 40 ஆண்டு வாழ்க்கைப் பயணப் பின்னணியிலும் ஒரு வரலாறு இருக்கத்தான் செய்கின்றது. வரலாறு இல்லையேல் வளர்ச்சியில்லை.

1 0 ஆண்டுகள் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் தலைமை ஆசிரியராகவும், தமிழர் முன்னேற்றக் கழகத்தின் தற்போதைய தலைவராகவும் இருந்து வருகின்ற திரு.பூ.நாகதேவன் அவர்கள் சிந்தனைச் சிறையிலிருந்து சிதறிய முத்துக்கள்; அத்தனையும் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் சொத்துக்கள்; இந்த ஆண்டு மலரில் பதிவாக வேண்டியவை.

1970 களில் சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் இருந்து பிரித்தானிய முப்படைத் தளங்கள் மூடப்பட்டதன் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இலண்டனில் குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்களில் ஒரு சாரார், தமது பிறப்பின் அடையாளத்தினை தம் குழந்தைகள் தொலைத்து விடுவார்களோ எனப் பயந்தனர். இதன் எதிரொலி, ஈஸ்ட்காம், மனோர் பார்க்கில் திரு.அலாவுதீன் என்ற தமிழ் அன்பர் இல்லத்தில் 'தமிழ் வகுப்பு' ஆரம்பமானது. அக்காலத்துத் திண்ணைப் பள்ளிகள் வடிவில் உருவானதுதான் இன்றைய 'திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி' . இப்பள்ளியின் முதல் ஆசிரியை என்ற கவுரவத்திற்கு உரியவர் திரு.அலாவுதீன் அவர்கள் புதல்வி செல்வி. நபீசா பானு சேக் அலாவுதீன் (இன்றைய திருமதி.சபருல்லா அவர்கள்) . திரு.ம.கி.மூர்த்தி போன்ற பலரும் இங்கு செயலாற்ற முன்வந்தனர். சைவத் தமிழ்மணி கி.ஞானசூரியன், தமிழ்மணி அரங்க முருகையன் ஆகிய இருவரும், பள்ளித் தேர்வுகளை நடத்தி மாணவர்களை தரம் பிரித்து, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் சான்றிதழ்கள் வழங்கி மாணவர்களை ஊக்குவித்தனர்.

14.10.1975 இல் தமிழர் முன்னேற்றக் கழகம் உருப்பெற்றுப் பள்ளியின் நேரடி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது. திரு.ம.தேவதாசு, அவர்களும், திரு.மு.வீரசிங்கம் அவர்களும் பள்ளி நெறிமுறையாளர்களாகப் பதவி ஏற்க, திரு நாகதேவன் தலைமை ஆசிரியர் பதவியில் அமர்ந்தார். இலண்டனில் வாழ்ந்த ஈழத்தமிழ் அன்பர்கள் பலரும் இப்பள்ளியுடன் இணைந்து செயற்பட்டனர். மாணவர் எண்ணிக்கை 50-60 வரையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

1984 இல் இப்பள்ளியில் இசை வகுப்புகளை ஆரம்பித்து வைத்தவர் 'ஈழத்து சீர்காழி' என இன்று போற்றப்படும் திரு.மா.யோகேஸ்வரன் அவர்கள். செல்வி ஜானகி, சுபத்ரா ஆகிய நடன ஆசிரியைகளும் இங்கு பணி புரிந்தனர். 1988 முதல் கணித ஆசிரியராக இணைந்து, பின்னர் தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக நியமனம் பெற்று 2008 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் திரு.வல்லிபுரம் யோகராஜா அவர்கள். தமிழ்மொழி எழுத்துக்களில் மாற்றங்கள் ஏற்பட்டபோது, பிள்ளைகளை விடப் பெரியவர்கள் போராடிய நாட்களில் தலைமை ஆசிரியர் பதவியில் இருந்தவர். இருபது வருடங்களுக்கு மேலாகப் பள்ளியின் பாடத்திட்டம் ஆசிரியர் தெரிவு, மாணவர் மொழி வளர்ச்சிக்கான வழிமுறைகள், பெற்றோருடன் கலந்துரையாடல் எனக் கழகத்தோடு இணைந்து செயல்பட்டார்.

1988ல் நடன ஆசிரியையாகப் பள்ளியில் இணைந்தவர் திருமதி.ராகினி ராஜகோபால். நடனக்கலையுடன் 30 ஆண்டுகளுக்கு மேல் பயணிக்கும் இவர், அதிக எண்ணிக்கையான மாணவர்களை பள்ளி விழாக்களில் மேடையேற்றிய பெருமைக்குரியவர். தொடர்ந்து இவரது பணி 8 ஆண்டுகள் வரை நீடித்தது. இவரைத் தொடர்ந்து வெள்ளி விழாக் கண்ட திறமைமிகு நடன ஆசிரியை திருமதி.ரஜனி மோகன்ராஜ் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் நடன ஆசிரியையாக இணைந்தார்.

1984-இல் செல்வி அனுஷா கணேசலிங்கம், இலண்டன் பல்கலைக்கழகம் நடாத்தி வந்த தமிழ் மொழித் தேர்வுக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளிக்குப் பெருமை தேடித்தந்த முதல் மாணவி. இதற்கு உந்துகோலாக இருந்தவர் பள்ளி நிர்வாகக் குழு அங்கத்தவர்களில் ஒருவராக இருந்த திரு.கணேசலிங்கம் அவர்கள். அனுஷாவைத் தொடர்ந்து 1990 வரை பள்ளி மாணவர்கள் இலண்டன் பல்கலைக்கழகத் தேர்வுக்கு தோற்றி வந்தனர்.

1991 ஆம் ஆண்டிலிருந்து இப்பள்ளி மாணவர்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடாத்தும் க.மொ.த சாதாரண, உயர்தர தேர்வுகளுக்குத் தோற்றித் திறமைச் சித்தி பெற்று வருகின்றனர்.

இக்கழகத்தின் ஆரம்ப காலம் முதல் 2008 ஆம் ஆண்டு வரை த.மு.க பொதுச்செயலாளராக தொய்வின்றித் தொண்டு செய்து மறைந்தவர் திரு.வீர இரத்தினம் அவர்கள். "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று வீர முழக்கத்துடன் தன் பேச்சைத் தொடங்கும் நல்ல தமிழ்மகன்.

தமிழர் முன்னேற்றக் கழகத்துடனும், பள்ளியுடனும் இரண்டறக் கலந்து சேவை செய்த கழகப் பொருளாளர் மறைந்த திரு.இராமசாமி அவர்கள், பள்ளியின் பாலர் வகுப்பில் கற்பித்து, மழலைகள் மனதில் நிறைவாக இடம்பிடித்து மறைந்த ஆசிரியை திருமதி.செல்வி ஜெயானந்தம் அவர்கள்.

ஏறத்தாழ 29 ஆண்டுகளாக இப்பள்ளியில் உப தலைமை ஆசிரியையாக, கடமை புரிந்து இன்று திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் தலைமை ஆசிரியையாக இருப்பவர் திருமதி. தவமணி மனோகரன் அவர்கள். அதே கால அளவில் இப்பள்ளியின் ஆசிரியையாகக் கடமையாற்றி வருபவர் தற்போதைய உப தலைமை ஆசிரியை திருமதி.ராஜயோகமலர் ராஜேந்திரா அவர்கள்.

தமிழர் முன்னேற்றக் கழகத்தின், சேயான திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியில் தாய்மொழி பயின்ற மாணவர்கள் பலர் இன்று ஆங்கில ஆதிக்கத்தில், பிரித்தானியருக்குச் சரிசமமாகப் பெரும் பதவிகளில் செயற்படுகின்றார்கள். பிரித்தானியாவின் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் பட்டப் படிப்பினை மேற்கொண்டுள்ளனர்.

இப்பள்ளியில் தாய்மொழி கற்று வெளியேறும் மாணவ மாணவிகள் பள்ளியின் வாசலுடன் தாம் கற்றவற்றை விட்டு விட்டுச் செல்லாது, தம்மோடு இவற்றை எடுத்துச் சென்று, தமக்கு அடுத்த சந்ததியினரிடம் கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள் பெற்றோர்கள், தமிழ் ஆர்வலர்கள் இப்பணியினை செய்ய வேண்டிய கடப்பாடுடையவர்கள்.

'வள்ளுவந் தன்னை உலகினிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற வள்ளுவன் பெயரை நம் பள்ளிக்குச் சூட்டி வளர்பிறையானது தமிழர் முன்னேற்றக் கழகம். இக்கழகம் நிறைவான செயற்பாடுகளுடனும், நீண்ட ஆயுளுடனும் வாழ வாழ்த்துக்கள்.

திருமதி.சறோஜினி சந்திரகோபால்
தமிழ் ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AKILAN ENTERPRISES
# அகிலன் எண்டர்பிரைசஸ்






**HANDICRAFTS, FANCY GOODS, POOJA ITEMS, INDIAN MAGAZINES, TAMIL NAVALS, BHARATHANATYAM COSTUMES & JEWELS AND TEMPLES FOR HOME**

## 274 HIGH STREET NORTH, MANOR PARK, LONDON, E12 6SA TEL: 0208 548 0033

## BEST AIR-FARE TO ALL DESTINATIONS




# ANAND TRAVEL

IATA

30 YEARS Since 1984

SERVING THE COMMUNITY FOR PAST 30 YEARS

☎ 020 85484897

Email: anandtravel@btopenworld.com

**ADDRESS**

344, High Street North
Manor Park, London E12 6PH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AT Chartered Certified Accountants

***Accountancy and taxation services for businesses and individuals***

- Year-end accounts
- Individual, partnership and company tax returns
- Management accounts & Budgets
- Bookkeeping & VAT
- Payroll, workplace pension scheme & CIS
- Company secretarial services
- HMRC investigations
- Accounting system set up, implementation and monitoring
- Business analysis and advice
- New business start-ups

Please contact us for a no-obligation consultation to discuss your requirements; we offer a fixed fee service with no hidden surprises.

ACCA

**2 Rixsen Road, London E12 6RN Tel 020 8514 8181 / 020 8472 7257**

# SOLANKI PHARMACY

**324 High Street North, Manor Park, London E12 6SA**
**Tel/Fax: 0208 472 2901**

For your NHS prescriptions and pharamacy services
Stockist of YARDLEY products

**சோலங்கி கெமிஸ்ட்**

ஈஸ்ட்காம் பகுதியில் வசிக்கும் அனைத்து சமுதாயத்தினரும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக மருந்துகள் - மருத்துவ ஆலொசனைகள் வழங்கி வருகிறோம். இங்கு வாழும் தமிழ் மக்களுக்கு எங்களின் இனிய **பொங்கல் நல்வாழ்த்துகள்!**

அன்புடன், **ஹரிஷ்**

Opening Times:
**Monday, Tuesday, Wednesday and Friday** – 9am to 8pm
**Thursday** – 9am to 7pm
**Saturday** – 9am to 5pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி படிப்பது அவசியமானதா?



திருமதி புஸ்பகலா ரவீரதன்

எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. சொல் நயமும் பொருள் வளமும் உள்ள பல இலக்கியப் படைப்புக்களை தன்னகத்தே கொண்ட தேனையொத்த செம்மொழிதான் தமிழ்மொழி.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடினார் பாட்டுக்கோர் புலவர் பாரதியார். அத்தகு இனிமையான தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் இன்று உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்று புலம்பெயர் நாடுகளில் வாழும் பலர் தமது பிள்ளைச் செல்வங்களுக்கு தமிழ்மொழியைக் கற்பிக்காமல் வளர்க்கின்றார்கள். மற்றைய மொழிகளைக் கற்பது தவறல்ல ஆனால் தாய்மொழியை மறப்பது எம்மைப் பெற்ற தாயை மறப்பது போலாகும்.

எங்கள் பிள்ளைகள் தாங்கள் வசிக்கும் நாடுகளில் தமிழ் மொழியைக் கற்று வரும்போது அவர்கள் எங்கள் சமுதாயத்துக்கு பயனுள்ள வகையில் உதவ முடிகின்றது. வேற்றுமொழி தெரியாத மூத்த தலைமுறையினருக்கு சில சந்தர்ப்பங்களில் தமிழில் பேசி புரிய வைக்க முடிகின்றது.

எங்கள் தாயகத்தில் இருக்கும் எமது உறவுகளுடன் தமிழ்மொழியில் தான் எங்களுடைய சந்ததியினர் உரையாடி உறவுகளை வளர்த்துக் கொள்ள முடியும். தாயகத்தில் மட்டுமல்ல வேறு நாடுகளில் வசிக்கும் எங்கள் உறவுகளுடன் உறவு விட்டுப் போகாமலிருக்க ஒரு இணைப்புப் பாலமாக இருப்பதும் எமது தமிழ்மொழிதான்.

எமது சமுதாயம் நல்வழியில் செல்ல உதவும் பல நூல்கள் தமிழ் மொழியில் உள்ளன. நல்லொழுக்கத்தையும் உயர்ந்த சிந்தனைகளையும் கொண்ட திருக்குறள் போன்ற தமிழ் நூல்களைப் படித்து வந்தால் நல்லதொரு இளம் சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்கு எங்கள் இளைய தலைமுறையினர் எமது தாய்மொழியாம் தமிழ்மொழியைப் படிப்பது மிகவும் அவசியமாகின்றது.

தாய்மொழியாம் தமிழ்மொழியை மறவாது அதற்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஒவ்வொரு தமிழரின் கடமையாகும். தமிழ்மொழி நலிந்துவரும் நிலைக்குச் செல்வதனை ஒருபோதும் தமிழர்களாகிய நாங்கள் அனுமதிக்கக் கூடாது.

"தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதியார் கூறியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே என்று புலம்பெயர் நாடுகளில் எல்லாம் பல தமிழ்ப்பாடசாலைகள் உருவாகிச் சேவை புரிந்து வருகின்றன.

பல தமிழ் அறிஞர்களும் ஆசிரியர்களும் சேவை மனப்பான்மையோடு எங்கள் மாணவச் செல்வங்களுக்கு தமிழ்மொழியை கற்பித்து வருகின்றனர். அத்தகைய தமிழ்ப்பாடசாலைகளுள் ஒன்றுதான் இலண்டனில் இயங்கிவரும் எமது திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியாகும். இப்பள்ளி எமது மாணவர்கள் தமிழ் படிப்பது அவசியம் என்பதனை உணர்த்தி பல நல்ல தமிழ் மாணவர்களை உருவாக்கியுள்ளது, உருவாக்கி வருகின்றது.

இப்பாடசாலை தனது தமிழ்ப்பணியை எங்கள் இளைய தலைமுறையினருக்குச் செய்வதில் நாற்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது என்பதனை நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. எமது வருங்கால சந்ததியினரிடம் தமிழ்மொழி நிலைத்திருக்க தொடர்ந்தும் இப்பள்ளி தனது தமிழ்மொழியைக் கற்பிக்கும் பணியை செவ்வனே செய்ய எமது பாடசாலை ஆசிரியர்கள் எல்லோர் சார்பாகவும் வாழ்த்துகளை கூறிக் கொள்கின்றேன்.

வாழ்க தமிழ்மொழி, வளர்க திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் தமிழ்த் தொண்டு.

**திருமதி புஸ்பகலா ரவீரதன்**

**ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி**

seelans superstore
SEELANS SUPERSTORE
332-338 High Street North, London E12 6PH • Tel: 020 8471 5733
Groceries - Fresh Vegetables & Fruits
Pooja Items - House Hold Items



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கும் தமிழ்க் கலாச்சாரத்திற்கும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி பங்களிப்பு



திருமதி மலர்விழி அன்பு சாள்ஸ்

எமது திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி நாற்பது வருட கால அளப்பரிய சேவையை தமிழுக்கும் தமிழ்க் கலாச்சாரத்திற்கும் செய்திருக்கின்றது தொடர்ந்தும் செய்து வருகின்றது என்பதை கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆங்கில மோகம் நிறைந்த புலம்பெயர்ந்த நாடான இங்கிலாந்தில் பல இன,மத,கலாச்சார மக்களுடன் பின்னிப் பிணைந்து வாழும் எமது தமிழ் மக்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு தாய்மொழியை கற்பிப்பது என்பது இலகுவான காரியமல்ல. இதை இலகுபடுத்தும் பொருட்டு சிறப்பான பணியை செய்துவருவது எமது திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையாகும். கடமையே கண்ணாகக் கருதும் எம் கழுக உறுப்பினர்களின் கடின உழைப்பாலும், சேவை மனப்பான்மை நிறைந்த எமது தலைமை ஆசிரியரின் நிர்வாகத் திறனாலும், கடமை உணர்வு மிக்க ஆசிரியர்களின் ஒத்துழைப்பாலும், எம் மாணவச் சிறார்களின் அயராத முயற்சியினாலும், அன்பான பெற்றோரின் ஆதரவினாலும் எமது பாடசாலை தொடர்ந்தும் தனது பணியை சீராகச் செய்து வருகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

எமது பாடசாலையில் பாலர் வகுப்பில் இருந்து கல்விப் பொதுத் தராதர உயர்நிலை வகுப்புகள் வரை நடாத்தப் படுகின்றன. எமது பாடசாலைக்கென்று ஓர் தனியான பாடத்திட்டம் உள்ளது. பாடத்திட்டத்திற்கமைய ஒவ்வொரு வகுப்பிற்கும் புத்தகங்களும் உள்ளன. எமது ஆசிரியர்கள் மாணவர்களின் தேவைக்கு அமைய கற்பித்தல் முறையை அவ்வப்பொழுது ஆராய்ந்து மாற்றங்கள் செய்ய வேண்டிய நேரத்தில் மாற்றியமைத்து தங்களது தொண்டை செய்து வருகின்றனர். அது மாத்திரமல்ல திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலை சமய சார்பற்ற வகுப்புக்களை நடாத்துவதால் எமது பாடசாலையில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் என்ற மத வேறுபாடின்றி அனைவரும் தமிழை கற்றுக் கொள்கின்றனர். எந்தவித வேறுபாடுமின்றி தமிழர் என்ற ஒரே எண்ணத்துடன் எல்லோரும் செயல்படுவதால் சமூக ஒற்றுமைக்கும் எமது பாடசாலை பாலம் அமைத்துக் கொடுக்கின்றது என்பதில் எந்த வியப்பும் இல்லை.ஒவ்வொரு வருடமும் க. பொ. த சாதாரண/ உயர்நிலை வகுப்புக்களில் திறமைச் சித்தி அடையும் மாணவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகின்றது. இதற்குக் காரணம் திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையின் மிகச்சிறந்த சேவை என்று ஆணித்தரமாக கூறிக்கொள்ள முடியும். மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் அனைவரின் கடின உழைப்பிற்கு கிடைத்த வெற்றி இது என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலை தமிழை வளர்ப்பதில் மாத்திரமல்ல எமது கலாச்சாரத்தையும் கட்டிக் காத்து அவற்றை இயல், இசை, நாடகம் மூலமாகவும் வெளிப்படுத்துகின்றன. மாணவர்களிடையே இலை மறை காயாக மறைந்து கிடக்கும் திறமைகளை பொங்கல் விழா, பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகள் மூலமாக வெளி அரங்கிற்கு கொண்டு வருகின்ற சிறப்பான பணியையும் சீராகச் செய்து வருகின்றது. இவ்விழாக்களின் போது மாணவர்கள் எமது பாரம்பரிய உடைகளை அணியும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அவர்கள் இதை ஓர் மகிழ்ச்சியான விடயமாக எடுத்துக் கொள்வதையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது. மொத்தமாகக் கூறுவதென்றால் எமது பாடசாலை தமிழர், கலை, பண்பாட்டை அறிமுகப்படுத்துவதற்கு எமது மாணவர்களுக்கு ஓர் களம் அமைத்துக் கொடுக்கின்றது.இவ்வாறான நிழ்ச்சிகளில் பங்குபெறும் மாணவர்களுக்கு மேடைக் கூச்சம் இருக்காது.தன்னம்பிக்கை மிகுந்தவர்களாகவும் இருப்பார்கள்.தமிழ்ப் பாடசாலையில் மட்டுமல்ல செல்லும் இடமெல்லாம் தங்களது காரியங்களை துணிவோடு செய்கின்ற வல்லமையும் பிறக்கின்றது.

திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலைக்குள் காலடி எடுத்து வைத்ததும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் உட்பட எல்லோருக்குமே ஓர் மன நிறைவு இயல்பாகவே ஏற்படுகின்றது. " ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருத்தின்படி எல்லோரும் ஓர் குடும்பமாக செயல்படுவதுதான் இதற்கு காரணம்.

புலம் பெயர்ந்த நாடான இங்கிலாந்தில் பல தமிழ்ப் பாடசாலைகள் தங்களது சேவையை மிகவும் சிறப்பான முறையில் செய்து வருகின்றன.எமது மொழியை அடுத்த சந்ததியினரிடமும் காண வேண்டுமென்றால் நிச்சயமாக இது ஒரு கூட்டு முயற்சியினால் மட்டுமே முடியும்.வீட்டில் பெற்றோர் பிள்ளைகளுடன் தமிழில் கதைக்க வேண்டும். எமது இனிய மொழியை எங்கு சென்றாலும் பேச வேண்டும், பெருமைப்பட வேண்டும். தமிழை வளர்ப்போம் தரணி போற்ற வாழ்வோம்!!!

**திருமதி மலர்விழி அன்பு சாள்ஸ்**
**ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி**

LAE
Little Asia
Emporium
294 High Street North, Eastham E12 6SA
London, United Kingdom
T: +44 2084 750 239
M: +44 7961 507 682
W: www.littleaasia.com
E: littleasiaemp@outlook.com
F: littleasiaemporium

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு


திருமதி விஜயலட்சுமி இரவீந்திரன்

கற்றால், ஒழுக கற்பது, கற்ற வழி நிற்பது என்பதுதான் கல்வியின் சிறப்பாகும். கல்வியுடன் சேர்ந்து பண்பாடு கலாச்சாரத்தையும் கற்கிறோம்.

ஒருவனை முழு மனிதனாக மாற்ற உதவுவது கல்வி, அவனை சிறப்பாக வாழ வைப்பதிலும், அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைவதற்கும் உறுதுணையாக நிற்பது கல்வியாகும்.

ஆதிகாலத்தில் கல்வி கற்பதில் சில நோக்கங்கள் கொண்டிருந்தார்கள். நல்ல ஒழுக்கம் நாகரீகம் பக்தி தெய்வத்தன்மை என்பவற்றிற்கும் கல்வி ஒரு சிறந்த காரணியாக விளங்கி வந்துள்ளது. மக்களின் வாழ்வை வளப்படுத்தி நல்ல முறையில் பேணுவதற்கு கல்வி முதல் காரணியாக இருக்கிறது.

இன்றைய விஞ்ஞான உலகத்தில், கல்வி பெறுவதே மிக முக்கியமானது. நாம் ஒரு குறிக்கோளுடன் கல்வியை கற்றல் மிக அவசியம். இந்தக் காலத்தில் நல்ல ஒழுக்கத்தோடு வாழ்வதற்கு கல்வி மிக அவசியம் என்பது யாரும் மறுக்க முடியாது. அடுத்து குருவிற்கு பணிந்து ஒழுக்கத்துடன் கற்கும் கல்வியே சமூகத்தில் சிறப்புற வாழ்வதற்கும் நிலைத்து நிற்பதற்கும் நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுக்கும். தமது வாழ்வை ஒரு வழியில் கொண்டு செல்வதற்கும் கல்வி உதவுகிறது.என்றும் கல்வி பயனுள்ளதாகவும் அழியாத செல்வமாகவும் இருக்கும். எமது கல்வி சொத்தை யாராலும் பறிக்க முடியாது. அதுமட்டுமல்ல நாம் எங்கும் போகும் போதும் கொண்டு செல்லும் சொத்து கல்வியாகும். கல்வி என்ற செல்வமே எல்லாவற்றிலும் உயர்ந்த செல்வம் மற்றைய செல்வம் எல்லாம் செல்வம் அல்ல. இது திருவள்ளுவர் வாக்கு.

ஒருவன் கற்கும் கல்வி அவனுக்கு மட்டுமல்ல அவன் வாழும் சமூகத்திற்கும் உதவுகின்றது. கல்வி அறிவுதான், சமுதாயமும் நாடும் வளர்ச்சி அடைய மென்மேலும் உதவுகிறது. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது ஔவையார் வாக்கு.

நாம் கல்வியை நன்கு கற்று நல்ல ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் பின்பற்றி பிறருக்கு கற்று கொடுப்போமேயானால் கல்வி பெருகிக் கொண்டே போகும். அடுத்து வரும் தலைமுறைகளிலும் தமிழ்க்கல்வி அழியாது நிலைத்து நிற்க வேண்டும். இது பெற்றொரின் கடமையாகும். இன்று எமது பிள்ளைகள் O/L, A/L தேர்வுகளில் நல்ல பெறு பேறுகளைப் பெற்று வருகிறார்கள். இது ஆசிரியர்களின் உழைப்பும் பெற்றோரின் ஊக்குவிப்பினாலுமே ஆகும். இது திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் பெருமையும் ஆகும்.

திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி நாற்பது ஆண்டு காலமாக தொடர்ந்து இயங்கி வருவதற்கு நாம் பெருமைப்பட வேண்டும். ஈஸ்ட் ஹாம் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி மென்மேலும் உயர்ந்து இலண்டனில் மட்டுமின்றி, இங்கிலாந்திலும் மிகச் சிறந்த தமிழ்ப்பள்ளியாக மிளிர்ந்து பொன்விழா நூற்றாண்டை கொண்டாடி எமது அடுத்த சந்ததியினருக்கு வழிகாட்டியாக திகழ வேண்டும் என வேண்டுகிறேன்.

கல்வியை நாளும் கற்று வளமுடன் வாழ்வோமாக.

திருமதி விஜயலட்சுமி இரவீந்திரன்
**ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி**

## தெரிந்து கொள்வோமா? -சொற்பிறப்பியல்

| | | | |
|---|---|---|---|
| அரிசி -> Rice | பஞ்சு -> Sponge | பின்னு ->Spin | கலாச்சாரம் ->Culture |
| காசு -> Cash | மெது -> Smooth | பீடு -> Speed | நாவாய் ->Navy |
| பரிசு -> Prize | பேச்சு -> Speech | கஞ்சி -> Congee | வெற்றி ->Victory |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இறைமொழியான தமிழைக் கற்பது

# இறைவனுடன் உறவாடுவதற்கே !

தமிழ் வளர்த்த மூன்று சங்க இலக்கியங்களும் (கி.மு 9600 - கி.பி 200), இவற்றுள் சிறப்பாகத் திருக்குறளும் அன்றிலிருந்து இன்றுவரை, தமிழின் பெருமையை உயர்வு நிலையில் வைத்துள்ளரெனில், அதன் பின்னால் மறைந்திருப்பது, தமிழ் இறைவன் வகுத்த முதல்மொழி என்பதனாலேயாம். ஏனெனில் முதலில் குமரிக்கண்டத்தில் தமிழை வளர்க்க இறைவனே பாண்டிய மன்னனாகப் பிறப்பெடுத்திருந்தான். அதனோடு சிவன்-முருகன் முதலான இறைவடிவங்களையும் ஏற்று கி.மு. 9600-கி.மு 5200 வரை முதல் சங்கத்தினை உருவாக்கித் தமிழ் வளர்த்திருந்தான். பின். கி.மு 5200 - கி.மு 1500 வரை கொற்கையில் இரண்டாம் தமிழ்ச்சங்கத்தினையும், இறுதியாக கி.மு.1500-கி.பி. 200 வரை இன்றைய மதுரையில் மூன்றாம் தமிழ்ச் சங்கத்தினையும் வளர்த்திருந்தான், எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவ்வாறு தென்பாண்டிய மன்னர் வளர்த்திருந்த முதல் தமிழ்ச்சங்கங்களும் கடல்கோளில் கொண்டு போக, வடக்கே புலம் பெயர்ந்திருந்த பாண்டியருக்கு சேர மன்னனும், சோழ மன்னனும் தம் நிலங்களை வழங்கி பாண்டிய அரசினை மீளக் கட்டியெழுப்பியதுடன், அதன்பின் தாமும் இணைந்து மூவேந்தர் அன்னைத் தமிழை வளர்த்து இன்றுவரை எம்கைகளை வந்தடைய வைத்த தமிழ் பாதுகாவலர் ஆவர்.

எனவே தமிழை வளர்த்தெடுக்கும் பொறுப்பினை எம் முன்னோர் எம் கைகளில் தந்துள்ளார்கள் என்பதே உண்மையாகும். மனம் வைத்தால் இடமுண்டு என்பதற்கிணங்க மொழியைக் கற்பதற்குக் நாம் அனைவரும் உறுதி பூணவேண்டும். குழந்தைகள் தாமாகவே கற்றுப் பேசிப்பாடி மகிழ்கையில், 'பெற்றதாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' எனும் அனுபவ மொழி கூறுவது என்னவெனில், தாயிடம் நாம் கற்ற தமிழ்மொழிக்கு வேறெந்தமொழியும் ஈடாகாது என்பதேயாகும்.

இன்றைய உலகில் மூவாராயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகளில் புனித விவிலிய வேதம் மொழிபெயர்க்கப்பட்டதெனில், இது அந்தந்த மக்களின் பிறப்புரிமைகளை கவுரவிப்பதோடு, அவர்கள் பல்லாண்டுகளாக முயன்று உருவாக்கிய மொழிகளையும் அழியவிடாது பேணிப் பாதுகாக்க எடுத்த நல்லெண்ண முயற்சியேயாகும். இதற்காக கிறிஸ்தவ மதகுருமார் அவ்வப் பிரதேச மக்களின் மொழிகளைக் கற்று, இலக்கணம் எழுதியதோடு, பேச்சு மொழியாக இருந்த மொழிகளுக்கு வரிவடிவமும் கொடுத்து வளர்த்து விட்டிருந்தனர். முதலில் இந்த மொழிகளை இவர்களுக்குக் கற்க சைகைமொழியே உதவியிருந்தது எனலாம்.

எனவே தமிழினத்தின் பாரம்பரியங்களைப் பொறுப்பேற்கும் புலம்பெயர் தலைமுறையினருக்கு தமிழ்மொழி, உள்ளங்கை நெல்லிக்கனியாகும். மனம் வைத்துப் பேசப் பாட, எழுத மேடைகளில் உரையாற்ற எல்லா வசதிகளையும், கொண்டிருக்கும் தமிழ் மொழியைக் கொண்டே இறைவனுடனும் இன்னும் பக்தியுணர்வுடன் பேசி மகிழ வேண்டும். வேற்று மொழிகளில் பேசுவதென்பது கடன்பட்டுப் பேசுவதற்கொப்பாகும். இறைவனும் அதனைக் கேட்டு மகிழ மாட்டான்.

என் அனுபவப்படி திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தமிழ் மொழியாற்றல் மிக்கவர்கள். இவர்கள் தமிழ்மொழியைப் பேசி எழுதித்தாம் பெருமையடைவதுபோல், அடுத்த தலைமுறையினருக்கும், தமிழைச் சிறப்பாக எடுத்துச் செல்வர் என்பது மறுக்க முடியாத உண்மை. தமிழுடன் உறவாட இப்பிறவி அரிய சந்தர்ப்பமாகும். தமிழே! உலகெங்கும் உயர உயரப் பறந்து நிலைத்திடுவோம்.

**திருமதி. தனபாக்கியம் குனபாலசிங்கம்**

The First & Best Tamil Silk House in London

6 Kumars Silk House

Quality customer service since 1982

285 – 287A High Street North, Manor Park, London E12 6SL, England
Tel/Fax: 020 8471 5742 | www.6kumarsuk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழரும் தமிழும்



திருமதி.ஜெயராணி மகேந்திரன்

தமிழனுக்கோர் நாடும் இல்லை .ஆனால் தமிழன் இல்லாத நாடும் இல்லை என்பதற்கிணங்க எல்லா நாடுகளிலும் தமிழன் வாழ்கின்றான். தமிழன் இல்லாத துறைகளும் இல்லை.

தமிழர்கள் பல்வேறு காரணங்களினால் தம் சொந்த நாட்டை விட்டு புலம்பெயர்ந்திருந்தனர். முக்கியமாக மேற்படிப்பு, வேலைவாய்ப்பு, திருமணம் போன்ற சொந்த முன்னேற்றத்திற்கும் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் உள்நாட்டு அரசியல், இனமுரண்பாடுகளினாலும் புலம்பெயர்ந்த மக்கள் குழுக்களில் தமிழர்களும் இடப்பெயர்விற்குள்ளாகினர்.

புலம் பெயர்ந்த தமிழர்களில் இலங்கை, இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு வருமுன்னர் தமிழர்கள் தங்களின் நாடு பிடிக்கும் அல்லது அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் மொரிஷியஸ், பிஜித்தீவுகள், இலங்கை, மலேசியா போன்ற பல நாடுகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்கு மேலதிகாரிகளாகவும் (superiors) பணிக்கப்பட்டனர்.

புலம்பெயர்ந்தவர்களில் கல்விக்காகவும்,வேலைவாய்ப்புக்கவும் வந்தவர்களில் பலர் புலம்பெயர் நாடுகளில் தமது தாய்மொழியான தமிழை மறந்து அந்நாட்டு மொழிகளில் ஒன்றிப்போய் அவர்களது இரண்டாவது,மூன்றாவது பரம்பரையில் தமிழ்மொழியை இழந்து போனவர்களும் உண்டு.ஆனால் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர் ஈழக்கொள்கையுடன் தாம் சென்ற இடமெல்லாம் தமிழை வளர்ப்பதிலும்,தமது கலாச்சாரத்தைப் பேணுவதிலும் பல பங்களிப்பை செய்துள்ளனர்.அதனால் இணையவலையில் தமிழ் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழனாக,தமிழுக்காக தமிழால் ஒன்றிணைய தமிழ்ப் பாடசாலைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன.இதனால் புதிதாக புலம்பெயர்ந்த நாடுகளில் பிறந்த தமிழ்ச் சிறுவர்களும் தமிழைக் கற்பதில் தமிழ்ப் பாடசாலைகள் முதுகெலும்பாக உள்ளன

'தமிழுக்கும் அமுதென்று பெயர்- அந்த

தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்'

என்கின்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் சிந்தனை வரிகளை மனதில் வைத்துக் கொண்டவர்களாக புலம்பெயர் நாடுகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழை வளர்க்க அரும்பாடுபடுகின்றனர்.இதனால் எமது அடுத்த சந்ததியினர்க்கு முடிந்தளவிற்கு தமிழை கற்றுக் கொடுக்கக் கூடியதாக உள்ளது.அதே நேரத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்கள்,விளையாட்டுப்போட்டிகள் மூலம் மாணவர்களிடையேயான கலை,விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொண்டுவரவும் உதவுகின்றன.புலம்பெயர்ச் சூழலில் வாழுகின்ற சிறுவர்களுக்கே உரிய பாணியில் ஆசிரியர்கள் கற்பிப்பதும் இங்கு சிறப்பாகக் கூறக்கூடியதாக உள்ளது.எமது கலை,கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும் விளங்கக்கூடியவாறு சிறுவர்களுக்கு போதிக்கப்படுகின்றன.

தமிழர்கள் பிறந்து வளர்ந்த நாட்டை விட்டு பிற நாடொன்றிற்கு புலம்பெயரும் போது அங்கே உள்ள சூழ்நிலைக்கேற்ப அவர்களை மாற்றிக்கொள்ளவேண்டியது கட்டாயமாகின்றது.உண்ணும் உணவிலிருந்து உடுத்தும் உடை வரை பல பழக்க வழக்கங்களை மாற்றினாலே வாழமுடியும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.அதனையும் மீறி புலம்பெயர் நாட்டில் உள்ள கோவில் திருவிழாக்கள்,தமிழர்களின் திருமணவிழாக்கள்,பூப்புனித நீராட்டுவிழாக்கள் என்பன இளைய தலைமுறைக்கு தமிழரின் கலாச்சாரத்தை,பண்பாட்டை அறிமுகப்படுத்துவதுடன் கட்டி எழுப்புவதற்கும் துணைபுரிகின்றன.

புலம்பெயர் தேசங்களிலே தமிழ் மொழி இரண்டாம் மொழியாகவே பாடசாலைப் பிள்ளைகளுக்கு உள்ளது.எனவே குறைந்தளவினரே எழுத வாசிக்க கற்றுக்கொள்கின்றனர்.அத்துடன் தமிழ்மொழி அவர்களின் பெற்றோரின் தாய்மொழியே.பெற்றோருடன் தொடர்ப்பை மேற்கொள்ளவே தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுக்கின்றது.அவர்களது சொந்த நாட்டிற்குத் திரும்பிசென்றால் ஒழிய தமிழ்மொழி அவர்களுக்குத் தேவைப்படபோவதில்லை.அவர்களின் எதிர்காலம் அவரவர் நாட்டு மொழிகளிலேயேதான் கடக்கப்போகின்றது.ஆகவே நாலு,ஐந்து தலைமுறைகளின் பின் தமிழ் இனி மெல்ல சாகும் என்கிற நிலைப்பாட்டில் ஒரு சாராரும்,தமிழ்த் தொலைக்காட்சிகள்,வானொலிகள்,சினிமாக்கள்,அச்சு ஊடகங்களின் ஆதிக்கமும்,தாய் மண்ணின் மீது கொண்டபற்றும்,பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் நிறுவனங்களாலும் தமிழ் என்றும் வாழும் என்கிற நிலைப்பாட்டிலும் கருத்துக்கணிப்புக் கூறுகின்றன.

உலகத் தமிழர்கள் வாழும் ,வாழ்ந்த இடங்களில்:

கென்யா:1850களில் பிரித்தானிய அரசால் பணிக்கமர்த்திய தமிழர்கள்.இவர்களில் தற்போது யாருக்கும் தமிழ் தெரியாது.

தாய்லாந்து:1830இல் இங்கு குடியேறி தற்போது ஆயிரத்திற்கு உட்பட்ட தமிழர்களே வாழ்கின்றனர்.பலருக்குத் தமிழ் தெரியாது.

இந்தோனேசியா:நூறாண்டுகளுக்கு முன் குடியேறி 1946இல் மூவாயிரம் தமிழர்கள் தாயகம் திரும்பினார்கள்.அதன் பின்பு ஜகார்த்தா நகரில் குடியேறிய தமிழர்கள் தங்களின் மொழியை இழந்துவிட்டனர்.

தென் ஆப்பிரிக்கா:குறிப்பிடத் தக்க தமிழர்கள் வாழ்கின்றனர்.ஏராளமான இந்துக் கோயில்கள்,தமிழ் அமைப்புக்கள் உள்ளன.இளைய தலைமுறை தமிழை இழந்துவிட்டாலும் மதச் சடங்குகளும்,கலாச்சார நடவடிக்கைகளும் தமிழைப் பேணி வருகின்றன.

இங்கு இனக்கலப்புத் திருமணங்களால் ஆங்கிலம் வீட்டு மொழியாகியது. இங்குள்ள வெள்ளை இனத்தவர்கள் தமிழர்களைக் கூலிகளென்றும்,தமிழைக் கூலி மொழியென்றும் கூறுவதால் தமிழ் மொழியைப் பேசுவதற்கே வெட்கப்பட்டார்கள்.

கரிபியன் தீவுகள்:புலம்பெயர்ந்த பின்பு முற்றிலும் தாய் மொழியை இழந்தவர்கள்.பல மத விழாக்களை அர்த்தம் புரியாமலேயே கொண்டாடி வருகின்றனர்.பிரஞ்சு,ஆங்கில மொழியிலேயே சிந்திக்கிறர்கள்.கல்விக்காக இந்துத் தமிழர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகிறார்கள்.

கயானா,டிரிநாட்,சூரினாம்,சமைக்கா,பிரிட்டிஷ் கயானா போன்ற நாடுகள் தாய் மொழியை முற்றிலும் இழந்தவர்கள்.

ரியூனியன்:முப்பது சதவீத் தமிழர்கள் வாழ்கின்றனர்.(சனத்தொகை- 1 20 000)புலம்பெயர்ந்தபின் தமிழை இழந்தவர்கள்.மொரிஷியஸ் நாட்டு தமிழில் ஒலி/ஒளி பரப்பாகும் வானொலி,தொலைக்காட்சியை ஆர்வத்துடன் கேட்கவும்,பார்க்கவும் செய்கின்றனர்.மூன்று உயர்நிலைப் பள்ளிகளிலும், ஒரு கல்லூரியிலும் தமிழ் விருப்பப் பாடமாக கற்பிக்கப்படுகின்றன.

சிசெல்ஸ்:தமிழ் பெயர்களைத் திரிபடைந்த தமிழிலில் சூட்டிக்கொள்கின்றனர்.இத் தீவின் சிறுபான்மையினர் இவர்களே.தமிழை முற்றிலும் இழந்துவிட்டவர்கள் கிரியோல் மொழியைப் பேசுகின்றனர்.

மொரிசியஸ்:அடிமைகளாக தமிழர்கள் இங்கு கொண்டுவரப்பட்டார்கள்.தற்போது இரண்டாவது பெரிய சமுதாயமாகத் தமிழர்கள் வாழ்கின்றனர்.புதுச்சேரியிலிருந்தே அதிக தமிழர்கள் வந்தார்கள்.பொருளாதார முன்னேற்றத்திற்காகவும்,கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றியதாலும் இளந்தலைமுறை தமிழைக் கற்க மறுத்தமையினாலும்,பரவி வாழவேண்டிய சந்தர்ப்பத்தாலும் தமிழை கொஞ்சம் கொஞ்சமாக இழந்தார்கள். இங்குதான் உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் நடந்தது குறிப்பிடத்தக்கது.இங்குள்ள நாணயங்களிலும் தமிழ் இடம்பெற்றுள்ளது. தமிழ் வானொலி,தொலைக்காட்சி ஒலி/ஒளிபரப்படுகின்றன.200 தமிழ்ப்பாடசாலைகளும், 200 தமிழ் ஆசிரியர்களும் உள்ளனர்.100 சைவ ஆலயங்கள் உள்ளன.195 ஆரம்பப்பாடசாலைகளிலும் 12 உயர்தரப் பாடசாலைகளிலும் தமிழ் போதிக்கப்படுகின்றன.கட்டாயத் தமிழ்மொழிக் கல்வி கிடையாது.இங்குள்ள மக்கள் தொகை 11லட்சம்.இதில் தமிழர்கள் 75000.

பிஜி:கரும்புச் செய்கைக்காக 1879இல் தமிழ்நாட்டிலிருந்தும் விவசாயிகளாக கொண்டுவரப்பட்டனர். 1984இல் 50,000 தமிழர்கள் இருந்தனர்.இவர்களில் 5,000 பேருக்கு மட்டுமே ஓரளவு தமிழ் எழுதப் படிக்கத் தெரியும்.தாழ்வு மனப்பான்மை,கலப்புத் திருமணங்கள் என்பவற்றினாலும் இந்தியைபரப்புவதில் இந்திய அரசின் தாராள உதவியினாலும் தமிழைப் பரப்புவதில் தமிழக அரசு அக்கறை காட்டாததால் தமிழ் அழிந்து இந்தி தாய்மொழியாக ஏற்கவேண்டிய கட்டாயம் தமிழர்க்கு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூர்:ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ் உள்ளது. அங்கு வாழும் இந்தியர்களில் 65% தமிழர்கள்.தமிழர்களின் ஆர்வம் காரணமாக தமிழ் அங்கு இரண்டாவது மொழியாகியது.மொத்த ஜனத்தொகையில் 48% தமிழர்கள்(45,000).

மலேசியா:இங்கு 90% தமிழர்கள்.தமிழ்ப் பத்திரிகைகள் வெளியாகி தமிழுக்கு தொண்டாற்றுகின்றன.

மலேசியா,சிங்கப்பூர் இரண்டு நாடுகளிலும் தமிழ் வானொலி,தொலைக்காட்சிகள்,கோயில்கள் நிறையவே உண்டு.திரைப்படங்களின் பங்களிப்பும் உண்டு.

அவுஸ்திரேலிய,கனடா,அமெரிக்கா,பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி,டென்மார்க்,நெதர்லாந்து,நோர்வே,சுவீடன்,சுவிற்சலாந்து,போலந்து,இத்தாலி போன்றவற்றில் புலம்பெயர்ப்ந்த தமிழர்களில் 90வீதமானவர்கள் ஈழப்பிரச்சினையாலும் உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் இடம்பெயர்ந்தவர்கள்.குறிப்பாக ஜேர்மனியில் தமிழ் நாட்டவர்கள் 300 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கிறார்கள்.அமெரிக்காவிற்கு கல்விக்காகாவும்,தொழில் நிமித்தமும் செல்கின்ற மோகங்கொண்டவர்களாக தமிழ் நாட்டவர்கள் இருக்கிறார்கள்.

பிரான்ஸிலும் அதிகமாக இந்தியத் தமிழர்கள் வாழ்கின்றனர்.இலங்கைத் தமிழர்களும் 80 கலவரம்,தொடர்ந்த இன வன்முறை,யுத்தம் காரணமாகவும் செறிவாக வாழ்கின்றனர்.தமிழ்ச்சோலை எனும் பெயரில் (ஐம்பதிற்கு மேற்பட்ட தமிழ்ப்பாடசாலைகள் ,மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள்,தனியான பாடத்திட்டம்-வளர்நிலை) தமிழ்ப்பாடசாலைகள் இயங்குன்றன.இங்கு மற்றை ஐரோப்பிய நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு பரீட்சைகளும் நடத்தபடுகின்றன. தமிழ் ஈழ வரலாற்றை,அதன் பண்பாட்டு விழுமியங்களுடன்,மண்பற்றையும் இளந் தலைமுறையினருக்கு ஆரம்ப வகுப்புக்களிருந்தே கற்பிக்கப்படுகின்றன

புலம்பெயர் நாடுகளில் அதிகமான பத்திரிகைகள்,சஞ்சிகைகள்,தொலைக்காட்சிகள்,வானொலிகள் நடத்தப்படுகின்றன.இசைப்போட்டிகள்,நடனப்போட்டிகள்,நாடகப்போட்டிகள்,குறும்படப்போட்டிகள், விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.திரைப்படங்களிலும் அதிக பங்காற்றிவருகின்ற தமிழர்களும் உண்டு.

ஆங்காங்கே தமிழ்,தமிழர் விழாக்களுடன் தமிழியல் சார்ந்த விழாக்களும் நடத்தப்படுகின்றன.

பல எழுத்தாளர்கள்,ஊடகவியலாளர்கள் உருவாகியுள்ளனர்.கவிதை,சிறுகதை,நாவல்,கட்டுரை,பத்தி எழுத்துக்கள் போன்றன நூல்களாகவும் வெளிவந்துள்ளன.இசை விற்பன்னர்களால் வழி நடத்தப்பட்டுவரும் தனியார் அல்லது நிறுவனங்களால் கற்பிக்கப்படுகின்ற CÖ>து தேர்ச்சிபெற்றவர்கள் அல்லது கல்வி நெறியை பூர்த்தி செய்தவர்கள் அரங்கேற்றங்களை நடத்துகின்றனர்.

கூடவே,தற்போது அதீத மோகங் கொள்கின்றவர்களால் ஆங்கிலத்தில் கதைப்பதையே ஆர்வமாகக் கொண்டுள்ளதுடன்,கலப்புத்திருமணங்களிலும் ஆர்வம் கொள்வது தவிர்க்கமுடியாத சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.மேலும், திருமண விழாக்களிலும்,இதர குடும்ப விழாக்களிலும் மற்றவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்வதும் ஒரு வரலாற்றுத்தவறுமாகும்.

மணவிழாக்களில் மணப்பெண்ணே நடனமாடி வருவதும் பலரிடையே மனக் கசப்புகளையும் ஏற்படுத்திவருவதை மறந்துவிட்டகூடாது.

எது எப்படியிருப்பினும் கடைசித் தமிழன் இருக்கும் வரைக்கும் தமிழும் அழியாமல் இருக்கும் என்கிற அறிஞர்களின் நம்பிக்கைகளும் அழிந்துவிடாது. அது நமக்கென்றொரு நாடு அமையும் போது சாத்தியமாகும்.

வாழ்க தமிழ்,வளர்க உலகத்தமிழர் ஒற்றுமை!

திருமதி.ஜெயராணி மகேந்திரன்

ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

## தெரிந்து கொள்வோமா? - தமிழ் எண்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சூ | எ | அ | கூ | ய |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் உவகை பொங்க

திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் நாற்பதாவது ஆண்டுவிழா கொண்டாடப்பட உள்ளது என்பதைக் கேள்வியுற்று எனது மனம் உவகையால் பொங்குவதுடன் பெருமிதம் அடைகிறது. ஏனெனில் முதல் ஆசிரியையாக இருக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியதே அதற்குக் காரணமாகும். இந்தப் பள்ளி ஆரம்பமான கதையை உங்கள் அனைவருடனும் நான் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

1975 ஆம் ஆண்டு நானும் எனது பெற்றோரும் சகோதரர்களும் இலண்டனில் குடியேறினோம். இங்கு ஏற்கனவே எனது தந்தையாரின் நண்பர்களான திரு.வீரசிங்கம், திரு.இராமசாமி, திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.தேவதாஸ் என்போர் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குச் சிறுபிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தாய்மொழியாகிய தமிழைக் கற்பிக்கவேண்டும் என்ற அக்கறையுடனும் இதை எப்படிச் செய்யலாம் என்ற ஆதங்கத்துடனும் இருந்தார்கள். இவ்வேளையில் எனது அண்ணனுடன் வேலை செய்து கொண்டிருந்த திரு.வீரசிங்கம் என்பவர் என் அண்ணனிடம், "உங்கள் தங்கை வீட்டில் இருக்கிறாரே. அவரை எங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிக்கும்படி கேளுங்கள். எங்கள் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்க வழியின்றி இருக்கிறார்களே" என்று தனது ஆதங்கத்தை வெளியிட்டார். எனது அண்ணனும் தந்தையும் அதற்குச் சம்மதித்தனர். அதற்கிணங்க, அப்போது நாங்கள் வசித்துக் கொண்டிருந்த வீட்டில் நான் அவர்களுக்குத் தமிழ் கற்பிக்க ஆரம்பித்தேன். திரு.வீரசிங்கத்தின் பிள்ளைகளான செந்தாமரை, மலர், திரு.இராமசாமியின் மகளான அல்லி, திரு.தேவதாசின் பிள்ளைகளான சேவியர், அனி, திரு.கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளைகளான சுமதி மற்றும் அவரது தம்பி ஆகியோர் என்னிடம் மாணவர்களாக வந்து தமிழ் கற்க ஆரம்பித்தனர். பின்பு 2,3 மாதம் செல்ல பிள்ளைகள் எண்ணிக்கை கூடியதால், ரிறினிற்றி சன சமூக நிலையத்திற்கு (Trinity Community Centre) வகுப்பு இடம் மாறியது. அதன்பின் சில மாதங்களில் இன்று தமிழ்ப்பள்ளி நடைபெறும் பிளாசெட் பெண்கள் பள்ளியில் வகுப்புகள் நடைபெறத் தொடங்கின. 1976 ஆம் ஆண்டு பிற்பகுதியில் எனக்கு திருமணம் நடைபெற இருந்ததால் நான் தமிழ்நாடு செல்ல வேண்டியிருந்தது. அப்போது எனது மாணவர்கள் எனக்கு அன்பளிப்பு தந்து என்னை கவுரவப்படுத்தியதை மறக்க முடியாது. எனக்குப் பின்பு திரு. ரங்கராஜனின் பிள்ளைகளான கீதா, குமுதா என்பவர்கள் தமிழ் கற்பிக்க வந்தார்கள் என்று நினைக்கிறேன்.

நான் தமிழ்ப்பள்ளியை விட்டாலும் எனது பிள்ளைகளான கப்சா பர்வின், அனிசா கதிஜா, சுவேரியா சோபியா ஆகிய நால்வரும் தமிழை நன்கு கற்று G.C.E O/L மற்றும் G.C.E A/S ஆகிய பரீட்சைகளில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றனர். அதுமட்டுமன்றி எனது பேத்தி தாய்பாவும் G.C.E O/L திறமையாக தேர்ச்சி பெற்றுள்ளார். பழைய மாணவர்களின் பிள்ளைகளும் இப்போது தமிழைக் கற்க ஆரம்பித்திருப்பது பெருமகிழ்ச்சிக்குரிய விடயம். இரண்டு தலைமுறை தாண்டி வளரும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி மென்மேலும் வளர்ச்சியடைய எனது மனம் நிறைந்த வாழ்த்துகள்.

இந்தப் பள்ளியை ஆரம்பித்தோர், பின்பு கொண்டு நடத்தியோர் பலர் இன்று இவ்வுலகில் இல்லை. இனி தொடர்ந்து நடத்தும் இளைய தலைமுறையினர் ஆக்கப்பூர்வமான சிந்தனையுடனும், ஊக்கமுடனும் தமிழ்ப்பள்ளி தளர்வின்றி வளர முயற்சிப்பார்களாக.


முயற்சி திருவினையாக்கும்.

திருமதி.நபீசா பானு சபருல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்

# LAKSHMIS JEWELLERS



276, High Street North,
East Ham, London - E12 6SA

Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448

YOUR LOCAL SHOP

# GREEN STOP

GROCERY • VEGETABLES • FRESH FRUITS
DAIRY PRODUCTS • FRESH FISHES

515 Barking Road, East Ham, London E6 2LN | Tel: 0208 472 2448 | www.greenstop.co.uk

STOP GO Convenience Store

# STOP-N-GO

CONVENIENCE STORE

GROCERY - OFF LICENCE - NEWS PAPER
PAY ZONE - FRUITS - VEGETABLES

**EAST HAM:** 402 Barking Road, London E6 2SA | Tel: 0208 471 2954
**GANTS HILL:** 572 Cranbrook Road, Ilford, Essex IG2 6RE | Tel: 0208 554 2470
**TILBURY** (TILBURY WINE): 235 Dock Road, Tilbury, Essex RM18 7BJ | Tel: 0137 585 0219


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOTUS
plan design build ltd

கட்டடக்கலை திட்டங்கள், கட்டட நீட்டிப்புக்களுக்கான ஒழுங்கு விதிகள், வரைபடங்கள், மாடி பரிமாற்றங்கள் மற்றும் புதிய வீடுகளை கட்ட.

வரத்தக மற்றும் குடியிருப்பு அபிவிருத்திகளுக்கு.

தொடர்புகளுக்கு: சுரேஷ்

Architectural Plans and Building Regulations Drawings for Extensions, Loft Conversions, New Build Houses and Commercial Developments

Please Contact: Suresh

T: 0203 095 4799 | M: 07916 314 840 | E: info@lotusplans.co.uk
86-90 Paul Street, London EC2A 4NE

# சிந்து மஹால் உணவகம்

Finest Sri Lankan & South Indian Cuisine

274 Barking Road, East Ham, London E6 3BA

020 8471 6226 / 07931 345 691

SINDU MAHAL RESTAURANT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக அருட்கலையாம் பரதக்கலை



கலைகள் ஒரு சமுதாயத்தின் பண்பாடுகளை எடுத்தியம்பும் கருவிகளாக விளங்குகின்றன. மனிதனின் ஒலி இசையாக பரிணமித்தது போல் அவனது அங்க அசைவுகள் நடனமாக வெளிப்பட்டது.இவை இசை,கூத்து,நாடகம் என வரிசைப்படுத்தப்பட்டு ஒரு வரையறைக்குள் உட்படுத்தப்பட்டு நுண்கலைகளாக மிளிர்கின்றன.எப்படியும் வாழலாம் என்பதல்ல வாழ்க்கை இப்படித்தான் வாழ வேண்டும் என்பது நியதி.அதே போன்று கலைகளும் சில வரண்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு நுண்கலைகளாக ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்ததோடு மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கு மிகவும் அத்தியாவசியமானவைகளாகக் காணப்படுகின்றன.எனினும் காலத்திற்கும் பிரபஞ்சத்தின் பரந்த வெளிக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்துவது நடனமாகும்.

ஆனந்தம் ஆடரங்கம் ஆனந்தம் பாடல்கள்

ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சிகம்

ஆனந்தமாக அகிலசராசரம்

ஆனந்தம் ஆனந்தம் கூத்துகந்தானுக்கே........ (திருமந்திரம்)

என அகிலமெங்கும் ஆனந்தக் கூத்திலே இன்ப நிலை அடைகின்றது.இந்த ஆனந்தமயமான ஆடலிலிருந்தே பரதநாட்டியம் பரிணமிக்கின்றது.

ஒரு இனத்தின் பண்பாட்டின் உரைகல்லாக விளங்கும் நுண்கலைகளில் தெய்வீக நிழலில் ஆடல் வல்லான் நடராஜப்பெருமானால் ஆடப்பட்ட உன்னத கலை பரதக்கலையாகும்.ஆடல்வல்ல சிவபெருமான் மதுரா மாநகரில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்து அருளியதால் நடனக்கலை நடராஜப்பெருமானின் கிருபையாகும்.இறைவன் உலகிலுள்ள ஆத்மாக்களை அவரவர் பரிபக்குவ நிலைக்கேற்ப ஆட்கொள்வதற்காகவே ஆடிக்கொண்டிருக்கிறார். அவராடலால்தான் உலகமே இயங்கிக்கொண்டிருக்கிறது.எமது கற்பனைக்கும் கண்ணுக்கும் அப்பாற்பட்ட அற்புத ஜோதியான சிவனின் நடனம் இப்பிரபஞ்சத்திற்கு ஒழுங்கைக் கொடுக்கிறது. நடராஜர் நடனக்கலையின் தனிப்பெரும் வித்தகர்.நடராஜர் என்று அறியப்படும் சிவனே பரதநாட்டியத்தில் உள்ள 108 கரணங்களின் நுணுக்கங்களைத் தண்டு முனிவருக்கும், பரத முனிவருக்கும் கற்பித்தார் என்று நாட்டிய சாத்திரத்தில் கூறப்படுகிறது.எனவே சமய தத்துவங்களையும் கருத்துக்களையும் புலப்படுத்தி மனித குலத்தை ஆன்மீக நெறியில் செலுத்துவதற்கு கலை வடிவமாக உருவாக்கப்பட்டதே நாட்டியக்கலை என்று கூறுவதில் எதுவித ஐயமுமில்லை. கோயிலிலே குடிகொண்டிருக்கும் பரம்பொருளான இறைவனை

"ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ

ஓடிப்போம் நம் வினைகளே"

என நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆடிப்பாடித் துதித்தார்கள். அதாவது மலர், பழம் நைவேத்தியம் என்பவற்றால் இறைவனைத் துதிப்பதிலும் நிருத்தானந்தம் மூலம் துதிப்பதையே இறைவன் அதிகம் விரும்புகிறான் என விஷ்ணு தர்மேந்திர புராணம் கூறுகிறது.வேதகால வேள்விகளிலும் ஆடலும் பாடலும் இடம்பெற்றிருந்தன. நால் வேதங்களின் சாரமாக ஐந்தாவது வேதமாக அதாவது பொதுமக்களின் வேதமாக நாட்டிய வேதம் காட்டிய சாஸ்திரம் விதந்தோதப்படுகிறது. எங்கும் நிறைந்திருக்கும் நடராஜரின் நர்த்தனத்தின் மூலமாக பஞ்ச பூதங்கள் மட்டுமன்றி பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறுவதாக இந்துமதம் முழுமையாக நம்புகிறது.இறைவன் அங்க அசைவுகளால் அண்ட சராசரங்களையே இயக்குகிறான், ஆள்கிறான் எனின் ஆடற்கலையின் மகத்துவம் விண்ணைத் தொடும் மலையாகி விடுகிறது. ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் சிறப்பானதாகக் கருதப்படும் கலை பரதக்கலை என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகவும் மிளிர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசப்படுத்தும் சிறப்புப் பொருந்தியது.உடலுக்கும் உள்ளத்திற்கும் இன்பத்தைக் கொடுக்கின்றது.பார்ப்பவர்களுக்குக் கூட நற்கீர்த்தி, முதிர்ந்த அனுபவம், சாதுர்யம், அழகு ஆகிய நான்கினையும் அதிகரிக்கின்றது.ஆன்மீகத்தோடு இணைந்து இறையருளை நாடி நிற்பதற்குத் துணை நிற்கின்றது.இது ஒரு பரந்த கலையாகும். ஆழ்கடலில் முத்து எடுப்பது போன்று செயன்முறையினை மட்டுமன்றி; பரதநாட்டிய சாஸ்திரத்தை அழகாகவும் அக்கறையுடனும் கற்பதன் மூலம் மட்டுமே பரதக்கலை பற்றிய ஞானத்தையம் அதன் நுட்பங்களையும் ஒருவர் பெறவும் அறிந்து கொள்ளவும் முடியும். நாட்டியத்தைப் பயில்பவர்கள் பரலோகம் என்கின்ற சொர்க்கத்தை பூலோகத்திலேயே அடைகின்றனர். ஒரு குழந்தையை கையிலெடுத்து கொஞ்சி மகிழ்கின்ற போது ஏற்படுகின்ற பேரானந்தத்தை விட நாட்டியத்தைக் கண்ணுறும் போது அடைகின்ற ஆனந்தம் அதை விட இரு மடங்காகும். அதனாலேயே காரைக்காலம்மையாரிடம் இறைவன் " அம்மையே என்ன வரம் வேண்டும்? " என கேட்ட போது "அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க" என்றார். இறைவன் இசை,நடனம் ஆகியவற்றின் வடிவமாகவும், ஆசானாகவும்,கலைகள் மூலம் எளிதில் அடையக் கூடியவனாகவும் விளங்குகிறான் என்ற கருத்தை மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து அறியலாம்.

இறைவனால் நடனக்கலை படைக்கப்பட்டு, வேதாகம முறைப்படி அமைக்கப்பட்ட கோயில்களை கவின்கலை மையங்களாகக் கொண்டு இந்துமத நிழலிலேயே பன்னெடுங்காலமாக வளர்க்கப்பட்டன.

பாவ உணர்வும் இராக வளமும் தாள லயமும் இணையும் போது உருவாகும் அழகுக் கோலம் கண்ணுக்கு விருந்தாக மனதுக்கு மருந்தாக பக்தியோடு பக்குவமும் பண்பும் கலந்து ஆன்மீக உணர்வுடன் அழகுறு அபிநயங்களால் ஆத்மீக திருப்தியைக் கொடுக்கும் இந்த அழகிய பரதக்கலை ஆண்டவனால் அகிலத்துக்கு அளிக்கப்பட்ட அற்புதமான தெய்வீக அருட்கலையாகும்.

பரதகலாவித்தகர்,நுண்கலைமாணி,நாட்டிய சிரோன்மணி,இளங்கலைச்சுடர்

**திருமதி.தர்ஷிகா பிரதீபன்**

(நடன ஆசிரியர் நிருத்திய ஸ்ருதி நாட்டிய கலாலயம்)

THAYAKAM
RESTAURANT / TAKE-AWAY
Authentic Srilankan & South Indian Cuisine
278 High Street North, Manor Park, London E12 6SA
020 8470 6644

RKS
LUCKY CENTRE
289 High Street North, Manor Park, London E12 6SL | Tel: 020 8586 8530
SARAVANA STORES
304 High Street North, East Ham, London E12 6SL | Tel: 020 8552 9773

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சொல் அறிவோம்

(சொல்லாய்வுச் செம்மல் குடந்தய் வய்.மு.கும்பலிங்கன்)
20/39, பேட்டய் க.வி.வடக்குவீதி, கும்பகோணம், தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு
பேசி எண்.94429 32699.

தமிழில் உள்ள அனைத்துச் சொற்களும் காரண காரிய விளக்கத்தோடு அமைந்தனவாகும். ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்தனவாக விளங்குகின்றன என்பது தெளிவு. அனைத்தும் இடுகுறிப்பெயர்கள் ஆகா. இதுதான் மற்ற மொழிகளின்றும் தமிழுக்கு உள்ள தனிச்சிறப்பு ஆகும். இச்செய்திக் குறிப்புகளை இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் 40ஆம் ஆண்டு நிறைவு விழா மலரில் எழுதுவதற்கு மிகவும் பெருமைப்படுகிறேன்.

இலண்டன் த.மு.க.வின் தொடக்க நாளிலிருந்து, அதனுடன் தொடர்புடைய நான் தமிழ்நாட்டுப் பேராளனாகவும் இருந்து செயல்படுகிறேன் என்பதைப் பெருமையாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதோ என் ஆய்வுச் செய்திக் கருத்துகள்:

### 1) தளிர்

மரக்கிளை வளார்களின் பிதுக்கமாக முளைத்து வெளிப்படுதலின் தழைக்குத் தளிர் எனப் பெயர் வந்தது. மரக்கிளைகள் தம்முள்ளிருந்து **தள்ளப்**படுவதால் இது **தளிர்** எனப்பட்டது.

### 2) திண்ணை

வீட்டு வெளிப்பகுதியில் – வீட்டு முற்றத்தில் அமைந்த மேடை கல்லாலும், மண்ணாலும் செறித்தும், திணித்தும் வலிவாகச் செய்யப்பட்டது திண்ணை ஆகும். **திணித்தலாக திண்ணமாகச்** செய்யப்பட்டதால் அது **திண்ணை** ஆயிற்று.

### 3) திமில்

காளை மாட்டின் கழுத்தின் பின்பக்கம் அமைந்துள்ள மேடு – ஒட்டகத்தின் முதுகின் மேல்பக்கம் அமைந்துள்ள மேடு முதலியவை **திமிர்ந்து** இருத்தலால் அதற்குத் **திமில்** என்று பெயர் வந்தது. திமிர்தல், புடைத்தல், செருக்கு, ஆணவம் என்றும் பொருள் கொள்ளலாம். **திமுதிமு** என்று கூட்டம் கூடி விட்டது என்கிறோம். திமுதிமு என்பதற்கு வளர்தல். பெருகுதல் – பெருக்குதல், முட்டுதல், மோதுதல் எனப் பொருள் கொள்ளலாம். இதுவே திமில் ஆயிற்று.

### 4) தாள்

காலின் அடிப்பகுதி தாள் எனப்பட்டது. நமது உடம்பைத் தள்ளிச் செலுத்துவதால் **தள்** என்னும் சொல்லின் முதல் எழுத்து நீண்டு த–தாள் ஆயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) தாவாங்கட்டை

வாய்ப்பகுதியின் கீழ் அமைந்திருக்கும் பகுதி தாவாங்கட்டை எனப்படும். இதன் செம்மையான உண்மை வடிவம் **தாள் வாய் அம் கட்டை** என்பதே ஆகும். தாள் வாயில் அமைந்த அழகிய கட்டை என்பதே இதன் பொருள். இத்தொடரே நாளடைவில் சிதைந்து தாவாங்கட்டை, தாவாங்கொட்டை என மருவி வழங்கப்படுகிறது.

6) நாயனம்

நாதசுரம் எனச் சொல்லப்படும் பெரும்வங்கியத்தின் பழமையான பெயர் நாயனம் எனப்படும். இதன் உண்மைப் பெயர் நாகசின்னம் என்பதே ஆகும். இதன் முன்பகுதி நாகம் படம் எடுப்பது போல விரிந்தும், பின்பகுதி நாகத்தின் உடல் போல நீண்டும் இருப்பதால் இது **நாகசின்னம்** ஆயிற்று. இதுவே நாளடைவில் **நாயனம்** எனச் சுருங்கியும், மருவியும் வழங்கல் ஆயிற்று. நாகஸ்வரம் என்பதன் திரிபே நாதசுரமும் ஆயிற்று.

7) வார்த்தை

வார்த்தை என்பது வடசொல் ஆகும். இதன் நேரிய தமிழாக்கம் சொல் என்பதாகும். **வாய் + ஆர்த்தல்** = வார்த்தை ஆயிற்று. மேலும் வாயால் வார்க்கப்படுவது **வார்த்தை**யும் ஆயிற்று.

8) விசை

இயந்திரங்களை இயங்கச் செய்யும் கருவியின் ஆற்றலுக்கு விசை எனப் பெயர். விசுத்தல் என்பதற்கு மேலெழும்புதல் என்பது பொருள். இதன் காரணமாகவே மேலுள்ள ஆகாயத்திற்கு **விசும்பு** என்ற பெயர் வந்தது. ஒன்றை விரைவுபடுத்துவது **விசை**யும் ஆயிற்று.

9) விடலை

ஆண்களின் காளைப்பருவத்தை விடலை என்கிறோம். அதாவது இப்பருவம் காம வேட்கை மிகுந்த பருவம் ஆகும். வேட்கை, வேட்டல் என்பதற்கு விருப்பம் என்பது பொருள் ஆகும். **வேட்கையால்** அலைதல் – **வேட்டலால்** அலைதல் **விடலை** ஆயிற்று.

10) விரட்டு

விரைவு படச் செல்லுதலை – செலுத்துதலை விரட்டல் என்கிறோம். இதன் செம்மையான உண்மை வடிவம் விரைவு + ஊட்டு, விரைவு + ஓட்டு என்பனவே ஆகும். இந்த **விரைவு ஓட்டு** என்பதே **விரட்டு** ஆயிற்று இலை எலை ஆனது போல விரட்டு வெரட்டும் ஆயிற்று.

11) வெக்கை

வெப்பம், சூடு என்னும் பொருளில் இச்சொல் வழங்கப்படுகிறது. **வேகை** – **வேதல்** – வெம்புகை என்பதே **வெக்கை** ஆயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 12) வெற்றிலை

பூவாமல் – காய்க்காமல் வெறும் இலையை மட்டும் தருவதால் இது வெறும் இலையாகி – **வெற்று இலையாகி – வெற்றிலையும்** ஆனது. வெற்றியின் – மகிழ்ச்சியின் அடையாளமாக உண்ணப்படுவதால் – அதாவது வாயில் போடப்படுவதால் இது **வெற்றி + இலை = வெற்றிலையும்** ஆயிற்று. மனக்கிளர்ச்சியையும், செயலூக்கத்தையும் தந்து நம்மை ஊக்கப்படுத்தி வெறிகொள்ளச் செய்யும் இலை ஆதலால் **வெறியிலை – வெற்றிலையும்** ஆனது.

### 13) வெட்டவெளி

உள் இடம் என்பதற்கு நேர் எதிர்ச்சொல் வெளி இடம் ஆயிற்று. இந்த வெளி இடமே வெட்டவெளி ஆயிற்று. இதன் செம்மையான வடிவம் **வெற்று வெளி** என்பதே ஆகும். இந்த வெற்று வெளியே **வெட்ட வெளியும்** ஆயிற்று.

### 14) வேலைவெட்டி

வேலைவெட்டி என்னும் சொல் நம்மால் இயல்பாக நடைமுறைப் பேச்சு வழக்கில் சொல்லப்பட்டு வருகிறது. **வேலை** என்பதற்கு முற்காலத்தில் மன்னர்களிடம் வேலை பார்த்தலையும் **(வேல்** கருவிகளைப் பயன்படுத்தும் படைவீரர்கள்) தற்காலத்தில் அரசுப் பணியில் இருத்தலையும் குறிக்கும். **வெட்டி** என்பது அக்காலத்தும், இக்காலத்தும் பொதுப்பட **மண்வெட்டி**யும் கலப்பையும் கொண்டு நிலத்தைப் பதப்படுத்தியும், பண்படுத்தியும் செய்யும் வேளாண்மையைக் குறிக்கும்.

### 15) வேர்

இது மரங்களின் அடிப்பகுதி, மூலப்பகுதி என்னும் பொருள்களைத் தரும். மண்ணின்– தரையின் உட்பகுதியாக ஆழ்ந்தும், பரந்தும் கிளைவிட்டு **விரிந்து** செல்வதால் **விரி–வேர்** ஆயிற்று.

### 16) வேலி

மனிதர்கள் பகைவர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்கும், பகைவர்களைத் தாக்குவதற்கும் பயன்படும் கருவி வேல் ஆயிற்று. **வெல்லும்** திறத்தால் அது **வேல்** ஆயிற்று. அதுபோல நாம் விளைய செய்யும் பயிர்களை ஆடு மாடுகள் போன்ற கால்நடைப் பிராணிகளிடமிருந்து காக்கும் கருவியே –சுற்றுப் பாதுகாப்பே வேலி ஆயிற்று.

மனிதருக்கு **வேல்** – பயிர்களுக்கு **வேலி**

### 17) அடைவு

அடைவு என்பதையே நாம் தவறுதலாக அடகு எனச் சொல்கிறோம். ஒரு பொருளை – ஒரு சாமானை ஒப்பாக – ஈடாக – **அடைவாகக்** கொடுத்து அதற்கு ஏற்ப தொகையைப் (கடனாகப்) பெறுதல் **அடைவு** ஆயிற்று. அடகு என்பது தவறு.

அடகு என்பதற்குக் கீரை என்பது பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 18) அட்டணைக்கால்

ஒரு காலின் மேல் மற்றொரு காலினை மேலிட்டு அமர்வது அட்டணைக்கால் ஆயிற்று. இவ்வாறு அமர்வது எட்டு என்னும் எண்ணை உருவகப்படுத்துகிறது. (அதாவது கால்மடிப்பு) வடமொழியில் அஷ்டம் என்பதற்கு எட்டு என்பது பொருளாகும். இந்த **அஷ்டம்** என்பதே **அட்டம்** ஆகி **அட்டணைக்கால்** ஆயிற்று.

### 19) அடாப்பழி

சரி அற்ற தன்மை, குறைபாட்டுத்தன்மை, குற்றத்தன்மை, கெட்ட தன்மை, அடாப்பழி ஆயிற்று, அடுதல் என்பதற்குச் சரி – பொருந்துதல் – நேர்மை – நியாயம், உண்மை எனப் பல்பொருள் கொள்ளலாம். அடுதல் என்பதற்கு நேரிடையான எதிர்ச்சொல் அடா எனப்படும். அடா என்பதற்கு தவறு என்பது பொருள் ஆகும். எனவே அடாப்பழி என்பது தவற்றின் அடையாளம் ஆயிற்று.

### 20) அம்மி

மிளகாய், தேங்காய், பருப்பு, மல்லி முதலியவற்றை ஒரு நீண்ட செவ்வகக் கல்லில் (கருங்கல்) வைத்து குழவி என்னும் கற்கருவியால் **அம் அம்** என்று அம்மப்படுவதால் அது **அம்மி** ஆயிற்று.

### 21) குழவி

அம்மியில் ஒரு பொருளை வைத்து குழவி என்னும் ஓர் உருட்டுக் கல்லால் (கருங்கல்) மசிய மசிய – பொடியப் பொடிய – சிறுகச் சிறுக – **குழையக் குழைய** செய்யப்படுவதால் இது குழவி ஆயிற்று.

### 22) நாயனார்

**நயத்திற்கு**ரியவர் – அதாவது நம்புதற்கும், விருப்பத்திற்குமுரியவர் நயனார் – **நாயனார்** ஆனார். சிவனை அன்பாலும், அறிவாலும், பணிந்தும் நயந்தும் வணங்கி வழிபட்டதால் அந்த அறுபத்து மூவரும் நயனார் – நாயனார் ஆனார்கள். இந்த நயனே – நாயகனும், நாயகியும் ஆனார்கள். (நயம் – நயத்தல் – நயனார் – நாயனார், நயகி, நாயகி – நயன் – நாயகன்)

### 23) தொப்புள்

வயிற்றின் நடுப்பகுதியில் உள்ள உறுப்பு தொப்புள் எனப்படும். மேலும் வயிற்றின் நடுப்பகுதி **தோல் + பை** = தோற்பை – **தொப்பை** ஆயிற்று. அந்தத் **தொப்பை**யில் நடுவாக **உள்** குழியாக அமைந்திருத்தலால் தொப்பு + உள் **தொப்புள்** ஆயிற்று.

### 24) துயில்

துயில் என்பதற்குத் தூக்கம், உறக்கம் என்பன பொருளாகும். துய் = துய்த்தல் – நுகர்தல் – அனுபவித்தல் என்பன பொருளாகும். இல் என்பதற்கு இல்லை என்பது பொருளாகும். அதாவது உறங்கும் போது கண் பார்க்காது; காது கேட்காது; மூக்கு நுகராது; வாய் பேசாது; மெய் உணராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து உறுப்புகளும் துய்த்தல் இல்லாமல் இருக்கின்றன. ஆம் துய்த்தல் இல்லாத நேரமே துயில் ஆயிற்று. அனுபவித்தல் என்னும் துய்த்தல் இல்லாமல் அனைத்து உறுப்புகளும் அடங்கி இருத்தல் துயில் ஆயிற்று.

### 25) துயரம்


வருத்தம், வாட்டம், சோர்வு, மெலிவு முதலியன துயரத்தின் அடையாளங்கள் ஆகும். **தொய்தல்** என்னும் சொல்லடியாகப் பிறந்ததே துயரம் ஆயிற்று. துய்+அர்+அம்= **துயரம்** ஆயிற்று. துய் = தொய்தல்.

### 26) போடுதல்

போடுதல் என்பதன் பொருள் ஒரு பொருளை மேலிருந்து கீழே விடுதல் என்பதாகும். அதன் உண்மை விரிவுப்பொருள் **புக இடுதல்** ஆகும். புக இடுதலே **போடுதல்** ஆயிற்று.

கும்பகோணம்
15.09.2015

அன்பன்
**வய்.மு.கும்பலிங்கன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பெருமக்களுக்கு !




பூ விதைகளாய்
விதைக்கப்பட்டோம் பள்ளிகளில்
அழகாய் அறிவாய் அன்பாய்...
ஊற்றினார்கள் அறிவு எனும் நீரை
மெல்ல வளர்ந்தோம். இன்று நிமிர்ந்தோம். யாரால்?
எழுத்தறிவித்த இறைவனால்!
கனவுகள் சுமந்து கவலைகள் மறந்து, கல்வி கற்றோம். யாரால்?
அன்னை போன்ற ஆசிரியர்களால்!

பள்ளிக் கூடங்கள் பலருக்கு சுகமாய்! சிலருக்கு சுமையாய்....
ஆனால் மறக்க மறுக்க முடியாத உண்மை நிச்சயம் உண்டு
அனைவரின் உயர்வாழ்விற்கு ஒரு ஆசிரியரின் பங்களிப்பு.
பணிந்தோம் இன்று உயர்ந்தோம்.
அன்று அன்பாய் அரவணைப்பாய் நம்மை உருவாக்கிய ஆசானுக்கு என்றும் தலை பணிகிறோம்.
என் இனிய ஆசிரியர் பெருமக்களுக்கு
நன்றி நன்றி நன்றி
வாழ்க தமிழால்
வளர்க தொண்டால்!

**திரு. இர.அறிவழகன்**
த.மு.க செயலவை உறுப்பினர்

## மாணவர்களும் ஆசிரியர்களே !



**இ**து **பகுத்தறிவு யுகம்**. ஒரு சில நூற்றாண்டுக்கு முன், நாம் கல்வி மறுக்கப்பட்ட சமூகம், தற்போது கல்விப் புரட்சியில் போட்டிப் போட்டுக்கொண்டு முன்னேறுகிறோம். அதிலும் இக்காலம் மாணவர் ஆசிரியர் என்பதற்கு இடைவெளி குறைகிற அறிவுப்புரட்சி யுகம்.
எளிமையாக கூற வேண்டுமானால், **யார் மாணவர்?** என்றால், யாரெல்லாம் அறிவைத் தேடுகிறார்களோ அவர்கள் எல்லோரும் மாணவர்கள். **யார் ஆசிரியர்?** என்றால், யாரெல்லாம் அறிவுத் தேடலுக்கு விடை தருகிறார்களோ அவர்கள் எல்லோரும் ஆசிரியர்கள். சொல்லப்போனால் '**Google**'-ம் ஆசிரியர்தான். ஒரு சுவாரசியமான முரண் என்னவென்றால்; நாம் மாணவர் என்று எண்ணிக் கொண்டிருப்போரும் - ஆசிரியர்தான். அதே வேளையில், நாம் ஆசிரியர் என்று எண்ணிக் கொண்டிருப்போரும் - மாணவர்தான்.
நவீன யுகத்திற்கு ஏற்ற வகையிலான ஆசிரியரின் குண நலன்களாக சிலவற்றை குறிக்கிறார்கள். அவையாவன, 1) அர்ப்பணிப்பு (Commitment) 2) தயாரிப்பு (Preparation) 3) ஒழுங்கு (Organisation) 4) பொறுமை (Tolerance) 5) கதை சொல்லும் முறை (Story Telling) 6) கேள்விகளை எதிர் கொள்ளுதல் (Open For Questions) 7) புதுமை (Innovative) 8) தொழில் நுட்ப அறிவு (Technologist) 9) சமூக வலைத்தளம் (Social) 10) கற்றலில் ஆர்வம் (Geek).

எவ்வளவு சுவாரசியமான தகவல் !

**ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து,** ஆசிரியர், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழியும் எதிர்காலமும்



தித்திக்கத் தித்திக்க திருவாசகத் தந்தை தமிழைத் தீந்தமிழ் என்றார்.
எத்திக்கும் இசை நிறைந்திருந்த பாரதி
"தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார்.
செம்மொழிகளில் ஒன்றான எம் தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமை கொண்டது.
பண்டைய தமிழை அறியத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் உதவுகின்றன.
இடைக்காலத் தமிழை அறிய தேவாரம், திவ்வியப்பிரபந்தம், சிந்தாமணி போன்ற இலக்கியங்கள் உதவுகின்றன. தற்காலத் தமிழ் நிலையை அறிய நன்னூலுக்குப் பிற்பட்ட இலக்கியங்கள், மற்றும் பேச்சு வழக்குத் தமிழ் என்பன உதவுகின்றன. எம் தமிழர்கள் இன்று உலகெங்கும் பரவி வாழ்கின்றார்கள்.

“உலகம் முழுதும் சென்றான் தொழில் நடத்த – தமிழன்
உள்ளமும் சென்றதம்மா தமிழ் நடத்த
கலையில் சிறந்த இசைக்கலை நடத்த – நானும்
கடலைக் கடந்து வந்தேன் தமிழ் வளர்க்க”

என்ற கண்ணதாசன் பாடல் நினைவுக்கு வருகிறது. அவ்வாறே நாமும் இன்று நம் பிறந்த நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்து வாழ்கின்றோம். எங்கு வாழ்ந்தாலும் வாழ்கின்ற மண்ணின் சுகத்தில் தாய் மண்ணையும், தாய் மொழியையும், எம் கலை, கலாச்சாரப் பண்பாடுகளையும் மறந்து விடக் கூடாது. இந்த வகையில் எம் அடையாளங்களை எம் சிறார்கள் மறவாதிருக்க புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ்ப்பாடசாலைகள் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன.

வெறும் சான்றிதழ்களுக்காகவோ பொழுது போக்குகளுக்காகவோ மாணவர்கள் தமிழ் கற்க வராமல் அவர்கள் தம்மை உணர்ந்து மொழியை உணர்ந்து, தமது சந்ததியினரை உணர்ந்து கற்கக் கூடிய வகையில் அக்குழந்தைகளின் மனதில் அம்மொழியைப் பதிப்பது, ஒவ்வொரு தமிழ்ப்பாடசாலையில் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரின் கடமையாகும்.

எமது தாய்மொழியை எமது எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்கும் பொறுப்பு, ஆசிரியரின் கையில்தான் உள்ளது. அந்தக் கடமையைத்தான் பிழையறச் செய்தேன் என்ற மனப்பான்மை ஒவ்வொரு ஆசிரியரிடம் இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியிலும், எதிர்காலத்திலும் பெற்றோர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, அதேயளவு அக்கறை அவர்களது தாய்மொழி வளர்ச்சியிலும் பெற்றோர்களுக்கு இருக்க வேண்டும். அதே வேளையில் ஒரு குழந்தை தன் அடி என்ன, ஆணிவேர் எங்கே என்று அறிந்து வளர பெற்றோர்கள் காரணிகளாக இருக்க வேண்டும்.

அந்நிய மண்ணில் வாழும் தமிழர்களாகிய நாங்கள் நாம் வசிக்கும் இடமெல்லாம் எம்மால் இயன்றளவு எம்மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

வசதிகள் வாய்ப்புகள் கூடுதலாக இருந்த போதும் வாழ்மண் நமக்கு வீடல்ல – விடுதியடா தமிழா.

40 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தமிழர் முன்னேற்றக் கழகத்தினர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர எங்கள் வாழ்த்துகள்.

**திருமதி.க.பூரணம்பிள்ளை.**
ஆசிரியை, திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி



இது
நாற்பது ஆண்டுகளுக்கு முன் இயற்கை நியதியை மீறி
மேற்கில் உதித்து இன்று
மாணவக் கோள்கள் சுற்றும் இரவுச் சூரியன்!

இது
காசுக்காக தாயகத்தமிழகத்தில் கல்வி விற்கப்படும்போது
காசு சேகரிக்க வந்த கவலைத் தமிழர்கள்
கண்ட கல்விக் கோள் !

இது
தன்னகத்தே பொருள் இல்லாவிடினும்
பொதுமக்களிடம் புரந்து
பொருள் கொண்டு ஒளிரும் சந்திரன் !

இது
ஐரோப்பிய வெண்மேகங்களுக்கிடையே
தமிழ் ஏக்கங்களைத் தீர்க்க முளைத்த
கருப்பு விடிவெள்ளி !

இது
நேற்றைய இன்றைய மற்றும் நாளைய
எம்மக்களின், மாணாக்கரின்
நம்பிக்கை நட்சத்திரம் !

அகிலம் உள்ளவரை அண்டவெளி
அங்கம் இருக்கும்
எம் கழகத்தினர் தொண்டும் இருக்கும்!

விடுவோம் அச்சம்! இன்னும் தொடுவோம் உச்சம் !
வளர்க திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி......

**திரு. ப. கோவிந்தராஜன்**
த.மு.க.செயலவை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வீட்டில் தமிழ்பேசி மகிழா விட்டால்
தமிழ்கூறும் நல்லுலகில் சிறப்பா கிட்டும்!

தமிழர் முன்னேற்றக் கழகம்
இலண்டன்
Est. 1975
40ஆம் ஆண்டு
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி

திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறுகிறது

Thiruvalluvar Tamil School runs every Saturday from 10am to 1pm

இடம்:

திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி – Thiruvalluvar Tamil School

Plashet Girls School (South),
Plashet Grove,
East Ham, E6 1DG

தொடர்புக்கு:

த.மு.க இல்லம் - TMK House

46A East Avenue,
Manor Park,
London E12 6SQ

**Web:** www.tmklondon.com
**Email:** tmktamilschool@gmail.com
**Mobile:** 07984464753, 07931463952, 07738529167

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SURIYA JEWELS
# சூரியா ஜுவல்ஸ்



"உண்மை வெல்லும்"

JEWELS LTD
22CT SINGAPORE GOLD

Tel: 020 8552 2224 | Fax: 020 8821 9435

292 High Street North, East Ham, London E12 6SA



# S.S. LAKSHMI ENTERPRISES

Tamil DVD's CD's, Pooja Items, Fancy Items and Fresh Jasmin Flower

241C High Street North, Manor Park, East Ham, London E12 6SJ (Near Mahalakshmi Temple)
**(Near NEW Mahalakshmi Temple)**

Phone: 02085035599 Mobile: 07448027544

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# elitevision
**OPTOMETRIST OPTICIAN**

தமிழில் உரையாடி உங்கள் கண் பரிசோதனைக்கு நாடுங்கள்




**OUR VISION IS TO HELP YOURS**


## OUR BRANCHES:

230 HIGH STREET NORTH, MANOR PARK, LONDON, E12 6SB — 020 8471 2277

221 HIGH ROAD, ILFORD, ESSEX, IG1 1LX — 020 8911 8885

68 HIGH STREET, BARKINGSIDE, ESSEX, IG6 2DJ — 020 8550 1117

www.elitevision.co.uk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. SATHA & Co SOLICITORS

Est. 1997

*www.satha.co.uk*




*We are authorised by the legal service Commission to undertake Criminal Defence Services*




- **Criminal Litigation**
- **24 hrs Police Station Assistance**
- **Asylum and Immigration Law**
- **Employment Law**
- **And other areas……**

**IN AN EMERGENCY 24 Hrs: 079 5628 8671**

THIS FIRM ALSO UNDERTAKES PRIVATELY FUNDED WORK

**Commercial & Residental Conveyancing**

**Civil Litigation | Landlord & Tenant**

**Wills & Probate | Family Law**

LAW

**S. Satha & Co. Solicitors**

378 High Street North , Manor Park, London E12 6PH

**Tel** 020 8471 9484 **Fax** 020 8471 9485 **DX** 133012 UPTON PARK 2

**Email** info@satha.co.uk

**www.satha.co.uk**

THE LAW SOCIETY ACCREDITED Criminal Litigation

THE LAW SOCIETY ACCREDITED Conveyancing Quality

Lexcel Practice Management Standard Law Society Accredited

Community Legal Service

Criminal Defence Service


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் வகுப்பு



CLASS 1A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் வகுப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CLASS 1B

# இரண்டாம் வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CLASS 2

# மூன்றாம் வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CLASS 3

# நான்காம் வகுப்பு



CLASS 4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் வகுப்பு



CLASS 5

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆறாம் வகுப்பு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

CLASS 6

# ஏழாம் வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GCE O-LEVEL CLASS



A-LEVEL CLASS - உயர்தர வகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AJS
TRAVEL & TOURS

# AJS TRAVEL & TOURS LTD

46A EAST AVENUE, MANOR PARK, LONDON E12 6RE
Tel: **0208 470 1400 / 0203 006 2210**
Fax: **0208 470 4803**

Web: www.ajs-travels.co.uk | Email: info@ajs-travels.co.uk
Offices: LONDON | KUMBAKONAM | NEW DELHI

**SPECIALISTS IN INTERNATIONAL FLIGHTS**

Established Since 2000

OCI / PIO TOURIST VISA

**WE ARE AUTHORISED VISA AGENTS**

IATA PATA Pacific Asia Travel Association ATOL PROTECTED First Flight First Flight Couriers (Europe) Ltd. BRITISH AIRWAYS SriLankan Emirates طيران الخليج Gulf Air

# SAKTHI CASH & CARRY

**Specialist in Indian & SriLankan Groceries**

**245-247 High Street North**
**Manor Park**
**London**
**E12 6SJ**

**Email: info@sakthi.co.uk | Tel: 020 8471 4713 | Web: www.sakthi.co.uk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
# பகவன் முதற்றே உலகு"



திருவள்ளுவர் என்று தொடங்கி, ஈரடி குறளில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும், திருக்குறள் என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர், திருவள்ளுவர். உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளைப் படைத்து, உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெற செய்தவர்.

இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் இக்கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாகக் காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால்தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.கல்வி கற்றவரிடம் ஒழுக்கம் பண்பு நேர்மை நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. எந்தவொரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக்காலத்தைப் பொறுத்தவரை மிகவும் தாழ் வாகவும் இழிவாகவும் கருதப்படும்.இதை என் தாய் தந்தையர், நீ ஒரு தமிழன், நீ கற்ற கல்வியை, மற்றவர்க்கும் கற்றுக்கொடு, நீ ஒரு வழிகாட்டியாகவும், உதாரணமாகவும் இருக்கவேண்டும். உண்மையை மற்றும் பேசு, உன்னால் முடியும் வரை நல்லது செய், மற்றவர்க்கு தீங்கு நினைக்காதே, உதவி செய், நமக்கென்று ஒரு கொள்கையோடு வாழவேண்டும்.தமிழன் சாதிக்கமட்டும் பிறந்தவனல்ல சரித்திரம் படைக்க பிறந்தவன். இந்த குறிக்கோளை வைத்துத்தான் கடந்த 10 வருடங்களாக தமிழர் முன்னேற்றக் கழகத்தில் செயலவை உறுப்பினராக பணிபுரிந்து வருகின்றேன்.

தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ் பள்ளி, 1975 ஆம் ஆண்டு தொடங்கி, இந்நாள் வரை செயல் பட்டு வருகின்றன. 2015ல் 40- ஆவது பிறந்தநாள் கொண்டாடுகிறோம், 40 ஆண்டுகளில் தமிழை இளைஞர்களுக்கு வள்ளுவரின் தத்துவங்களை வைத்து பாடங்களை சொல்லி கொடுக்கின்றனர், அதைப் போல தம் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது நமக்கும் அளவுகடந்த பற்றுவரவேண்டும் என்ற நல்நோக்கத்துடன் செயலாற்றி வருகின்றனர்.

இது நான் இங்கிலாந்து நாட்டில் பிறந்து, ஆங்கிலம் பேசினாலும், நான் ஒரு தமிழன் தான். எனக்கு என் தாய் மொழியான தமிழை கற்று கொடுத்த எந்தன் தாய், தந்தை, மற்றும் திருவள்ளுவர் தமிழ் பள்ளியின் ஆசிரியரியப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கோள்கிறேன், இவற்றின் பணிகள் தொடர்ந்து இன்னும் பல்லாண்டு நடைபெறவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.நன்றி வணக்கம்.

**செல்வன் நாகதேவன்**
த.மு.க செயலவை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தமிழ்ப்பள்ளி!



பிரித்தானியாவின் பழைமை மிக்க தமிழ்ப்பள்ளியில் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் ஒன்று. என் அம்மா அறிமுகப்படுத்திய தமிழ் மொழி அறிவுடன் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளிக்குள் சிறுமியாக அடியெடுத்து வைத்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். பேச்சுப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, எழுத்துப் பரீட்சை, இப்படிப் பல போட்டிகள். பாலர் வகுப்பில் இருந்து, அடிப்படையில் இருந்து உயர்நிலை வரை தமிழ் பயின்று இவ்விரு பிரிவிலும் திறமைச் சித்தி பெற்றேன். தற்பொழுது ஒவ்வொரு வகுப்பிலும் சிறந்த மாணவருக்கான பரிசு கொடுக்கப்படுவதைப் போல முன்னர் பாடசாலையின் சிறந்த ஒரு மாணவருக்கு மாத்திரமே பரிசு கொடுக்கும் முறை நடைமுறையில் இருந்தது. சிறந்த மாணவிக்கான பரிசையும் நான் என் இறுதி வருடத்தில் பெற்றுக் கொண்டேன். கிழக்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலைகளுக்கு இடையில் நடந்த வலைப்பந்தாட்டப் போட்டியில் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி மாணவிகளின் குழு வெற்றி பெற்றது. அந்தக் குழுவில் நானும் விளையாடியதை நினைக்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

என் தாய்மொழி வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய ஆசிரியப் பெருமக்களையும் நான் மறக்க முடியாது. என் பாலர் வகுப்பு ஆசிரியை திருமதி சிவானந்தன், தொடர்ந்து திருமதி ராஜேந்திரா, திருமதி.செல்வராஜா, திருமதி மனோகரன் (இன்றைய தலைமை ஆசிரியை) ஆகியோரையும் அன்புடன் நினைக்கிறேன். பள்ளியின் முந்தைய தலைமை ஆசிரியர் திரு.யோகராஜா அவர்கள் பள்ளியின் வளார்ச்சிக்கும் என் போன்ற மாணவர்களின் தாய்மொழி வளர்ச்சிக்கும் ஆற்றிய சிறப்பான பங்கினை மறக்க முடியாது. இப்பள்ளியில் பயின்ற என்னைப்போன்ற எத்தனையோ தமிழ் மாணவர்கள் பிரித்தானியாவின் பல துறைகளிலும் பணியாற்றுகின்றனர்.

படிப்பினை முடித்து மருத்துவ பணி புரியும் எனக்கு, நான் கற்ற தமிழ்மொழி என் பணிக்கு உதவுவதில் நான் பெருமை கொள்கிறேன். ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம், இப்பள்ளியில் உதவியாளராகப் பணி புரிந்து நான் கற்ற மொழிக்கும், படித்த பள்ளிக்கும் என கடமையினை செய்து வருகிறேன்.

நான் படித்த பள்ளி நாற்பதாவது வருடத்தினை எட்டியுள்ள இத்தருணத்தில், வாழ்த்துக் கூறும் வயது எனக்கு இல்லாத போதும் இப்பள்ளியின் ஆசிரியப் பெருமக்கள் மாணவர்களோடு சேர்ந்து நானும் மனதார மகிழ்ச்சி அடைகின்றேன். இப்பள்ளியை வழி நடத்தும் தமிழர் முன்னேற்றக் கழகப் பெரியோரின் அரிய சேவை மீண்டும் பல்லாண்டு தொடர பிரார்த்திக்கிறேன்.

**Dr.சங்கீதா சந்திரகோபால்**

திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி

முன்னாள் மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையும் எனது அனுபவமும்

தமிழ் மண்ணில் பிறக்காவிட்டாலும் தமிழை கற்றுக்கொள்கின்ற வாய்ப்பு திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையினூடாக கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இப்பாடசாலையில் நான் தமிழை மட்டும் கற்கவில்லை, வாழ்க்கைக்கு தேவையான பல முக்கியமான பாடங்களையும் , அனுபவங்களையும் கற்றுக்கொண்டேன்.

தமிழை நன்றாக எழுத, பேச அறிந்ததுடன், தமிழ் இலக்கியங்களையும், எமது கலாச்சாரத்தையும் புரிந்து கொண்டேன். இது எனக்கு மிகவும் உபயோகமாக உள்ளது. ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்தர கல்வி வரை பயின்று முன்னேறி இருப்பதற்குக் காரணம் எனது கடின உழைப்பு மாத்திரமல்ல, எனது ஆசிரியர்களின் அளப்பரிய சேவையும் உதவியும்தான்.

ஆரம்ப வகுப்பிலிருந்து தமிழ் எழுத்துக்களை ஒழுங்காக கற்றுக் கொண்டேன். அதில் எனக்கு எந்தவித சிரமமும் இருக்கவில்லை - மாறாக மனதுக்கு இன்பமாகவே இருந்தது. திருக்குறள் போட்டி, பேச்சுப்போட்டி, ஆண்டுவிழா நிகழ்ச்சிகளிலும் பங்குபெறுவேன். குறிப்பாக திருக்குறளை மனனம் செய்யும்போது, சிறிது சிரமம் இருந்தாலும் அதை மனனம் செய்தவுடன் கிடைக்கும் திருப்திக்கும்,ஆனந்தத்திற்கும் எல்லை இல்லை. மீண்டும் மீண்டும் சில குறள்களை சொல்லிப் பார்ப்பேன். அதன் அர்த்தத்தையும் படித்து அறிந்து கொள்வேன். சில நேரம் இரண்டு வரியில் இத்தனை அர்த்தமா என்று வியந்ததுகூட உண்டு.

திருவள்ளுவர் பாடசாலைக்குச் சென்று தமிழைக் கற்றுக் கொண்டது, நிகழ்ச்சிகளில் பங்குபற்றியது அனைத்துமே ஓர் இனிமையான அனுபவம்தான். இந்த சந்தர்ப்பத்தில் என்னை வளர்த்தெடுத்த திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலைக்கும் எனது அன்பான ஆசிரியர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**விவேகா அன்பு சாள்ஸ்**
முன்னாள் மாணவி

# How attending Tamil School has helped me?

English is a language spoken by many across the globe; some say it is a language that unites us all together. However, having left school to attend university, I have realised that being able to speak just the one language fluently is no longer enough. Living in the UK means that we will only ever have to speak English when we are out with our friends or whilst we are studying. But when do we have the opportunity to speak a different language? Fortunately for me (and many others), English isn't the mother tongue of my parents, providing me with the platform to utilise what I have learnt during my time in Tamil school to communicate with not just my parents, but my extended family too. Not only has learning how to speak the language proven to be useful, but being able to read and write to a certain extent has shown its benefits. After working in Jaffna Hospital during a holiday vacation to Sri Lanka, I appreciated the fact that communicating with hospital staff and patients (which would have been a barrier beforehand) was no longer an issue for me.

Not only was Tamil School a classroom for us to learn the language and complete our homework- it provided us with the opportunity to explore the different festivals we celebrated and the reason for it. Thai Pongal hosted during the January period was always an exciting time, mostly for the various dance routines the students got to learn and perform to their parents. Some would say that it were these performances that led to them becoming interested in various talents and continuing to pursue them in university, myself included.

Going to Thiruvalluvar Tamil School has many advantages- it allowed us students to explore cultural diversity amongst the Tamil community. It helped us learn to read, write, speak and understand an ancient language accompanied with its complex alphabet. It helped us learn lessons through ancient scriptures such as Thirukkural, which we have been able to apply on a day-to-day basis. It helped us meet people, which we wouldn't have met otherwise. It helped us unite as a community.

**Archana Sasitharan,** Medical Student, UCL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



During my 8 years at Thiruvalluvar Tamil School. I have been able to pursue a skill in speaking, reading and understanding my mother native language which has brought benefits to me in many different paths.

I found that the most effective way of learning about the language was through the yearly speech and poetry competitions. Starting with simple alphabetic poems and making my way up to the paged essays based on influential figures in the Tamil ancestry, I was able to pick up on words which I had never come across before, learn the definition of them, and use them in personal contexts. As well as this, I was able to learn facts I hadn't known of before, and this was key in understanding where the Tamil language had developed from. It is always good to have an idea as to how a language derived and its roots. Although it took days of having my mother lure me into singing poems and embarrassing myself with dramatic expressions in the speeches, the feel of achievement after standing in front of an audience filled with teachers, parents and students and reciting texts in a language second to my first, from heart, was definitely worth it.

Academics aside, it was the annual school shows which enabled me as a student to learn more about the Tamil culture and language through entertainment provided by myself and other students at Thiruvalluvar Tamil School. Be it through dances, dramas or songs, we as pupils were able to not only present our talents in the performing arts to each other, but also understand the meanings and values behind the Tamil background. It was also very fun getting to know the other students at the school and dolling up for the night!

